நாட
82

# ச ங் கி லி

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர்
க. கணபதிப்பிள்ளை

பேராதனை, 1956.

031:248
J6

# சங்கிலி

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர்
க. கணபதிப்பிள்ளை

பேராதனை, 1956.

முதற் பதிப்பு: மார்கழி, 1956.

விலை ரூபா. 3-00

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

கொழும்பு.

சுதந்திரன் அச்சகம், கொழும்பு.

# முன்னுரை

சங்கிலி என்னும் பெயருடன் யாழ்ப்பாணத்தை அரசாண்ட மன்னர் இருவராவர். அவருள் செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயருடன் நாட்டை ஆண்ட முதற் சங்கிலி கி. பி. 1519 முதல் கி. பி. 1565 வரை ஆட்சி புரிந்தான். சங்கிலி குமாரன் என அழைக்கப்பட்ட இரண்டாம் சங்கிலி கி. பி. 1616—1619 வரை ஆண்டான். இவனே யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ்மன்னன். இவ்விருவருள் முதற் சங்கிலியே இந்நாடகத்தின் தலைவனுவான். மயில்வாகனப் புலவர் தாம் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையில் இவன் வரலாற்றை இரண்டாம் சங்கிலியின் வரலாற்ருேடு மயங்கவைத்து இவன் போர்த்துக்கேயர் கையில் கொலையுண்டதாகக் கூறுவர்.

இந்நாடகம் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவில் சங்கத்து ஆடவரும் அரிவையரும் அரங்கில் ஆடியது.

நிற்க, ஈழநாட்டின் வடபாகத்திலிருந்து செங்கோலோச்சிய அரசரின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றது இந்நூலின் முற்பகுதியில் வரும் இலங்கை வாழ் தமிழர் வரலாறு. ஈழத்துத் தமிழ் மக்கள் வரலாற்றைப் பற்றிய விரிவான நூல் ஒன்று மிக விரைவில் வெளிவரும்.

இந்நூலை ஆக்குங்கால் உடனிருந்துதவிய நண்பர்க்கும் ஆயோலை தூக்கி ஆராய்ந்த அன்பர்க்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். நூலினை நல்ல முறையில் அச்சிட்டுதவிய சுதந்திரன் அச்சகத்தார்க்கும் எம் நன்றி உரியது. குற்றம் களைந்து குணங்கொண்டு எம்மை ஊக்குவிக்குமாறு பெரியோரை வேண்டுகின்றோம்.

**க. கணபதிப்பிள்ளை**

பல்கலைக்கழகம்,
பேராதனை.
1—12—1956.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | III-IV |
| இலங்கைவாழ் தமிழர் வரலாறு | VII-XXXXIII |
| சரித்திர காலத்திற்கு முந்திய யாழ்ப்பாணம் | VII |
| உக்கிரசிங்கன் தொடக்கம் பாணன் வரை | XI |
| பாணன் தொடக்கம் ஆரியச்சக்கரவர்த்தி வரை | XVI |
| ஆரியச்சக்கரவர்த்திகள் - முதலாம் பரம்பரை | XXIV |
| பிற்கால யாழ்ப்பாணத்தரசர் | XXXIV |
| விடுதலைப்போராட்டம் | XXXX |
| Bibliography | XXXXII |
| சங்கிலி | 1—95 |

முத்தமிழ்க் குரவர்
உயர்திரு

**விபுலானந்த அடிகளின்**

அன்பார்ந்த நினைவுக்கு

இலங்கை வாழ்

# தமிழர் வரலாறு

# சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணம்

இராமாயணத்தினின்று இலங்கை இராவணனுல் ஆளப்பட்டு வந்த நாடு என அறிகின்ரேம். இராவணன் அசுரவமிசத்தைச் சேர்ந்தவன். ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது தாசர் என்னுஞ் சாதியாரோடு போராடினர் என இருக்கு வேதம் முதலியவற்ருல் அறிகின்ரேம். அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த நாகசாதியினரையே ஆரியர், ''அசுரர்'' என்றும் 'தாசர்' என்றும் அழைத்தனர் என்பது அறிஞர் கருத்து1. நாகர் என்னும் பெயர் வேதங்களில் வழங்கப் படவில்லை. எனினும், இருக்கு வேதத்தில் அசுரர் அல்லது தாசரைப்பற்றிப் பேசுமிடத்து, 'அஹி' (பாம்பு) என்ற சொல் வருகின்றது2.

''விருத்திரனை இந்திரன் வச்சிராயுதத்திஞல் அடித்தபோது, வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் போல் அஹி என்பான் வீழ்ந்து கிடந்தான் 3''.

இதினின்றும், பிறசான்றுகளினின்றும், நாகரை அசுரரென அழைத்தல் வழக்கமாய் இருந்ததெனத் தெரிகின்றது.

அடுத்து, புராண காலத்தில் நாக அரசர்கள் கடலுக்குக் கீழேயுள்ள பாதாளத்திலிருந்து அரசாண்டனர் எனப்புராணங்கள் கூறும். இக்குவாகுவின் மகனை அரியாசவன் என்பான் மகள் யாதுவை, தூயவர்மன் எனும் நாக அரசன் கடலுக்குக் கீழேயுள்ள நாட்டிற்குக் கொண்டு சென்ருன் எனவும், அந்நாட்டின் பெயர் ''இரத்

---

1. C. V. Vaidya; Medieval India, Vol I. p. 82.
2. Bothlingk and Roth : Sanskrit Worterbuch· See Ahi
3. Rig Veda, I. 32: 5, 8.

தினத்துவீபம்'' எனவும், அந்நாட்டிலுள்ளோர் நாவாய் பல வைத்திருந்தனர் எனவும், அவர் கடல் வணிகஞ் செய்தனர் எனவும், முத்துக் குளித்தனர் எனவும் அரிவமிசம் என்னும் புராண நூல் நவிலும் 4.

அசுரர் என்பார் திராவிடரென ஆராய்ச்சி யாளர் முடிபுக்கு வந்திருக்கின்றனர் 5.

கௌதமபுத்தர் மூன்று முறை இலங்கைக்கு வந்ததாக மகாவமிசம் கூறும். முதன் முறை மகியங்கனை என்னும் இடத்திற்கும், இரண்டாம் முறை நாகதீபத்துக்கும், மூன்றும் முறை கலியாணி என்ற பெயருடைய களனி என்னும் இடத்துக்கும் வந்தார் எனவும், நாகதீபத்திலும் கலியாணியிலும் நாகர் வசித்தனர் எனவும், நாக தீபத்திலுள்ள அரசகுடும்பத்தில் அரசுகட்டில் ஒன்றன் பொருட்டாக ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்ப்பதற்காக வந்தார் எனவும் அந்நூல் நவிலும். மேலும் நாகதீபத்தில் உள்ள அரச குடும்பத்தின் உறவினர் கலியாணியில் இருந்தனரெனவும் அப்பாளி நூல் கூறும்6.

இதனின்றும், இலங்கையின் ஒரு பெரும் பிரிவில், பண்டைக்காலத்தில் நாகர் குடி பரவியிருந்ததெனத் தெரிகின்றது. இக்கருத்தினை, கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றுண்டளவில் எழுந்த மணிமேகலையும் வலியுறுத்தும். வட இலங்கையிலுள்ள நாகர் குடியிருப்பிற்குப் பண்டைய நாட்களில் தலைநகராய் இருந்தது கந்தரோடை என்னும் நகர் என ஆராய்ச்சியாளர் கருதுவர். மேலும் இந்தியாவிலிருந்து சங்கமித்தை

---

4. விஷ்ணுபுராணத்தில் பாதாளத்தைப் பற்றி நாரதமுனிவர் கூறும் பகுதிகளை நோக்குக.
J. Vogel: Indian Serpent Lore, Introduction, p. 31.
Harivamsa I: 399 - 401.
5. C. F. Oldham: The Sun and The Serpeut.
6. Mv. Ch. I.

புத்தகாயாவிலிருந்த புனித வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டு வந்தபோது இலங்கையின் வடபகுதியிலுள்ள சம்புகோளம் என்னுந் துறையில் வந்திறங்கினள் என மகா வமிசம் கூறும் 7.

பண்டைக்காலத்தில் வடஇலங்கை கிரேக்க உரோமர்களோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்த உண்மை அங்கு கண்டெடுத்த கிரேக்க - உரோம நாணயங்களினுல் தெரிகின்றது 8.

நாகதீபமெனும் பகுதி எங்குள்ளதெனச் சரித்திர ஆராய்ச்சியாளர் தடுமாறியிருக்கையில் வல்லிபுரக்கோயிலிலே செப்பேட்டுச்சாசனம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதின்படி வட இலங்கையையே பண்டைக் காலத்தில் நாகதீபமெனக் 9 குறித்தனர் எனத்தெரிந்தது. விசயன் பிறப்பதற்கு முன்னரேயே நாகதீபம் (வடஇலங்கை) மிகவும் செழிப்புள்ள பெரிய வணிகத்தலமக விளங்கியது. பின்னர் இவ்வடபகுதியில் வாழ்ந்த நாக சாதியினர் காலத்துக்குக் காலம் தமிழரோடு கலப்பாராயினர்.

அதனுல் அண்மையிலிருக்கும் தமிழகத்திலிருந்து பலகுடிகள் வந்திறங்கின. காலப் போக்கில் வடஇலங்கை தமிழர் குடியிருப்பாக மாறியது. பல்லவ காலத்தில் வாழ்ந்த சைவ நாயன்மார் இலங்யைின் வடபகுதியிலுள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய தலங்களைப் பாடியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

---

7. Mv. 19: - 28.
8. P. E. Peiris: Nagadipa and Buddhist Remains-JRAS (C B) Vol. XXVIII.
9. Epigraphica Zeylanica, Vol. IV, pp 229-237.

சைவசமயத்தைமேற்கொண்டொழுகிய தமிழர் இப்பகுதிகளில் வாழ்ந்தனர் என்பது இதனால் அறியப்படுமன்றோ!

இதுவரை பெரும்பாலும் புராணவரலாறுகளைக் கொண்டும் மகாவமிசத்தில் சொல்லப் பட்டவற்றைக் கொண்டும் கர்ணபரம்பரைக் கதைகளைச் சேர்த்தும் ஒருவாறு இப்பகுதியின் பழைய வரலாற்றைத் தொகுத்துக் கூறினோம். இனி, பிறசரித்திரச் சான்றுகளின் துணைக் கொண்டு பிற்கால வரலாற்றினை ஒருவாறு ஆராய்வோம்.

# உக்கிரசிங்கன் தொடக்கம் பாணன் வரை

பண்டைக்காலத்திலே, வட இலங்கை நாக சாதியினர் குடியிருப்பாக இருந்த காலத்து, சிங்கைபுரம் அல்லது சிங்கைநகர் என்று பெயர் கொண்டு விளங்கிய நகரத்திலே கலிங்கதேசத்திலிருந்து வந்து குடியேறிய குடும்பங்கள் சில வாழ்ந்து வந்தன. உத்தரப் பிரதேசமென்று மகாவமிசம் குறிப்பிடும் இப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழ்க் குடும்பங்கள் பல வாழ்ந்து வந்தன 1. இக்காலப் பகுதியில் சிங்கள அரசர்கள் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையின் பிற பகுதிகளை ஆண்டு வந்தனர்.

மகாவமிசம் எடுத்து மொழிந்த அரசபரம்பரையின் வரலாற்றைத் தொடர்ந்து கூறும் சூளவமிசம் மேலும் 'ஆறு இராசாக்கள் காலம்' என்னும் பிரிவில் இவ்வுத்தரப் பிரதேசத்தில் கலகங்கள் முறைக்கு முறையெழுந்தன வெனவும், அவற்றை அனுராதபுரத்திலிருந்தரசாண்ட அரசரின் சேனைகள் அங்குப் போய் அடக்கி வந்தனவெனவும் இயம்பும் 2. சீலமேகன் என்னும் சிங்கள அரசன் மகன் மகிந்தன் என்பான் மாதோட்டத்தில் எழுந்த புரட்சியை அடக்கி, உத்தரதேசத்தைத் தனது ஆணைக்குள் ஆக்கினன் என அந்நூல் கூறும்.

ஈண்டுக் குறிப்பிடுங் காலத்திலே கலிங்கதேசத்தினின்று வந்து வட இலங்கையிற் குடியேறிய குடும்பங்களுக்கு உக்கிரசிங்கனென்பான் தலைவனாக இருந்தான் என ஊகிக்கக் கிடக்கின்றது. இவனைக் குறித்து யாழ்ப்பாண வைபவ

---

1. Mv. 1: 54; XXXV: 124
2. Cv. 48: 83—85

மாலையும் 3, கைலாய மாலையும் எடுத்து மொழியுமேயன்றித் தென்னிந்திய வரலாறோ, சூளவமிசமோ, கல்வெட்டுக்களோ யாதுங் கூறா. குறித்த உக்கிரசிங்கன் தன் காலத்து வாழ்ந்த ஏனைய உத்தரதேசத் தலைவரோடு சேர்ந்து அனுராதபுரத்திலிருந்தாண்ட சிங்கள அரசருக்கெதிராகக் கலகங்கள் விளைத்துத் திரிந்தான் என எண்ண இடமுண்டு. சூளவமிசம் உத்தரப்பிரதேசத்தைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் தருங் குறிப்புக்களைப் பார்க்கும்பொழுது வட இலங்கைக்கும் தனியரசொன்று இருந்ததென நாம் ஊகிக்கக் கிடக்கின்றது.

அக்காலத்திலும் தமிழ்த் தலைவர்கள் அனுராதபுர அரசின்கீழ் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பிரதானிகளாயிருந்து ஆட்சி செலுத்தினரென்பது சூளவமிசத்திற் காணப்படும் பொத்தக்குட்டன் 4 என்பான் வரலாற்றினின்றும் தெரிகின்றது 5.

அன்றியும் அனுராதபுரம் சிங்கள நாட்டுத் தலைநகராய் விளங்கிய காலத்துத் தமிழ் அரசரும் காலத்துக்குக் காலம் அங்கு ஆண்டு வந்தனர் என்பது 6 இங்கு குறிக்கப்படத்தக்கது.

இன்னும் சிங்கள அரசர் சிலர் அரசியற்றொல்லைகள் ஏற்படுங்காலத்து வட இலங்கைக்குச் சென்று அங்கு தங்காலத்தை அமைதியாகக் கழித்தனர் என்றும் தெரியவருகின்றது. 7

பின்னர் மகிந்தன் அனுராதபுரத்து அரசபீடத்தேறி இரண்டாம் மகிந்தன் என்னும் பெருடன் ஆண்டு வருங் காலத்தில் அவ்வரசினுக்கு

---

3. யாழ்ப்பாண வைபவமாலை: பக். 13
4. Cv. 46: 39-40
5. Cv. 46: 19-20
6. S. K. Aiyangar: Some Contributions of South India to Indian Culture, Ch. 3.
7. Cv. 47: 3.

உரிமை கோரித் தப்புளன் முதலியோர் அவ்வரசினைக் கவரும் பொருட்டு மகிந்தனோடு போர் புரிந்து கலகம் விளைத்து வந்தனர் 8. அக்காரணத்தால் நாட்டில் அமைதி குன்றியது. அந்நிலையைப் பயன்படுத்தி வட பகுதியில் வலிமையோடு விளங்கிய உக்கிரசிங்கன், வட பகுதியிலுள்ள தலைவர்களையெல்லாம் அடக்கியபின், மாற்றார் கைக்கு இலகுவில் படக்கூடிய கடற்கரைப் பட்டினமாகிய சிங்கைநகரைத் தன் தலைநகராகக் கொள்ளாது அங்கிருந்து வெளியேறிப் பாதுகாக்கக் கூடியதும், மாற்றார் கைக்கு எளிதில் அகப்பட முடியாததும், நிலப்பரப்பினால் சூழப்பட்டதும், பழைய நாகர் தலைநகராயிருந்ததுமான கந்தரோடை என்னும் நகரத்தினைத் தன் தலைநகராக்கினான். ஆளும் அரசனைத் தொலைத்து நாட்டிற் கலகங்கள் ஏற்படுங் காலங்களில் வலிமையுள்ளான் ஒருவன், தன் வலிமையினால் ஆங்குத் தன் ஆட்சியை நிறுவித் தானே அரசனாதல் சரித்திரங் காணாததொன்றன்று.

இவ்வாறு அரசுகட்டிலேறிய உக்கிரசிங்கன் ''மாவிட்டபுரம்'' என இப்பொழுது வழங்கும் ஊரில், தென்னிந்தியாவிலிருந்து உடல்நலங் காரணமாக வந்திருந்த ''மாருதப்புரவீகவல்லி'' என்னும் அரச கன்னிகையைக் கண்டு அவளைத் தன்வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக் கொண்டான் என்று கூறும் வரலாறு 9. இவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் ஒருவனாகிய சயதுங்கவரராசசிங்கன் தந்தையின் பின் செங்கோலோச்சினான்.

இஃது நிகழுங்காலையில் அனுராதபுரத்தினை முதலாஞ்சேனன் (கி. பி. 831—851) ஆண்டு கொண்டிருந்தான். இதே காலத்தில்

---

8. Cv. 48: 90

9. யாழ்ப்பாண வைபவமாலை: பக்கம் 21—22

தென்னிந்தியாவில் வலிமையோடிருந்த பல்லவ அரசு வலி குன்றியது. முதலாம் பாண்டியப் பேரரசு தலை தூக்கத் தொடங்கியது 10.

முதலாஞ்சேனன் காலத்துப் பாண்டிய அரசனொருவன் இலங்கை அரசினைக் கைப்பற்றும் நோக்கத்துடன் வட இலங்கையில் வந்திறங்கினானெனச்சூளவமிசமெனும்பாளிநூல் கூறும்11. இப்பாண்டிய அரசன், வரகுணபாண்டியனென்னும் பராந்தக நெடுஞ்சடையன் மகன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆவன். பாண்டியன் வந்திறங்கியதை அறிந்த சிங்கள அரசன் அவனுக்கெதிராகப் படையொன்றினை யனுப்பினான். இச்சிங்களப்படையைப் பாண்டியமன்னன் எளிதிற் தோற்கடித்து உத்தரதேசத்தைக் கைப்பற்றி ''மகாதாலித்த காமம்'' 12 என்னும் ஊரில் பாடி வீடமைத்துத் தன்படையுடன் இருந்தான். உத்தரப்பிரதேசம் தமிழ்க்குடியிருப்பாக இருந்ததனால் அங்கு வாழ்ந்தோர் பாண்டியன் பக்கஞ் சேர்ந்தனர். அதனால் பாண்டியப்படை இருமடங்கு வலியுற்றது. இவ்வாறு தன்னொடு சேர்ந்த இலங்கைத் தமிழ்ப்படையின் உதவி கொண்டு, தட்டுத் தடக்கின்றி அனுராதபுரத்தேகி அந் நகரைக் கைப்பற்றினான்.

எனினும் பாண்டியப்படை வட இலங்கைக் கரையில் இறங்கியபோது, அக்காலத்து அங்கிருந்து ஆணை செலுத்திய தலைவனாகிய செயதுங்க வரராசசிங்கன் அவனை எதிர்த்தான் போலும். அதனால் போர் மூண்டது. அப்போரில் செயதுங்க வரராசசிங்கன் மடிந்திருக்கவேண்டும். பின்பு பாண்டியன் நாட்டைவிட்டுச் சென்றபோது கலகங்களும் குழப்பங்களும் இருந்து வந்தன. இதனைக் கண்ணுற்ற சூழ்ச்சித்திறனும் வலிமையும் படைத்த பாணன் ஒருவன் தருணத்தைத் தப்பவிடாது குடிகளை யடக்கித் தானே அரசனானான்.

10. K. A. Nilakanta Sastri: Pandyan Kingdom, Ch. 6.
11. Cv. 50: 12-20
12. யாழ்ப்பாணத்துப் 'பளை' என்னும் ஊருக்கருகாமையில் கடற்கரையோரத்திலுள்ள 'தாழையடி' என்னும் ஊரே, 'மகாதாலித்தகாமம்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

செயதுங்க வரராசசிங்கன் வழித்தோன்றல்கள் விசயகூழங்கைச் சக்கரவர்த்தி காலம் வரை நாட்டையாண்டு வந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை ஒன்றே கூறும்; பாணனைப்பற்றிய பரம்பரைக்கதைகளை நவிலும் பிறசான்றுகள் எவையும் இதைப்பற்றி கூறிற்றில 13. சரித்திரத்தில் சடுதியில் பதவி பெற்று உயர்ந்தோர் போலவே இவனும் பெருமிதமுற்றுத் தன்பெயரையும் புகழையும் நிறுத்தும் வண்ணம், தன் பெயரினுல் ஒரு சிறு பட்டினத்தை நிறுவி அதனை யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டனன் போலும். இதுவே பரம்பரைக் கதைகளினின்று நாம் எடுக்கக்கூடிய வரலாற்றுக்கிடக்கை.

---

13. C. Rasanayagam : Ancient Jaffna, P 247.

# பாணன் தொடக்கம் ஆரியச்சக்கரவர்த்தி வரை.

ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் சோழப் பேரரசின் காலம் தொடங்குகிறது. இது ஏறத்தாழ கி. பி. 840க்குப் பின்னுக இருக்கலாம். இக்காலத்துப் பராந்தக சோழன் (கி. பி. 907-956) இலங்கைக்குப் படையெடுத்து வந்தான். அப்பொழுது அனுராதபுரத்திலிருந்து ஆண்டு வந்தவன் உதயன் (கி. பி. 945-953) ஆவன். இச்சிங்கள அரசன் வடஇலங்கையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்திஞனே தெரியவில்லை; இதைப்பற்றிய குறிப்பேதும் சூளவமிசத்தில் இலது.

பாணனும் அவன் பரம்பரையினரும் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறு பாகத்தையே ஆண்டிருத்தல் வேண்டும். ஏனைய பகுதிகளை வேறு வேறு தமிழ்த்தலைவர்கள் ஆண்டனர் போலும். ஒரு குடைக்கீழ் ஒரு தனியரசன் யாழ்ப்பாணம் முழுவதையும் ஆண்டான் என்பதற்கு ஆதாரமெதுவும் இல்லை.

நிலைமை இவ்வாறிருக்க யாழ்ப்பாணக் கடலெங்கணும் சோழக்கடற்படை உலாவித் திரிந்தது. யாழ்ப்பாணத்து நாகர் கோயிலுக்கு அண்மையிலுள்ள நெய்தற் கிராமம் ஒன்றிற்குச் 'செம்பியன் பற்று' என்ற பெயர் இன்றும் உளது. சோழப்படைகள் இப்பகுதியில் வந்திறங்கின என்பதை இது வலியுறுத்தும். கி. பி. ஒன்பதாம் பத்தாம் நூற்ருண்டுகளில் சிங்கள மன்னர் அனுராதபுரத்தை விடுத்து புலத்திநகர் எனப்படும் பொலநறுவையைத் தமது தலைநகராகக்கொண்டனர் 1. செம்பியன் பற்றிலிருந்து பொலநறுவைக்கு நேராகச் செல்லப்பெருந்தெரு ஒன்று அமைந்திருந்தது. ஆகையால் சோழர் தமது சேனைகளைச் செம்பியன் பற்றில் இறக்கி அத்தெருவினூடாகப் பொலநறுவைக்கு நடத்திச்சென்றனர் போலும் 2.

---

1. G. C. Mendis: Early History of Ceylon, Ch. 111.
2. C. Rasanayagam: Ancient Jaffna, p. 320.

அன்றியும் மாவிட்டபுரப்பகுதியில் ஓரிடம் 'வளவர் கோன் பள்ளம்' என்னும் பெயரால் இன்றும் வழங்குகிறது. சோழர் இப்பகுதியில் பெரிதும் நடமாடினர் என்பதற்கு இதுவும் சான்று பகரும்.

இஃதிங்ஙனமிருக்க, இராட்டிரகூட அரசனை மூன்றும் கிருட்டினன் (கி. பி. 940-967) என்பவன் தக்கோலம் என்னும் ஊரில் நடந்த போரில் பராந்தக சோழனை முறியடித்தான். அதனால் இதுகாறும் முன்னேறி வந்த சோழவரசு சிறுகாலந் தடையுற்றது 3. தக்கோலத்தில் வெற்றியீட்டிய கிருட்டினன் வெற்றிவிருதுடன் தன் புகழை நிலைநாட்டப் பெருமிதத்துடன் எங்கணுந் திரிந்தான்என்பதை இராமேச்சரத்தில் அவன் நாட்டிய கல்வெட்டுச் சான்று பகரும். அவன் இராமேச்சரம் வந்த நாட்களில் இலங்கையின் வடகோடியிலுள்ள நாக தீபத்திற்கும் (நயினாதீவு) வந்தனனெனச் சூளவமிசம் கூறும் 4. இவ்வரசன் வெற்றி வருகையைக் கேள்வியுற்ற சிங்களவரசன் நான்காம் மகிந்தன் (கி. பி. 956-972) தனது சேனாதிபதி சேனன் என்பானை யனுப்பி அவனைத் தோற்கடித்தான் என்றும், பின்னர் குறிப்பிட்ட இராட்டிரகூட அரசனுடன் நட்புறவு பூண்டு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான் என்றும், சரித்திரத்தை ஒரு முகமாய்க் கூறிச்செல்லும் தன் இயல்புக் கிணங்க மெழுகிக் கூறும் அந்நூல். இதுகாறும் பாண்டிய சோழ நெருக்கங்களினால் மிகத் தளர்ந்திருந்த சிங்கள அரசு இக்காலத்துச் சிறிது தழைக்கத் தொடங்கியது. அதனால்

---

3. A. L. Basham: Background to the rise of Parakrama bahu I-See Ceylon Historical Journal, Vol, IV, p. 21

4. ,, ,, ,, ,,
A. S. Altekar: Rashtrakutas and Their Times, pp 118. - 119.

பழையபடி சிங்களவருடைய ஆதிக்கம் யாழ்ப்பாணத்திலும் ஒரு சிறிது பரவிற்று எனக் கொள்ளலாம்.

தக்கோலப் பெரும் போரின் விளைவாகச் சில காலம் அடங்கிக் கிடந்த சோழப் பேரரசு, பின்பு சுந்தரச் சோழன் பட்டத்துக்கு வந்ததும் முன்னேறத் தொடங்கியது. கி. பி. 1001 ம் ஆண்டிற்கும் 1004ம் ஆண்டிற்கும் இடையில்முதலாம் இராசராசன் (கி.பி. 985-1016)இலங்கைக்குப் படையெடுத்துவந்து வடபகுதியையும் தனதாட்சிக்குள்ளாக்கினான் 5. இதனால் இதுகாறுஞ் சிறிது சிறிதாக முன்னேறி வந்த யாழ்ப்பாண அரசு கி. பி. 1070 வரை, இலங்கையின் ஏனைய பாகங்களைப் போலவே, சோழப் பெருமன்னர் ஆட்சிக்குக் கீழ் இருந்து வந்தது. சோழப்படை வீரர் பேய் பிசாசுகள் போல இரத்த வெறி கொண்டு எங்குந் திரிந்து நாட்டிலுள்ள புத்த பள்ளிகளையும் தவச்சாலைகளையும் சூறையாடிப் பாழ்படுத்தினரெனச் சூளவமிசம் புலம்பும் 6. ஆனால் அண்மையில் திருக்கோணமலையில் கண்டெடுத்த கல்வெட்டொன்றினால் இராசராசச் சோழன் காலத்து 'இராசராசப் பெரும் பள்ளி' என்னும் பெயருடன் ஒரு புத்தபள்ளி யமைத்து அதற்கு மானியமும் வழங்கப் பட்டது என அறிகிறோம். பின் முதலாம் குலோத்துங்கசோழன் (கி. பி. 1070 - 1120) ஆட்சிக்கு வந்த காலத்து அவன்தளபதி கருணாகரத் தொண்டைமான் கலிங்கமெறிந்ததோடு அமையாது இலங்கையையும் கைப்பற்றினானெனக் கலிங்கத்துப்பரணி என்னும் நூல் இயம்பும் 7. கருணாகரத் தொண்டைமானே தொண்டைமானாற்றை வெட்டியவனாவான். கரணவாய் வெள்ளைப் பரவை ஆகிய இடங்களில் விளையும் உப்பை இவ்வாற்றின் ஊடாகக் கொண்டு

5. இராசராசன் மெய்க்கீர்த்தி: "முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டு........"
Cv. 55: 15—22

6. Cv. 55: 20—21

7. கலிங்கத்துப்பரணி: கடை திறப்பு, 64ம் பாட்டு.

சென்று கப்பல்களில் ஏற்றிச் சோழநாட்டுக்கு அனுப்பினனென இராசநாயக முதலியார் கூறு வர்8.

குலோத்துங்க சோழனுக்குப்பின் சிங்கள மன்னர்களாகிய முதலாம் விசயவாகு, முதலாம் பராக்கிரமவாகு ஆகியோர் காலத்தில் யாழ்ப் பாண அரசின் நிலையைப்பற்றிய செய்தி எது வும் நன்கு தெரியவில்லை. இவ்விரு மன்னர் காலத்தும், இலங்கை முழுவதும், ஒரு முடிக் கீழ் இருந்து 8 வந்தது. எனினும் வட இலங்கை யில், பராக்கிரமவாகுவின் ஆட்சிக் காலத்திலும் உரிமைப் போர் நடை பெருமலில்லை. பராக்கிரமவாகு அரசுகட்டிலேறிய பதினெரு மாண்டிலே (கி. பி 1168 –1169) மாதோட்டப் பகுதியில் வாழ்ந்த தமிழர் இவ்வரசனின் ஆட் சிக்குக்கீழ் அடங்கி வாழ்வதிலும் இறந்து படுதலே நன்றெனத் துணிந்து புரட்சிக் கொடியை உயர்த்தினர். இப்புரட்சியினை யட க்க, வலிமிக்க மன்னனுகிய முதலாம் பராக்கிரம வாகு தன் ஆணைக்குட்பட்ட நாற்பெரும்படை களையும் மாதோட்டத்திற்கு அனுப்ப வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இவ்வாறு சூளவமிசம் கூறும் 9. அஃதவ்வாருயின் அப்புரட்சி எத்துணை வலி படைத்ததாய் இருந்திருத்தல் வேண்டும்?

முதலாம் பராக்கிரமவாகுவிற்குப் பின் இலங்கையில் அரசுரிமை பற்றிய குழப்பங்கள் இருந்தமையால் அங்கு நிலையான ஆட்சி இருக்க வில்லை. அவனுக்குப்பின் தளபதிகள் பலர் நாட்டை ஆண்டு வந்தனர். இதற்கிடையில் பாண்டிய பரம்பரையில் இருந்து வந்த சிங்கள அரச குடும்பத்தோடு தொடர்பு பூண்டிருந்த பராக்கிரம பாண்டியன் என்பானும் சில காலம் ஆண்டான். இவ்வாறு பராக்கிரம பாண்டியன் அரசாளுகையில் கலிங்க தேசத்திலிருந்து

---

8. C. Rasanayagam: Ancient Jaffna, p. 266.
9. Cv. 76: 79:
Cv. 76: 79, foot note 4.

கேரளப் படையுடன் மாகன் என்பான் சிங்கள அரசுக்கு உரிமை கோரி வட இலங்கையில் வந்து இறங்கினான். இவன் செயவாகு என்பவனோடு சேர்ந்து முதல் வடஇலங்கை முழுவதையும் தன் ஆணைக்குள் அடக்கிக் கோட்டை கொத்தளங்கள் அமைத்தனன். ''கொட்டசார'' 10, கங்காதளாக 11, காகாலய 12, பதீ 13, குறுந்தி, மணமத்த, மாகிந்த 14, மன்னார் 15, பலச்சேரித்துறை, வாலிகாகம 16, கோண 17, கோனுசு 18, மதுபாதவதித்த சூகரதித்த 19 ஆகிய இடங்களில் அரண்கள் அமைத்து வட இலங்கை முழுவதையும் பல்லாண்டுகள் ஆண்டு வந்தனன் 20. அதன் பின் புலத்திநகர் என்ற பொல்லநறுவையைக் கைப்பற்றி அதனைத் தனது தலைநகராக்கினான். இவன் காலம் கி. பி. 1215—1235 ஆகும்.

இவனது ஆட்சிக்காலம் தொடக்கம் இலங்கையில் தமிழரசு வலியுறத் தொடங்கியது. புத்தளத்திலிருந்து திருக்கோணமலை வரைக்கும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டின் வடக்குப் பாகம் முழுவதும் தமிழ் இராச்சியமாக அமைந்திருந்ததென்பது மேற் கூறியவற்றால் விளங்கும். அன்றியும் தமிழர் ஆதிக்கமும் அவர் தம் அரசியற் செல்வாக்கும் ''மாயரட்டை'' எனப்படும் நீர்கொழும்பு சிலாபப் பகுதி வரையும் பரந்தது 12.

---

10. கொட்டியாரம்
11. கந்தளாய்
12. காக்காய்ப் பள்ளியாக இருக்கலாம்
13. பதவியக்குளப் பகுதி
14 மாதோட்டம்
15. மன்னார்
16. வலிகாமம்
17. திருகோணமலை?
18. இதன் கருத்து 'கள்ளுமரத்துறை' என்பதாகும். இடம் தெரியவில்லை.
19. இதன் கருத்து 'பன்றித்துறை' என்பதாம். இதுவே 'ஊராத்துறை'.
20. Cv. 83: 15—19.
21. Early History of Ceylon, p. 78.

அதன்பின் பண்டித பராக்கிரமவாகு என்னும் இரண்டாம் பராக்கிரமவாகு (கி.பி 1236—1271) அரசினைக் கைப்பற்றினான். எனினும் வட இலங்கையில் நிறுவப்பட்ட தமிழரசினை அவனால் அடக்க முடியாது போயிற்று. இப்பராக்கிரமவாகு காலத்தில் (கி.பி 1244) மலாய தீபகற்பத்துத் தாம்பிறலிங்கம் என்னும் பகுதியை ஆண்ட புத்த அரசன் சந்திரபானு என்பான் அற்புதங்கள் நிகழ்த்தக் கூடிய புத்த சிலை ஒன்று இலங்கையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அதனைக் கைப்பற்றும் நோக்கமாக இலங்கைக்குப் படையெடுத்து வந்தான். அப்பொழுது சிங்களப் படை இவனை முறியடித்தது. இவன் மீண்டும் நான்காம் விசயவாகு (கி.பி 1271—1273) காலத்தில் படையெடுத்து வந்து வட இலங்கையிலுள்ள மாதோட்டத்தில் இறங்கினான். அங்கிருந்து வடக்கு நோக்கிச் சென்று சில இடங்களில் பாடி போட்டிருந்தான். அவனுடைய சாவகப்படை தங்கியிருந்தபடியாலேயே சாவகச்சேரி, நாவற்குழியிலுள்ள சாவகன்கோட்டை ஆகிய இடங்கள் இப்பெயர்களைப் பெற்றன என்பர் 22.

இக்கலகம் அடங்கிய பின்னர் யாப்பகுவையிலிருந்து அரசோச்சிய நான்காம் விசயவாகு காடடர்ந்து கிடந்த அனுராதபுரத்துக்கு வந்து அந்நகரிலுள்ள புத்த கோயில்களைத் திருத்துவித்தான்.

இக்காலத்தில் வன்னிப்பகுதி தமிழ்ச் சிற்றரசரின் கீழ் இருந்து வந்தது. குறிப்பிட்ட சிங்கள அரசன், இச்சிற்றரசர் கையில், அனுராதபுரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தான்.

இஃதிவ்வாறிருக்க கி. பி. 1216ம் ஆண்டுக்குப் பின்னர் தென்னிந்தியாவில் இரண்டாம் பாண்டியப்பேரரசு உருப்பெறத் தொடங்கியது.

---

22. H. C. Codrington: Short History of Ceylon, p. 78.

இப்பேரரசு சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1253—1270) காலத்தில் உயர்நிலையடைந்தது. சடாவர்மன் இலங்கைக்குப் படையெடுத்து வந்து சிங்கள அரசனை வென்று திறை கொண்டு சென்றான்23. இப்பாண்டியன் ஈட்டிய வெற்றியைக் குறித்துப் புத்த சரித்திர நூலாகிய சூளவமிசம் எதுவும் கூறாது வாயடைத்து நிற்கும்.

சுந்தரபாண்டியன் வெற்றிகளிலும் கீர்த்திப் பிரவாகங்களிலும் நெருங்கிய தொடர்பு கொண்டவனாகிய அவன் மகன் சடாவர்மன் வீரபாண்டியன் (கி.பி 1253—1268) இலங்கையைப் பாண்டிய சாம்ராச்சியத்தினுள் அடக்கும் பொருட்டு பூநகரிக்கு அண்மையில் வந்திறங்கினான். அவன் வந்திறங்கிய இடத்தை இன்றும் வீரபாண்டியன் முனை என அழைப்பர். தனது படையை எதிர்த்த அங்குள்ள அரசனைக் கொன்றொழித்தபின், பொலநறுவைக்குப் போகும் அரசப்பெருந் தெருவழியாகச் சென்று திருக்கோணமலையை யடைந்தான். அங்குத் தன் வெற்றிக்கறிகுறியாகப் பாண்டிய சின்னமான இருமீன் முத்திரையைப் பொறித்து மீனக்கொடியையும் உயர்த்தினான். இவன் வெற்றிச் செலவினை யறிந்த சிங்கள மன்னனாகிய இரண்டாம் பராக்கிரமவாகு அடிபணிந்து திறை கொடுத்தான். வீரபாண்டியன் பொறித்த வெற்றிச்சின்னத்தை ''விறடறிக்கு''க் கோட்டை 24 வாயிலில் இன்றும் காணலாம். பின்பு பாண்டி நாட்டில் மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1268—1301) பட்டத்திற்கு வந்ததும் இலங்கைக்குத் தளபதியாக ''ஆரியச்சக்கரவர்த்தி'' என்னுந் தண்டத் தலைவனை அனுப்பினான்25. அவன் நாட்டை மேற்பார்வை இட்டுக்கொண்டு வட

---

23. Pandyan Kingdom. p. 177.
24. Fort Frederic.
25. Pandyan Kingdom, p. 185.
Cv. 90: 44

வடஇலங்கையிலேயே தங்கினான். இவனிலிருந்தே யாழ்ப்பாணத்தெழுந்த புதிய அரச பரம்பரை தோன்றியிருத்தல் வேண்டும். இவனுக்குப்பின் வந்த யாழ்ப்பாணத்து மன்னர் யாவரும் “ஆரியச்சக்கரவர்த்தி” என்னும் அரச பட்டப்பெயரைக் கொண்டு விளங்கினர்.

# ஆரியச் சக்கரவர்த்திகள் முதலாம் பரம்பரை

வலிமிக்க தளபதிகள் தாஞ் சென்ற சென்ற இடங்களில் தருணம் வாய்க்கும்போது தம்மை அரசராக்கிக் கொள்ளும் வழக்கம் சரித்திரத் திற்குப் புதியதொன்றல்ல 1.

பதின்மூன்ரும் நூற்ருண்டின் இறுதிக்காலத் திலும், பதிஞன்காம் நூற்ருண்டின்தொடக் கத்திலும் தென்னிந்தியாவில் நிகழ்ந்த இசிலா மியப் படையெடுப்பால் பாண்டி நாட்டில் கல கங்கள் மலிந்து கிடந்தன. அதனேடு அங்கு உள் நாட்டுக்கலகங்களும் இருந்து வந்தன. மேலும் இந்நாட்களில் சிங்கள இராச்சியம் வலி குன்றியிருந்தது. இவற்றினைப் பாண்டியத் தளபதியாகிய ஆரியச்சக்கரவர்த்தி பெரிதும் பயன்படுத்தித் தன்னையே வடஇலங்கைத் தமிழ்ப்பகுதிக்கு அரசனுக்கிக் கொண்டான் எனக்கருத இடமுண்டு.

இத்தொடர்பில் யாழ்ப்பாண வைபவமாலை கூறுவதையும் சிறிது நோக்குவோம். மயில்வாக னப் புலவர் யாழ்ப்பண வைபவமாலையைப் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் எழு திஞர். இவர் தமது நூலுக்குக் கையாண்ட முதனூல்கள் யாவும் புராண முறையில் அமைந் துள்ளனவேயன்றி மகாவமிசம், சூளவமிசம், இராசதரங்கிணி, கொங்குதேச இராசாக்கள், இராசாவளி (மைசூர்) ஆகிய நூல்களைப்போல ஓரளவிற்காவது சரித்திர ஒழுங் கில் எழுதப்பட்டனவல்ல. மயில்வாகனப்புலவர் தமது நூலைக் கைலாயமலை, வையாபாடல், பர ராசசேகரனுலா, இராசமுறை முதலிய நூல் களைக்கொண்டு எழுதியதோடமையாது தாம் கர்ண பரம்பரையாகக் கேட்ட கதைகளையும்

---

1. சீதியப்பேரரசின் இந்தியப்பகுதியை ஆண்ட உருத்திரதாமன், யூ—ஏச்சி மன்னன் கனிஷ்கன் ஆசியோர் வரலாற்றினை நோக்குக.

கூட்டிப் புனைந்துள்ளார் எனத் தெரிகிறது. காலம் பொருந்தாமை தலை தடுமாற்றம் ஆகியவை இந்நூலில் மலிந்து கிடக்கின்றன.

சாசனச் சான்றுகளும், பிறசான்றுகளும் யாழ்ப்பாணச் சரித்திரத்துக்கு இதுகாறும் இல்லாமையினால் இவர் கூறும் உண்மையான சரித்திர சம்பவங்களைக்கூட வரலாற்று முறையில் வைத்து யாழ்ப்பணச் சரித்திரத்தினை ஆராய்ந்து கொள்ள இயலவில்லை. யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் "யாழ்ப்பாணம் கொஞ்சக்காலம் தளம்பிக்கொண்டிருக்கையில் பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமழவனென்னும் பிரபு மதுரைக்குப் போய் அவ்விடத்திலே, சோழநாட்டிலிருந்து வந்து இராச உத்தியோகத்துக்கேற்ற கல்வி கற்றுக்கொண்டிருந்த சிங்கையாரியன் என்னுஞ் சூரியவமிசத்து இராசகுமாரனைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்ய வேண்டுமென்று கேட்க அவன் தன் பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டு, பாண்டிராசன் வழிவிட்டனுப்பி வைக்க, யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி நல்லூரைத் தனது இராசதானியாக்கி யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான்'' என்பர்.

மதுரைக்குச் சென்ற பாண்டிமழவன் சோழநாட்டிலிருந்து அங்கு வந்திருந்த சிங்கையாரியனைக் கொண்டுவந்தான் எனவும், அவனைப் பாண்டியமன்னன் வழியனுப்பி வைத்தானெனவும் ஆசிரியர் கூறுகின்றார். அவனைப் பரிவாரங்களுடன் அனுப்பி வைத்தானெனவும் அங்கு கூறுகின்றார். இஃது பாண்டியமன்னன் தன் சேனையோடு தளபதியைப் போருக்கு அனுப்பினான் என்னும் வரலாற்றுச் செய்தியைத் திரித்துக் கூறியதாய் இருத்தல் வேண்டும்.

இவ்வாரியச் சக்கரவர்த்தியைக் கூழங்கையாரியன், விசயகூழங்கைச் சக்கரவர்த்தி, சிங்கையாரிய மகாராசன் என்னும் பெயர்களாலும்

வைபவமாலை அழைக்கும். இஃது தமிழ் நாட்டிலே பலப்பல காலங்களிலே உருப்பெற்ற அரச பரம்பரைக் கதைகளை இவ்வாரியச் சக்கரவர்த்தி மேலேற்றும் எண்ணத்தால் ஏற்பட்ட மயக்கம் 2 எனக் கருதுதல் பிழையன்று.

பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் அரசு கட்டிலேறிய முப்பத்தேழாவது ஆண்டு (கி.பி. 1305) குறித்த இவ்வாரியச் சக்கரவர்த்தி இலங்கைமேற் படையெடுத்தான்3. சூளவமிசத்தின்படி 4.இவன் தான் சூறையாடிய பொருட்களுடன் பாண்டி நாட்டிற்குத் திரும்பினான்.

ஆரியச் சக்கரவர்த்தி என்னும் இத்தண்ட நாயகன்கீழ்வந்த பாண்டியப் படையெடுப்பின் பின் யாழ்ப்பாணத்தினை யாண்ட ஒவ்வோர் அரசனும் தனக்கு ஆரியச் சக்கரவர்த்தி யென்னும் பட்டப்பெயரைச் சூட்டிக் கொள்வது வழக்கமாயிற்று. தண்டநாயகன் ஆரியச்சக்கரவர்த்தி பாண்டியநாடு திரும்பினானெனச் சூளவமிசம் கூறும். ஆனால் ஆரியச்சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயருடன் அரசபரம்பரை யொன்று யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தது என்பது வெளிப்படை. எனவே, இவ் வாரியச்சக்கரவர்த்தி பரம்பரை இக்காலத்திலே தொடங்கியதென்பது சரித்திர உண்மை:

கி. பி. 1344 ல் இலங்கைக்கு வந்த புகழ் பெற்ற இசிலாமியப் பிரயாணியான இபுன்பத்தூத்தா வடஇலங்கையில் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் அரசன் ஆண்டதாகக் கூறுவான். இவன்

---

2. கூழங்கை, விசய கூழங்கை என்பன பொற்கைப் பாண்டியன் கதையைப் பின்பற்றி எழுந்தன போலும்.
8 Annual Report of Epigraphy (Madras), No. 110 of 190.
4. Cv. 90 : 46.

வந்தபோது வடஇலங்கை அரசனும் ஆரியச் சக்கரவர்த்தி மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கினனெனவும் கூறுகின்றார்கள். இத்தகைய வளமும் வலியும் ஓர் இராச்சியத்தில் ஏற்படுதற்குப் போதுமான காலந்தேவை. ஆகையால் இந்த அரசபரம்பரை கி. பி. 1305—1344 க்கு இடையில் தொடங்கியிருத்தல் வேண்டும். இப்பரம்பரை அரசரின் தலைநகர் 'சிங்கநகர்' என்பர். இதனைக் கோட்டகமக் கல்வெட்டிலும், அரசகேசரி பராக்கிரமபாண்டியனின் தென்காசிக்கோயிற் கல்வெட்டிலும் காணலாம்.

இவ்வரசபரம்பரை யாழ்ப்பாணத்தை ஆளும் பொழுது (கி. பி. 1450) கோட்டை இராச்சியத்தை ஆளும் பராக்கிரமவாகு ஆண்டான். அவன் காலத்திலே அவன் வளர்ப்புப் பிள்ளையாகிய சப்புமால் குமரையா 5 யாழ்ப் பாணத்துக்குப் படையெடுத்துக் கோட்டை கொத்தளங்களையழித்துத் தமிழ்ப்பகுதியை ஆண்ட மன்னனைத் துரத்தித் தானே அரசாண்டான். சப்புமால்குமரையன் தொடுத்து வெற்றி கண்ட போரைத் தமிழ்மன்னருக் கெதிரான சிங்களக்கலகமென வைபவமாலை கூறும். மேலும் இப்போர் நடந்தது கனகசூரியன் என்னும் அரசன் காலத்திலே என்றும் அது நவிலும். ஆரியச்சக்கரவர்த்தி யென்னும் பட்டப்பெயர் கொண்ட அரசபரம்பரையைத் தொடங்கியவனுக்கும் குமரையன் முறியடித்த கனகசூரியனுக்குமிடையில் ஒன்பது அரசர்கள் சிங்கை நகரிலிருந்து ஆண்டதாக வைபவமாலை கூறும். இவ்வரசர்களைப் பற்றிய செய்திகளொன்றும் தெளிவாகத் தெரியவில்லை. இவர் ஆண்ட ஒழுங்கு முறைகளைக் கால வரிசைப்படுத்திக் கூறவும் முடியவில்லை. வைபவமாலையின்படி குறித்த அரசபரம்பரை மேல் வருமாறு:

1. விசயகூழங்கைச் சிங்கையாரியச் சக்கரவர்த்தி
2. குலசேகர ,, ,,
3. குலோத்துங்க ,, ,,
4. விக்கிரம ,, ,,

---

5. இவனைச் சண்பகப்பெருமாள் என்பர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | வரோதய | சிங்கையாரியச் | சக்கரவர்த்தி |
| 6. | மார்த்தாண்ட | ,, | ,, |
| 7. | குணபூசண | ,, | ,, |
| 8. | வீரோதய | ,, | ,, |
| 9. | செயவீர | ,, | ,, |
| 10. | குணவீர | ,, | ,, |
| 11. | கனகசூரிய | ,, | ,, |

இக்காலப்பகுதியில் தமிழ் இராச்சியம் மிகுந்த வலியோடு செல்வமும் செழிப்புமோங்கிக் கீர்த்தியோடு விளங்கியது, மன்னார் சிலாபத்துறை முதலிய இடங்களில் நடந்த முத்துக்குளிப்பினால் செல்வங்கொழித்தது. பெரிய கடற்படையொன்று ஆரியச்சக்கரவர்த்தி கையில் இருந்தது. அதனால் ஈழத்தமிழர், மலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்று வாணிகம் வளர்த்து வந்தனர். இத்தகைய செவ்வி வாய்ந்த ஈழத்தமிழ்நாட்டிற்குப் பலர் பிற நாடுகளிலிருந்தும் வந்தனர். அவருள் இபுன்பத்தூத்தா, மார்க்கோப்போலோ என்போர் குறிப்பிடத்தக்கவர். இவ்வரசனையும் அரசினையும் பற்றி இபுன்பத்தூத்தா கூறுஞ்செய்திகள் கவர்ச்சிகரமானவை. "இவ்வரசனின் பெயர் ஆரியச்சக்கரவர்த்தி; கடற்படை வலி கொண்டவன்; மலையாளத்திலே யான் தங்கியிருந்தபோது இவன் நாவாய்கள்' சிறியவும் பெரியவுமாக நூறுகப்பல்கள் நங்கூரமிட்டுக்கெம்பீரமாய் அங்கு நின்றன; அதிதிகளை உபசரிக்கும் அன்பு சார்ந்த நெஞ்சினன்; பாரசீகமொழியிலே வல்லுனன்; அம்மொழியில் என்னுடன் உரையாடினான்; எனக்கு நல்ல பரிசில்களை வாரிவாரியிறைத்தான். அவை 'மட்டுமோ, தன் இராச்சியத்தில் கிடைக்கும் திறமான முத்துக்களையும் பரிசாக ஈந்தான். அன்றியும் யான் விரும்பிய வண்ணம் ஆதாம் மலைக்கு யாத்திரை செய்ய உதவியுஞ் செய்தான்''. இபுன்பத்தூத்தாவின் கூற்றின்படி ஆரியச்சக்கரவர்த்தியின் தலைநகரம் ''புத்தல'' என்பதாகும். சரித்திர ஆசிரியர் பலர் இதனைப்

புத்தளம் எனக் குறிப்பர். ஆனால், இவன் ஆதாம் மலைக்குப் போகும் பிரயாணத்தை விரித்துக் கூறு மிடத்து, ''புத்தல'' என்னுமிடத்திலிருந்து பாதை மூலம் ஆற்றைக்கடந்து மன்னாருக்குச் சென்றதாகவும் அதன் பின் சிலாபத்தை அடைந் ததாகவும் கூறுவான். ஆகவே, ''புத்தல'' வென் பது புத்தளமாக இருக்க முடியாது. ''சிங்கை நகர்'' எனக்கூறப்படும் வல்லிபுரக் குறிச்சிக்கு அணித்தாயுள்ள ''புட்டளை'' என இப்போது வழங்கும் கிராமமே இப் ''புத்தல'' வாகவிருக் கலாம். மேலும் இவ்வரசபரம்பரையினரைச் சிங்கையாரியச்சக்கரவர்த்திகள் என்றும் குறிப் பான். புட்டளை சிங்கையின் ஒரு பகுதி. சிங்கை யென்னும் பகுதி கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் கீர்த்தி வாய்ந்த இடமாயிருந்தது. இதற் குச் சான்று வல்லிபுரத்திற் கண்டெடுக்கப் பட்ட பொன்னேட்டுச்சாசனம். அன்றியும் அங்கு பல கட்டிடங்களும், கோட்டை கொத்தளங் களும் அழிந்தொழிந்து மண்ணால் மூடப்பெற் றிருப்பதை இன்றும் அங்குச் செல்வோர் காண லாம். அத்துடன் இதனருகே ஒரு பெருந்துறையு முளது. அங்கிருந்து கப்பல்கள் அக்காலத்தில் போக்குவரத்துச் செய்தன. இப்பொழுதும் அத் துறையைக் கப்பற்றுறையென அழைப்பர்.

பதினாலாம் நூற்றாண்டு முற்பகுதி தொடக் கம் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை சிங்கள அரசின்நிலை தலைகீழாயிருந்தது. இக்கா லப்பகுதியில் சிங்களவரசின் தலை நகரம் அடிக் கடி இடத்துக்கிடம் மாற்றப்பட்டு வந்தது.

தென்னிந்தியப் படையெடுப்புக்குப் பயந்து சிங்களஅரசர் அனுராதபுரப் பகுதியைக் கைவிட்டனர். அதனால் பொருள் வருவாயைக் கொடுத்த அப்பகுதியிலுள்ள நெல்வயல் முதலி யன பாழடைந்தன. இதேகாலத்து அராபியவணி கர், காலி தொடக்கம் புத்தளம் வரையுள்ள சில இடங்களைத் தமது வணிகத்திற்கு நிலைக்களனாக ஆக்கிக்கொண்டனர். காலி, வெருவலை, கொழும்பு ஆகிய இடங்கள் அராபியரின் வணி

கத்திற்கு மிகமுக்கிய இடங்களாக விளங்கின. அதனுல் விவசாயத் துறையில் போதிய வருவாய் அற்றிருந்த சிங்கள அரசர் இவ்வணிகத்தைப் பயன்படுத்தி அராபிய வணிகருக்கு வேண்டிய கறுவா முதலிய் பொருட் களே விற்பதற்காகத் தலைநகரைத் தென் மேற்குக் கரையோரமாக நிறுவினர். இதன் பயஞகப் பாணந்துறை, கொறனேப் பெருந்தெரு விலுள்ள இருகம் கோறளே ஆகியவற்றிலிருந்து அரசர் சிலர் செங்கோலோச்சினர். இதன்பின் மூன்ரும் விக்கிரமவாகு காலத்தில் (கி.பி 1357-1374) பேராதனையிலிருந்து அளகக்கோஞர் என் னும் பெயருடைய சிங்களத் தலைவன் ஒருவன் செயவர்த்தனபுரத்தில் கோட்டை கொத்தளம் எழுப்பி ஓர் அழகிய நகரைக் கட்டிஞன். கி. பி. 1348ல் பாப்பரசரின் தூதன் மரிக்கு நெல்லி 6 என்பான் சீனத்துக்குச் சென்று இலங்கை வழி யாக உரோமாபுரிக்குத் திரும்புகையில் கொழும் பில் வந்திறங்கிஞன். அப்பொழுது அளகக் கோஞர் கட்டியெழுப்பிய மாளிகையைக் கண்டு அதன் அமைப்புச்சிறப்பினை வியந்தான்.

அப்போது இலங்கையின் அரசியலமைப்பில் இருந்த தலைதடுமாற்றம் அக்கால வரலாற் றைக் கூறும் சிங்கள சரித்திர நூல்களிலும் பிரதி பலிக்கின்றது. எந்தச்சரித்திர நூலாவது இக் கால வரலாற்றைத் தெளிவாகக் கூறுவதாகத் தெரியவில்லை. அன்றியும் ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையினரின் ஆட்சியில், இக்காலப்பகுதி யிலே, தமிழரசு மிகுந்த உச்சநிலையை அடை கின்றது. படிப்படியாகத் தமிழரசர் தங்கள் நாட்டெல்லையைப் பெருப்பித்து இலங்கை யின் பெரும்பாலான பகுதியை ஆளத் தொடங்குகின்றனர். அன்றியும்,

---

6. Marignolie

தங்கள் ஆதிக்கத்தைச் சிங்கள ஆட்சிக்குக் கீழிருந்த பகுதிகளிலும் செலுத்தக்கூடியதாயிருந்தது. சிங்கள அரசனிடமிருந்து திறை பெறவுந் தொடங்கிவிட்டனர். அராபிய வணிகருடன் நடக்கும் கறுவாவணிகத்தில் பங்கெடுத்துக்கொள்ள நீர்கொழும்பு, வத்தளை முதலிய ஊர்களைப் பிடித்து அவற்றைச் சிலகாலம் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர்.

ஒருமுறை தமிழரசின் வரி வாங்குவோர் சிலர் வரி வாங்கியபோது சிங்களச் சிங்காசனத்தில் கண்வைத்திருந்த அளகக்கோனார், இத்தருணத்தைப் பயன்படுத்தி இவ்வரிவாங்குவோரைப் பிடித்துத்தூக்கில் இடுவித்துக் கொன்றான். இதையறிந்த ஆரியச்சக்கரவர்த்தி சீற்றங்கொண்டு இரு பெருஞ் சேனைகளைச் சிங்கள அரசிற்கெதிராய் அனுப்பினான். ஒருபடை கரையோரமாக வந்து பாணந்துறையிற் பாடிபோட்டது. மற்றது பன்னாகம் (மாத்தளை) வழியாகக் கோட்டை நகர் நோக்கிச்சென்றது. கொழும்புக் கண்மையிலுள்ள கோட்டை, பாணந்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் தமிழ்ப்படைக்கும் சிக்களப் படைக்குமிடையில் பெரும் போர் நிகழ்ந்தது. கேகாலைக்[7] கண்மையிலுள்ள கோட்டகமக் கல்வெட்டு இப்போரை மேல்வருமாறு குறிக்கும்:

*கங்கணம் வேற்கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்*
*பங்கயக் கைமேற் றிலதம் பாரித்தார் —பொங்கொலிநீர்ச்*
*சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்[8].*
*தங்கள் மடமாதர் தாம்.*

இதன்படி இங்கு நடந்த போரில் தமிழ்ப் படையே வெற்றிகண்டதெனத் தெரிகின்றது.

---

7. H. C. P. Bell: Archaeological Report of the Kegalle District, 1911
8. அநுரேசர்—அநுராசபுரத்து அரசரைக் குறித்தது. இக்கருத்தை ''சிங்கையில் அநுரையில்... வென்றிகண்டெப் பாற்றியு மிசைவிளக்கேற்றி'' என வரும் தொடரிலும் காண்க- Travancore Archalogical Series, Vol 1 No. 11.

இவ்வாறு யாழ்ப்பாணத்தரசு வெற்றியோடு விளங்கியகாலத்து அதற்கும் விசயநகரப்பேரரசுக்குமிடையில் நல்லுறவு இருந்துவந்தது. இந்நிலையில் ஆறும் பராக்கிரமவாகு என்பான் (கி. பி 1412-1418) சிங்கள அரசுகட்டிலேறியதும் நிலைமை ஒருவாறு மாறத்தொடங்கியது. மங்கு திசையிலிருந்த சிங்களவரசு இவ்வரசன் கீழ்த் தலைதூக்கத்தொடங்கியது. இலங்கை முழுவதையும் தனிச்சிங்கள இராச்சியமாக்க விரும்பினுன். இக்குறிக்கோளோடு வேண்டிய ஏற்பாடுகளைப் படிப்படியாகச் செய்துகொண்டு வந்தான். தமிழரசன் வலியையுந் தனது வலியையும் செவ்வனே நோக்கித் தகுந்த தருணத்தில் போர் தொடுக்க வேண்டுமெனக் காத்திருந்தான். தன் வளர்ப்பு மகனுகிய செண்பகப் பெருமாள் என்னும் சப்புமால்குமரையனைப் படையொன்றுடன் தருணம் பார்த்து யாழ்ப்பாணத்தரசனுக் கெதிராக அனுப்பினுன். நடந்த போரில் அவன் தமிழரசனுல்முறியடிக்கப்பட்டான். இதனுல் பராக்கிரமவாகுவின் எண்ணம் கைகூடாது போயிற்று. சிறிதுகாலத்தில் இரண்டாம் முறையும், குமரையன் தமிழரசன் மீது படையெடுத்துச் சென்றுன். இப்போரில் யாழ்ப்பாணத்தரசன் தோற்றுன். அவன் தோற்றதற்கு, அவனுக்குதவக்கூடிய விசயநகர மன்னன் வராததும் ஒரு காரணமாகும்: வெற்றிகொண்ட குமரையன் அக்காலத்து யாழ்ப்பாணத் தலைநகராகிய சிங்கைநகரரைக் கைப்பற்றி அதைக் கொள்ளையடித்து அழித்தான். அன்று சிங்கைநகரிலிருந்து அரசாண்டவன் கனகசூரிய சிங்கையாரியனென யாழ்ப்பாண வைபவமாலை கூறும். கனகசூரியன தென்னிந்தியாவிற்கு ஒளித்தோடினுன்.

இவ்வாறு வெற்றிக்கொடி நாட்டிய குமரையன் பழைய இராசதானியாகிய சிங்கை நகரை விடுத்து, பாணன் கட்டிய யாழ்ப்பாணத்திற்கு அணித்தாயுள்ள நல்லூரிலேபுதுநகர் ஒன்று கட்டினுன். அங்குக் கந்தவேளுக்கு ஒரு கோயி

லும் கட்டியெழுப்பினுன் 9. இன்றும் நல்லூர்க் கந்தசாமிகோயிற் றிருவிழாநாளில் உற்சவமூர்த்திவீதிவலம் வரும்போதும், திரும்பிக் கோயிலினுட் புகும்போதும் கூறப்படுங் கட்டியங்களில் இவனுடைய பட்டத்துப் பெயராகிய "ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு" என்பதும் கூறப்படுகிறது.

---

9. இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா
மாண்ட தெல்லை
அலர்பொலி மாலைமார்ப ஞம்புவ னேகவாகு
நலமிகுந் திடுயாழ்ப் பாண நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே.
—யாழ்ப்பாண வைபவ மாலை: பக். 32

# பிற்கால யாழ்ப்பாணத்தரசர்

குமரையன் யாழ்ப்பாணத் தமிழரசை ஆண்டுவந்தகாலத்தில் கோட்டை இராச்சியத்தின் நிலைமை மாறிக்கொண்டுவந்தது. ஆறும் பராக்கிரமவாகு இறந்ததும் அவனுடைய பேரப்பிள்ளையாகிய சயவாகு பட்டத்திற்கு வந்தான். அவன் ஒன்றரை ஆண்டுகள் ஆண்டபின் இறந்தான். அப்பொழுது அவன் உடன் பிறந்தாளாகிய மாணிக்கம் என்பாள் அரைப்பித்தனுகிய தன் மருகனை அரசுகட்டிலேற்றினளென டீ. கூட்டோ என்னும் போர்த்துக்கேயச் சரித்திராசிரியன் கூறுவான் 1. ஆனால் இவன் அரசாளுந் திறன் அற்றவனெனக்கண்டு பெரிதுங்கவலையுற்று, அந்நாட்களில் வாழ்ந்த அரசகுமாரருட் பெருவலி செறிந்தவனுகிய குமரையனை உடனே வந்து அரசபொறுப்பை ஏற்கும் வண்ணம் வேண்டினள். இதை யறிந்ததும் குமரையன் யாழ்ப்பாணத்திலிருந்து கோட்டை நகர் நோக்கிப் புறப்பட்டான். அங்குச் சென்றதும் புவனேகவாகு என்னும் பட்டப்பெயருடன் அரசுகட்டிலேறினுன். எனினும் இவன் கோட்டைக்குச் சென்ற பிறகும் சிங்களப்பகுதியில் உள்நாட்டுக் கலகம் மலிந்து கிடந்தது.

யாழ்ப்பாணத்தில் அடங்கிக்கிடந்த தமிழரசு இக்குழப்பங்களைப் பயன் படுத்தியது. குமரையனுல் கி. பி. 1450-ல் முறியடிக்கப்பட்ட மன்னன் மகனுகிய பரராசசேகரன் (கி. பி. 1478-1519) யாழ்ப்பாண அரசைத் திரும்பப் பிடித்துத் தனிச் செங்கோலோச்சினுன். இவனுக்குப்பின் சங்கிலி செகராசசேகரன் (கி. பி. 1519-1561) அரசனுனுன்.

அக்காலத்திலே யாழ்ப்பாணம் மன்னூர்க் கரைகளில் வந்து கரையேறிய கப்பல்களையும் அவற்றிலுள்ள பொருட்களையும், உரிமைப்படி யாழ்ப்பாண அரசர் எடுத்துக்கொள்வர். இவ் வழக்கத்தை யொட்டி அங்கு வந்தடைந்த பல

---

1. De Couto: JRAS. (CB) Vol. XX, P 62
சில ஆசிரியர் வேறுவிதமாகக் கூறுவர். EHC p I04.

போர்த்துக்கேயக் கப்பல்களைச் சங்கிலி கைப் பற்றினான்.

சங்கிலியின் இச்செயலைத் தடுப்பதற்காகக் கி. பி. 1543ல் மாட்டின் அல்பொன்சோ த சூசா என்பவன் போர்த்துக்கேய அரசின் கீழ் அடங்கியிருக்கும் வண்ணம் அவனைப் பணித்தான். கி.பி. 1544 ம் ஆண்டிற்கு முற்பட்ட சில காலங்களில் போர்த்துக்கேயரின் முயற்சியினால் மன்னாரில் வாழ்ந்த மக்களிற் சிலர் கத்தோலிக்கராய் மத மாறி வாழ்ந்தனர். கி. பி. 1544ம் ஆண்டு மட்டில் அர்ச். பிரான்சிஸ் சவேரியாரின் தூண்டுதலினால் மன்னார் மக்களுட் பெருந்தொகையானோர் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டனர். இதையறிந்த சங்கிலி மன்னாருக்குப் படையனுப்பி மதம் மாறிய யாவரையும் தண்டித்தான். இக் காலந்தொடக்கம் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேயருக்கு எதிராகவே இருந்துவந்தது. சிங்கள நாட்டில் போர்த்துக்கேயருக்கு மாறான எழுச்சிகளின் முன்னணியில் நின்றவன் மாயாதுன்னை என்னும் சிங்கள அரசகுமாரன். இவனும் சங்கிலியும் போர்த்துக்கேயரை எதிர்ப்பதில் ஒன்று சேர்ந்துகொண்டனர். 1547ல் சங்கிலி மாயாதுன்னையுடன் சேர்ந்து போர்த்துக்கேயருக்கெதிராகப் போர்புரிந்ததாகத் தெரிகிறது. இதற்கு இவரிருவரும் தஞ்சை அரசனான சேவப்பநாயக்கன் (கி. பி. 1532-1580) உதவியைப் பெற்றதாகவுந் தெரிகிறது.

கோட்டை அரசினை ஆண்ட எட்டாம் புவனேகவாகுவின் (கி. பி. 1521-1551) மருகனான வீதியபண்டாரமென்பான் கோட்டை இராச்சியத்திற்கு அரசனாக ஆசைகொண்டான். ஆனால் தன்னெண்ணங் கைகூடாதது கண்டு பலப்பல இடங்கள் தோறும் சென்று உதவி கோரினான். எங்கணும் அவன் எண்ணங் கைகூடவில்லை. இறுதியில் யாழ்ப்பாணத்தை ஆண்டுகொண்டிருந்த சங்கிலி செகராசசேகரனிடம் வந்து சேர்ந்தான்.

---

2. Afonso de Souza

சங்கிலி போர்த்துக்கேயருக்கு மாறுகப் பொருதுகொண்டு நின்றுணகையால் வீதியபண்டாரத்தின் கோரிக்கைக்கு உடன்பட்டான். ஆனல் வீதியபண்டாரத்தின் திடீர்மரணத்தினல் போர்த்துக்கேயருக்கு மாருன இவ்வுடன்படிக்கை சிறிதும் பயன்படாது போயிற்று.

சங்கிலியைத் தண்டிக்கும் வகைதேடிக் காலம் பார்த்திருந்த போர்த்துக்கேயர் கி. பி. 1560ல்கொன்ஸ்தாந்தீன் த பிறகன்சாவின் 3 கீழ் கடல்வழியாக ஒரு பெரும் படையினை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர். பிறகன்சா கொழும்புத்துறையில் இறங்கி நல்லூரை யடைந்து சங்கிலியின் கோட்டை கொத்தளங்களை அழித்தான். இதைக்கண்ட சங்கிலி தன் மாளிகையைத் தீக்கிரையாக்கிவிட்டுக் கோப்பாய்க்கு ஓடினன். அங்கும் போர்த்துக்கேயர் அவனைப் பின்தொடரவே வன்னிப்பகுதியில் போய் ஒளித்தான். அப்பொழுது தாம் புதிதாகக் கைப்பற்றிய யாழ்ப்பாணத்திலே போர்த்துக்கேயர் தலைவரும் அவர்சேனையும்வேட்டையாடுதல் விருந்தயருதல் முதலிய ஏகபோக சுகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தனர். அவற்றைக் கண்டு மனம்பொறுத நாட்டுமக்கள் அவருக்கு மாறுகப் புரண்டெழுந்து அங்கிருந்த போர்த்துக்கேயரை வெட்டி வீழ்த்திக் கலகம் விளைத்தனர். இத்தருணத்தைப் பயன்படுத்திச் சங்கிலி மன்னன் நல்லூர் வந்து சிதறுண்ட தன் படைகளைச் சேர்த்துப் போர்த்துக்கேயருக்கெதிராகப் பெரும் போர் நிகழ்த்தினன். இவ்வெதிர்ப்புக்கு நின்று பிடிக்க ஏலாது போர்த்துக்கேயர் கப்பலேறினர்.

சங்கிலிக்குப் பின் புவிராசபண்டார மென்பான், பரராசசேகரன் என்னும் பட்டப்பெயரோடு அரசுகட்டிலேறினன். அவனைப் போர்த்துக்கேயர் போரிலே கொன்று பெரியபிள்ளை என்பானை அரசுகட்டிலேற்றினர். அவன் பரராச

3 Don Constantine de Braganza.

கேகரன் என்னும் பெயருடன் கி. பி. 1570ம் ஆண்டிலே போர்த்துக்கேயர் உதவியுடன் அரசு கட்டிலேறினுனுயினும் அவனுக்கு அவர்மேல் அடங்கிக் கிடந்த வெறுப்புணர்ச்சி சிலவாண்டில் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. தஞ்சை மன்னனுன அச்சுதப்ப நாயக்கன் உதவியுடன் மன்னுரில் நிலேத்திருந்த போர்த்துக் கேயருக்கு எதிராகப் போர் தொடங்கினுன். இப்போரில் இவன் வென்றதாகத் தெரியவில்லே.

இவனுக்குப்பின் புவிராசபண்டாரமென்பான் பரராசசேகரன் என்னும் பட்டப்பெயருடன் கி. பி. 1582ல் அரசனுனுன். இவனும் தன் முன்னேர்போலப் போர்த்துக்கேயரை எதிர்த்தான். மன்னுரை அவர் கையினின்று விடுவிக்க இருமுறை முயற்சித்துப் போர் நடத்தினுன். இரண்டாம் முறையாக கி. பி. 1519ம் ஆண்டு மன்னுரைத் தாக்கியபோது போர்த்துக்கேயர் இவன் தாக்குதலேப் பொறுக்க முடியாது அந்திரே போர்த்தாடோ தமென்டோன்கா 4 என்னும் தளபதியை யாழ்ப்பாணத்திற்குப் படையெடுத்துச் செல்லுமாறு கட்டளேயிட்டனர். நடந்த போரில் பரராசசேகரன் இறந்து பட்டான். அப்பொழுது போர்த்துக்கேயர் பெரியபிள்ளே செகராசசேரனின் மகனும் எதிர்மன்ன சிங்கனே அரசனுக்கினுர். இவன் பரராசசேகரன் என்னும்பட்டப்பெயருடன் (கி. பி. 1519-1615) ஆட்சி செலுத்தினுன்.

இவ்வரசன் போர்த்துக்கேயர் கைப்பொம்மையாக விளங்கினமை கண்டும், யாழ்ப்பாண அரசியல் அலுவல்களில் அவர் பெரும் பங்கெடுக்க விட்டமை கண்டும், மனம் பொருத தமிழ்த்தலேவர்களான முதலிமாரும் தலேமைக்

---

4. Andre de Furtado de Mendonca.

காரரும் மேற்படி நிலைமையை மாற்ற வழிவகை தேடினர். இந் நோக்கத்தைக் கொண்டு சோனகர், வடுகர், மறவர், ஆகியோர் உட்பட ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு, தஞ்சைமன்னனாகிய அச்சுதப்பநாயக்கன் கண்டி மன்னனாகிய விமலதரும சூரியன் ஆகியோரின் படையுதவியை நாடி நின்றனர். இத்திட்டங்களை ஏதோ ஒரு வகையாக அறிந்த எதிர்மன்னசிங்கன் மன்னாரிலுள்ள போர்த்துக்கேயத் தலைவனுக்கு அறிவித்தான். தஞ்சை நாயக்கன் கடற்படை மன்னாருக் கணித்தாய் வருகையில் போர்த்துக்கேயர் அதனை முறியடித்தனர். இதனோடு கலகம் அடங்கி எதிர்மன்னசிங்கன் கி. பி. 1615ல் இறக்கும்வரை அமைதி நிலவிற்று. அவன் இறக்குந் தறுவாயில் இருக்கும்போது மூன்று வயதுள்ள தன் மகனை அரசனாக்கி அவனுக்கு வயது வரும் வரையும் தன் தம்பியாம் அரசகேசரிபண்டாரத்தை அரசபாதுகாவலனாய் நியமித்தான்.

எதிர்மன்ன சிங்கன் இறந்தபின்பு அரச குடும்பத்தினருள் ஒருவனான சங்கிலிகுமாரன் என்பான் அரசகேசரி பண்டாரத்தைக் கொன்று தானே அரசபாதுகாவலனானான். இச்செயலைக் குறித்துப் போர்த்துக்கேயர் எதிர்ப்புக் கிளப்பிய பொழுது, அவருக்கு வேண்டிய திறையைக்கொடுத்து நாட்டை ஆள்வதாக வாக்குறுதி செய்தான். ஆனால் சிறிது காலத்தின் பின்னர் கண்டிக்குச் செல்லும் வடுகப்படையைத் தன் இராச்சியத்துக் கூடாகப் போக விடுத்ததாலும் தன் எண்ணப்படியே தன் மருமகனைத் தனக்குப்பின் அரசாள நியமித்ததாலும் போர்த்துக்கேயருக்கு முறைப்படி திறையைச் செலுத்தாததாலும், முன்கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் விட்டானெனத் தெரிகிறது. இதை யறிந்த போர்த்துக்கேயர் அவனை நெருக்கினர். அதனால் சிலகாலம் ஊராத்துறையில் ஒளித்திருந்தான்.

நெருக்கடியான இந்நிலையைக் கண்டு அவன் தேவியர் தஞ்சைப் பெருமன்னன் இரகுநாத நாயக்கனிடம் சென்று முறையிட்டனர்5. கேம் நாயக்கன் என்பான் தலைமையில் இரகுநாத நாயக்கன் அனுப்பிய தஞ்சைப் படையின் உதவிகொண்டு திரும்பவும் அரசைக் கைப்பற்றினான். இரகுநாதநாயக்கனே யாழ்ப்பாணம் வந்து போரிற் பங்கெடுத்துக் கொண்டதாகவும் கருதப்படுகிறது. ஆனால் போர்த்துக்கேயர் வரலாற்று நூல்கள் இரகுநாதன் வருகை பற்றி எதுவுங் கூறிற்றில.

இன்னும் சங்கிலியின் அரச பரிபாலனத்தில் தமிழ் மக்கள் திருப்தியடைய வில்லை. அதனோடு தஞ்சை நாயக்கனின் உதவிப் பலத்தினால் போர்த்துக்கேயரை மதியாமலும் நடந்தான். போர்த்துக்கேயருக்கு மாறாகக் கண்டியரசனுக்கு உதவியளித்தான். அதனோடு போர்த்துக்கேயருக் கெதிராய் ஒல்லாந்தருடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினான். இதனால் சங்கிலி மீது சீற்றமும் ஆத்திரமும் கொண்ட போர்த்துக்கேயர் அவனை ஒழித்துக் கட்டப் பிலிப்பு த ஒலிவீரா 6 என்னும் தலைவனின் கீழ் கி. பி. 1619ல் பெரும் படையொன்றை அனுப்பினர் சங்கிலியும் படை திரட்டினான். இரு படைகளும் பெரும்போர் நிகழ்த்தின. எனினும் சங்கிலியின் படை தோற்கடிக்கப் பட்டது. சங்கிலி பிடிபட்டான். போர்த்துக்கேயர் சங்கிலியைக் கோவாவுக்கு அனுப்பினர் யாழ்ப்பாணத் தமிழரசு ஒலிவீராவின் கையிற் சிக்கியது. இதனோடு தமிழரசர் பரம்பரையும் முடிந்தது.

---

5. Rama Bhadrambha: Raghunatha Abhyudhayam; Yagna Narayana Dikshitar: Sahitya Ratnakara.
6. Philip de Oliveiyra.

XXXX

# விடுதலைப் போராட்டம்

அரசபரம்பரை ஒழிந்தது. தன்மானம் என்னும் பெரிய தனத்தை இழந்து விட்டோமே யென்னும் மனப்பாரம் யாழ்ப்பாணத்து மகன் ஒவ்வொருவனது இதயத்தையும் அமுக்கியது. மதித்தற்கரிய மாணிக்கமாகிய சுதந்திரச் செல்வத்தை இழந்து விட்டோமே என்ற கவலை மக்களை வாட்டியது. விடுதலை வேட்கை பொங்கி யெழுந்தது. நாடு தொலைந்து பிறன் கைப்பட்ட ஈராண்டுக் கிடையில் ஆறுமுறை புரட்சி வெள்ளம் கான்யாறு போல் கரைபுரண்டோடியது. இதனைப் போர்த்துக்கேய வரலாற்ருசிரியரே கூறிப் போவார்.

முதல் முறை 'கரையார்' தலைவன் போர்த்துக்கேயருக் கெதிராய் படையோடெழும்பினன். நல்லூருக் கருகாமையில் நடந்த போர் ஒன்றில் ஒலிவீரா இவனை முறியடித்தான்.

அடுத்து, அரசகுமாரன் ஒருவனை யாழ்ப்பாணத்தரசனுக்க விரும்பி, சின்னமிக்கேல் பிள்ளை என்பவன் தஞ்சைக்குச் சென்று ஆயிரம் போர்வீரரைப் பன்னிரண்டு தோணிகளில் ஏற்றி வந்து தலைமன்னரை அடைந்து, அங்கிருந்து போர்த்துக்கேயரை எதிர்த்தான். ஒலிவீரா இம்முயற்சியையும் தோற்கடித்தான். பின்னர் முதலியார் ஒருவர் நடத்திய விடுதலைப்போரும் தோல்வியடைந்தது. சின்ன மிக்கேல்பிள்ளை தஞ்சை நாயக்கரிடம் திரும்பவுஞ் சென்று யாழ்ப்பாண அரசிற்குத் தன்னை அரசனுக்கும்படி வேண்டினன். தஞ்சைப் பேரரசின் கீழ் யாழ்ப்பாணத்தைக் கொண்டுவர ஆண்டு 1620 கார்த்திகைத் திங்கள் முயற்சிகள் தொடங்கின. யாழ்ப்பாணத்தையும் அடுத்துள்ள பகுதிகளையும் கைப்பற்றுவதற்குத் தஞ்சைப்பெரும் படையொன்று வருவதாக ஒரு செய்தி நல்லூரிலிருந்த ஒலிவீராவின் காதுக்கெட்டியது. அந்தோனி

## XXXXI

யோ தமோத்தா கல்வாஓ 1 என்பவன் கீழ்போர்த்துக்கேயப் படையொன்று பருத்தித்துறையில் தஞ்சை நாயக்கரின் படையைக் காத்திருந்தது. நாயக்கரின் படை வந்ததும் பெரும் போர் நிகழ்ந்தது. மீண்டும் போர்த்துக்கேயரால் தமிழர் சேனை முறியடிக்கப்பட்டது. இதுவே இலங்கைத் தமிழரின் கடைசி விடுதலைப் போராட்டம் *

1. Antoni de motha Galvao

* இதுகாறும் ஒருவாறு யாழ்ப்பாணத்தமிழரின் வரலாற்றைக் கூறினோம். இன்னும் திருக்கோணமலை மட்டக்களப்பு, வன்னி, மலை நாடு முதலிய இடங்களில் வாழுந் தமிழர் வரலாற்றையும் இவ்வாறு ஆராய்ந்து வருகின்றோம். இவை யாவற்றையும் இறுதியில் ஒருங்குசேர்த்து இலங்கைத் தமிழர் வரலாறு என்னும் பெருநூலாக வெளியிடுதல் எமது நோக்கம். இங்ஙன் நோக்கத்துக்குச் சான்றுகள் தந்து உதவிபுரியும் அன்பர் தமக்கு ஆசிரியர் என்றும் கடப்பாடுள்ளவராய் இருப்பார்.

வாழ்க நற்றமிழ்.

# BIBLIOGRAPHY


*கலிங்கத்துப்பரணி:* பெ. பழனிவேல் பிள்ளை உரை, *கழகப்பதிப்பு, 1950*

*யாழ்ப்பாண வைபவமாலை:* குல. சபாநாதன் பதிப்பு, *சரஸ்வதி புத்தக சாலை, கொழும்பு, 1953*

Rama Bhadramba : Raghunathabhyudhyam, Ed. by Dr. T. R. Chintamani, (Madras University)

Yajna Narayana Dikshita : Sahtya Ratnakara. Ed. by Dr. T. R. Chintamani, (Madras University)

Altekar, A. S. Rashtrakutas and Their Times, Poona Oriental Book Agency, 1934.

Annual Report of Epigraphy, Madras.

Archaeological Report of the Kegalle District-H C. P. Bell

Bothlingk and Roth : Sanskrit - Worterbuch, St Petersburg, 1855

Ceylon Historical Journal

Codrington, H. C. : Short History of Ceylon, Macmillan & Co., London, 1926

Epigraphica Zeylanica

Geiger, Wilhelm : (1) Culavamsa, Pali Text Society London, 1929 & 1939

(8) Mahavamsa, Ceylon Government Information Department, Colombo, 1950

Harivamsa : Ed. by M. N. Dutt, Calcutta. 1897

IbnBatuta : The Rehla of Ibn Batuta, Baroda Oriental Institute, 1953

Journal of the Royal Asiatic Society (Ceylon Branch)

Krishnaswamy Aiyangar, S. K. : Some Contributions of South India to Indian Culture, University of Calcutta, 1923

Mendis, G. C. : Early History of Ceylon, Y. M. C. A. Publishing House, Calcutta, Ninth Impression, 1948

Nilakanta Sastri, K. N. (1) Colas, University of Madras, 1935

(2) Pandyan Kingdom, Luzac & Co. London, 1929

Obeyasekara, Donald : Outlines of Ceylon History Times of Ceylon, Colombo 1911

Oldham, C. F. : The Sun and the Serpent. Archibald Constable & Co. Ltd, London, 1905

Rasanayagam, C. : Ancient Jaffna, Everyman's Publishers Ltd, Madras 1926

RgVedavyakhya, : Ed. by C. K. Raja, Adyar Library, 1939

Sewell, R. : A Forgotten Empire, George Allen & Unwin Ltd. London. Reprint 1924

South Indian Inscriptions.

Travancore Archaeological Series.

Vaidya, C. V. : History of Medieval Hindu India, Oriental Book Agency, Poona, 1921—1924

Vogel, J. : Indian Serpent Lore. Arthur Probsthain, London, 1926

Vriddhagirisan, : The Nayaks of Tanjore, University Annamalainagar, 1942

# சங்கிலி

எனத் தெரியவந்தது. இளவரசர் மாலைப் பொழுதில் தம்முடைய அரசபணிகளை முடித்துவிட்டுச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வதற்காக அங்கு உலாவப் போனார். அப்பொழுது அப்படுபாவி, படைக்கலம் இல்லாது தன்னந்தனியே அமைதியாய் உலாவிக்கொண்டு இளம்பிறையின் அழகில் ஈடுபட்டு நின்ற அவர் பின்புறமாக மெல்லச் சென்று தனது உடைக்குள் ஒளித்து வைத்திருந்த கட்டாரியை எடுத்து அவர் முதுகில் ஓங்கிக் குத்தினான். உடனே எங்கள் இளவரசர் அலறிக்கொண்டு மண்ணிற் சாய்ந்தார். அந்த அலறலைக் கேட்ட காவலாளர் அவ்விடத்துக்கு விரைந்தோடினர். அப்பொழுது இளங்கோ வீழ்ந்து கிடப்பதையும் அவர் அருகிலிருந்து ஒருவன் ஓடுவதையும் கண்டனர், உடனே காவற்காரர் ''கொலை! கொலை!! இதோ ஓடுகின்றான் பிடியுங்கள்'' என்று கூச்சலிட்டனர். அதைக் கேட்டுக் கோட்டை வாயிலில் நின்ற தளபதி இமையாணனார் 'இங்கிருந்து ஒருவரும் வெளியேறாமற் பாருங்கள்' என்று படையினருள் ஒரு பகுதியினரை ஏவினர். ஏவிவிட்டு, மற்றொரு பகுதியினரை பூந்தோட்டம் முழுவதும் சல்லடை போட்டுப் பார்க்கும்படி கட்டளையிட்டனர். அவருட் சிலர் அகழியின் ஒரு பக்கத்தில் ஒருவன் பதுங்கியிருக்கக் கண்டனர். அவன் கையிலும் உடையிலும் இரத்தம் தோய்ந்திருந்தது. உடனே அவனைப் பிடித்துத் தளபதியிடம் கொண்டு போய் ஒப்படைத்தனர். அவர் உண்மையைக் கூறுமாறு நெருக்கினர். வன்னியரே வலால் அங்கு வந்ததாக அக்கொலையாளி ஒப்புக் கொண்டான். ஆனால் தன் ஊர்

பெயரைத் தெரிவிக்க மறுத்து விட்டான். என்றாலும், அவன் ஒட்டிசுட்டான் காட்டி லிருக்கும் கொள்ளைக் கூட்டத்தலைவன் கர டியன் கந்தன் என்று எம்போர்வீரர் கண்டு பிடித்து விட்டனர்.

**சங்கிலி :**

*(சிறி எழுந்து நின்று தன் வாளை உறையினின்றும் சிறிது உருவிய வண்ணம்)* சங்கதி அப்படியும் ஆகிவிட்டதோ?

**[அப்பொழுது அரசன் சங்கிலியை இருக்கும்படி கையமர்த்துகின்றான். சங்கிலி பொங்கிய சினத்து டன் பல்லை நெறுமிக்கொண்டு விருப்பின்றித் தன் இருக்கையில் அமருகின்றான்.]**

அரசகேசரி:

அரசிளங்குமரா, ஆத்திரப்பட வேண்டாம். நன்கு விசாரணை செய்து நீதியெனக் கண் டதையே செய்தல் வேண்டும். கோபத்தி னால் ஆத்திரப்பட்டு எதையும் செய்தல் கூடாது. அப்பொழுது குற்றமற்றவர்களும் தண்டனையுறுதல் கூடும். அதனால் பெருந் தீங்கு உண்டாகும்.

''மனுமுறை நெறியின் வழக்கிறந் தவர்தா
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே.''

**அரசன் :**

*(பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தனிநாயக முதலியை நோக்கி)* புலவர் பெரு மான் கூறுவது முற்றிலும் உண்மை. இதுவோ படுகொலை. என்றாலும் நீதிமன்றத்தில் தீர விசாரணை செய்தபின்பு தான் ஒருவனைக் குற்றவாளி என்று முடி வாக்க வேண்டும். ஆகையால் இவனை நீதி மன்றத்திற்கு அனுப்பி விசாரணை நடத்தித்

தீர்ப்பை எனக்குத் தெரிவியுங்கள். இளவரசரைக் கொன்றது இராசத் துரோகம். என்றாலும் நெறிமுறையிலிருந்து நாம் சற்றேனும் தவறலாகாது. அது நீதி தவறுதலாய்முடியும்.

சங்கிலி :

அரசே! இந்த அற்ப பதரைத் தண்டிப்பதோடு மட்டும் நாம் நின்று விடக்கூடாது. இக்கொலைகாரனோ ஏவற்பேய். இவனை ஏவிய வன்னியரையும் நாம் கட்டாயம் தண்டிக்கவேண்டும். (ஒரு பக்கம் திரும்பி வாளை உருவிக் கையில் உயர்த்திப் பிடித்துக்கொண்டு) இவர்களுக்குத் தக்க பாடம் படிப்பிக்காவிட்டால் நான் சங்கிலியல்லன், என் குலதெய்வத்தின் மேல் ஆணை!

[அப்பொழுது பரநிருபசிங்கன் அவைக்களத்திற்கு வருகின்றான். அவன் தாடி வளர்ந்திருக்கின்றது. எங்கேயோ தொலைப் பயணத்திலிருந்து வந்தவன் போலக் காணப்படுகின்றான். அவனைக் கண்டதும் அரசனைத் தவிர ஏனையோர் எழுந்து நிற்கின்றனர். பரநிருபசிங்கன் ஓர் இருக்கையில் அமருகின்றான். பின் யாவரும் தத்தம் இருக்கைகளில் அமருகின்றனர். சங்கிலி தொடர்ந்து பேசுகிறான்.]

அண்ணாரும் கண்டியிலிருந்து சரியான தருணத்தில் வந்துசேர்ந்து விட்டார். அண்ணா! எமது தமையனார் இளவரசர் நயவஞ்சகரால் கொலையுண்டார்.........

பரநிருப :

(இடைமறித்து) தம்பி, அதை நான் வரும் வழியிற் கேள்விப்பட்டேன். இச்செய்தியைக்கேட்டதும் என்மனம் துடிதுடித்தது. அப்பழிகாரனைப் பிடித்துவிட்டீர்களோ? கண்டியரசன்தேவிக்கு மருந்து செய்வதற்கு எமது தந்தையார் என்னை அங்கு அனுப்பி

யதுதான் வந்தகேடு. நான் அங்கு போனதால் கண்டியரசன் தேவி உயிர் பிழைத்தாள்; இங்கு இல்லாததால் எமது அருமை அண்ணனர் உயிர் இழந்தார். எல்லாம் சரி. மெத்தப்பேசி என்ன? இறப்பும் பிறப்பும் ஊழ் வினைப்பயன். யார் தான் அதனைத் தடுக்கமுடியும்? அப்பழிகாரன் எங்கே?

தனிநா. மு:

கையும் மெய்யுமாய்ப் பிடித்து விட்டோம்.

சங்கிலி:

அண்ணு, உண்மைக் கொலைகாரன் இவனல்லன். வன்னியரே இக்கொலையைச் செய்தவர், அவரைத் தகுந்த முறையிலே தண்டிப்பது எமது கடன். அப்படிச் செய்தாலன்றி எமது நகரத்தின் காவற்தெய்வமும் எமது அண்ணனரின் ஆவியும் சாந்தமடையா. ஆகையால் வன்னிநாட்டின் மீது படையெடுக்கத் துணிந்து விட்டோம். நல்லநேரத்தில் நீங்களும் வந்து விட்டீர்கள். அண்ணனர் பண்டாரம் இறந்தபடியால் நீங்களே இளவரசர். ஆகையால் நான் செய்யும் இம்முயற்சிக்கு உங்கள் அநுமதியும் ஆசீர்வாதமும் வேண்டும். அவற்றை அடியேனுக்கு ஈந்தருளும்படி வேண்டுகின்றேன்.
(*சங்கிலி துணிந்து பரநிருபசிங்கனை வணங்குகின்றன்.*]

பரநிருப:

(*சங்கிலி நிற்கும் இடத்திற்குப் போய் அவனைத் தழுவி*)
தம்பி, இப்படி இரு. உனக்குச் சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். ஆறுதலாக இருந்து கேள்.

சங்கிலி:

(*தனது இருக்கையில் அமர்ந்த வண்ணம்*)
உங்கள் கட்டளை எதுவுங் கேட்பேன். ஆனல் வன்னியரோடு சமாதானம் மட்டுங்

கேட்க ஒருப்படேன். (*தன் நெஞ்சிலே தட்டி*) என்னுடம்பில் ஒருதுளி இரத்தம் இருக்கு மட்டும் வன்னியரை — இந்தப் படுகொலை காரரைக் கொன்றே தீருவேன். கட்டாயம் வெற்றி காணுவேன் இது சத்தியம், சத்தியம்.

**பரநிருப :**

(*தன் தாடியை உருவிவிட்டு*) தம்பி, நான் அதற்குத் தடை சொல்லவில்லை. உனது வஞ்சினப்படியே செய்துகொள்; ஆனால் உனக்கும் இந்தச் சபையிலுள்ளோருக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எமது அண்ணனுர் இறந்த செய்தியைக் கண்டியி லிருந்து வரும்வழியிற் கேட்ட நேரந்தொட க்கம் இதைப்பற்றி மிகவும் அலசி ஆலோ சித்துள்ளேன்.

**அரசன் :**

(*நிமிர்ந்து பரநிருபசிங்கனைப் பார்த்து*) எதைப்பற்றி?

**பரநிருப :**

அரசே, என் மனநிலை வரவர மாறிக் கொண்டு வருகின்றது. ஆன்ம ஈடேற்றத் திற்கு வேண்டிய வழியையே என் மனம் நாடுகின்றது. அவ்வழியில் நின்று ஒழுகவே பெரிதும் விரும்புகிறேன். அரசபாரம் அதற்குத்தடையாக இருக்கும். ஆகையால் இந்த இளவரசபாரத்தைத்தம்பி சங்கிலியே ஏற்றுத் தங்களுக்குப்பின் அரசபாரத்தை யும் கொண்டு நடத்த வேண்டும் என்பதே என் எண்ணம்.

**[அவைக்களத்திலுள்ளோர் யாவரும் வியப்போடு ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்.]**

**சங்கிலி:**

(*எழுந்து நின்று மிகவும் தாழ்மையாக*) அண்ணு! தமையன் இருக்கத் தம்பி அர

சால்வது எப்படி? அண்ணன் அரசைத் தம்பி எடுத்தாளுவது தவறு; அது அரச முறையும் அல்ல...............

பரநிருப :

இளவரசுப் பட்டத்திற்கு நீயே தகுந்தவன். ஆண்டில் யான்உனக்கு மூத்தவன்தான்; என்றாலும் அரசியல் அறிவிலும் ஆற்றலிலும் நீயே மூத்தவனாகி விட்டாய். இதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். ஆகையால் நானே மனம் மகிழ்ந்து தரும் பதவியை ஏற்றுக் கொள். நான் உன் அண்ணன் அல்லவோ? உன் அண்ணனார் சொல்லுக்கு அட்டி சொல்லாதே.

சங்கிலி :

(*தயக்கத்துடன் கம்மிய தூரலில்*) அண்ணா...... எ...ன் அண்ணா..... ... இ...து...... எங்......

அரசகேசரி :

இளவரசரே, அண்ணன் சொல்லைக் கேட்டு அரசை ஏற்றுக்கொள்வதிலும் குற்றமில்லை. மூத்தோன் இருக்க இளையோன் ஆட்சி புரிதல் பண்டைக் காலத்திலும் நிகழ்ந்தது தானே. வீட்டுமன் தன் அரசியலைத் தம்பியர்க்குக் கொடுக்கவில்லையோ? இராமன் கானகம் செல்லப் பரதன் அயோத்தியை ஆளவில்லையோ?

அப்பாமு :

(*செருமிக் கொண்டு அரசனை நோக்கிக் கைகளை விரித்து நீட்டிய வண்ணம்*) இது எனக்கு ஒன்றுமாகத் தெரியவில்லை.

அரசன் :

என் புதல்வரின் கருத்து எதுவோ அதுவே என் கருத்தும்; ஆனால் எனக்கோ வயதாகி விட்டது. அரசபாரத்தைத் தாங்கி நடத்த என்னால் இனிமுடியாது. பரநிருபசிங்கா! உன்னிடமே அதை ஒப்படைத்தல் அரச முறை இப்பொழுதே ஒப்படைக்கிறேன். ஏற்றுக்கொள்.

பரநிருப :

(*வணங்கி அரசனை நோக்கி*) ஏற்றுக்கொண்டேன். (*திரும்பிச் சங்கிலியை நோக்கி*) தந்தேன் உனக்கே......... (*தன் இரு கைகளையும் உயர்த்தி*) யாழ்ப்பாணத்தரசே வாழ்க! சங்கிலி வாழ்க!! (*எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்*) சட்டநாதர் உனக்குத் திருவருள் புரிவாராக. யாழ்ப்பாணத்தரசரின் புகழும் வீரமும் குறையா வகையில் பரிபாலிப்பது உன் கடன்.

சங்கிலி :

அண்ணா! இது என்ன, கனவோ, நனவோ, தெரியவில்லை. இந்தப் பதவியை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உங்கள் கட்டளையை மறுக்கவும் முடியாது. சரி, அப்படியானால் நன்மையிலும் தீமையிலும் நீங்களே எனக்கு வழிகாட்டியாய் இருப்பதாக வாக்குறுதி தந்தால் நான் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வேன்.

பரநிருப:

துணைவனுக்குத் துணைவனாகவும் மந்திரிக்கு மந்திரியாகவும் இருந்து எல்லாவற்றையும் நானே நடத்துவேன். நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. தம்பி, என் சொல்லைத் தட்டாதே. அரசை ஏற்றுக்கொள்.

அரசன் :

என் பொறுப்பு நீங்கியது. (*அரசகட்டிலிலிருந்து இறங்கி இருவருக்கும் நடுவில் நின்று இடது கையாலே பரநிருபசிங்கனை அணைத்துக் கொண்டு அவனை நோக்கி*) உன் அறிவை மெச்சினேன். (*வலது கையைச் சங்கிலியின் தலைமேல் உயர்த்தி*) உன் ஆண்மையை வாழ்த்தினேன். யாழ்ப்பாணத்தரசனே வாழ்க! தமிழ்க் குடிகளோங்குக. (*அவைக்களத்திலிருந்தோரை நோக்கி*) இத்துடன் அரசசபை கலைந்தது.

திரை

*உறுப்பு 1* *களம் 2*

இடம்:

நல்லூர், அரசன் அவைக்களம்.

**[சங்கிலி தனியே கைகட்டிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனை யில் மூழ்கியவண்ணம் அங்கும் இங்கும் உலாவுகின் ருன். அவனுடைய நண்பனும் மெய்காப்பாளனுமாகிய வீரமாப்பாணன் அவன் அருகே வருகின்ருன்]**

வீரமா:

(*சற்று நின்று அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு*) *அரசே! இவ்வளவு ஆழ்ந்த யோசனைக்குக் காரணம் என்ன?*

சங்கிலி:

*ஒன்...று...ம்......இல்...லே.*

வீரமா:

*என்ன ஒன்றுமில்லை என்கிறீர்கள்? அகத்தில் நிகழ்வதை முகத்திலே காணலாம். உங்கள் மனம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. நீங் கள் யோசிப்பதை எனக்குச் சொன்னுல் நானும் அதைப்பற்றி ஆலோசித்து உங்கள் கவலையைப் போக்க வழி தேடுவேன்.*

சங்கிலி:

*எனது கவலையை ஒருவரும் தீர்க்கமுடியாது. கனவிலும் எதிர்பாராத சுமை இன்று என் தலைமேல் ஏறியிருக்கிறது. அண்ணுர் பரநிருபசிங்கர் அரசபொறுப்பிலிருந்தும் தப்பிவிட்டார். நான் இந்த அரசபாரத்தை எப்படிக் கொண்டு நடத்துவேன்?*

வீரமா:

*அதற்கு என்ன யோசனை? சிறந்த அறிவாளி யான உங்கள் தகப்பனுரும் இருக்கிருர். பரநிருபசிங்கரும் உங்களுக்கு வழிகாட்டி யாக இருப்பேன் என வாக்குறுதி தந்திருக்*

கிறார். அல்லாமலும் அரசனுக்குவேண்டிய இயல்புகளெல்லாம் உங்களிடத்தே பொருந்தியிருக்கின்றன. ஆகையால் அரசபதவிக்கு நீங்களே தகுந்தவர். இதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி ஏன் இவ்வளவு யோசனை. குடிசனங்களும் உங்களைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனென்றால் யாழ்ப்பாண அரசன்மேல் பிறநாட்டு அரசர்கள் பலர் இப்போது பொறாமைகொண்டிருக்கிறார்கள். எங்கள் இராச்சியத்தை விழுத்துவதற்குப் பலமுயற்சிகள் செய்கிறார்கள். தெற்கே சிங்கள அரசரும் வன்னியரும் எம்மை அடக்கத் தருணம் பார்த்திருக்கிறார்கள். வடக்கே நாயக்க மன்னர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பறங்கிகளும் யாழ்ப்பாணத்தை மட்டுமல்லாமல் இலங்கை முழுவதையும் கைப்பற்றிக்கொள்ள முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தநேரத்தில் அறிவும் ஆண்மையும் உடைய அரசனே வேண்டும். ஆகையால் நீங்களே பட்டத்திற்குத் தகுந்தவர்கள்.

**சங்கிலி:**

அதெல்லாம் சரி, நான் அரசனாகவந்தால் குடிசனங்கள் என்ன நினைப்பார்கள்?

**வீரமா:**

நீங்கள் அரசனாகும் செய்தியைக்கேட்டு அவர்கள் அடங்கா மகிழ்ச்சியடைவார்கள். என்பது நிச்சயம். (*புன்னகை புரிந்து கொண்டு தாலை மாற்றி*) அரச பொறுப்பைப் பற்றியதுபோதும். உங்கள் வடிவழகியைப் பின்பு கண்டீர்களோ?

**சங்கிலி :**

இல்லை...இல்லை...நான் அவளை ஒரு கிழமையாகக் காணவில்லை.

**வீரமா :**

*(தலையை அசைத்து)* ஓகோ! அப்படியோ? ஏன் இன்னும் அவளைப்போய்க் காணவில்லை.

**சங்கிலி :**

காணவேண்டுந்தான். ஆனால் எப்படிக் காணலாம் என்று தெரியவில்லை. இந்த நாட்களில் அவளைக் காணுவது மிகவும் வில்லங்கமாயிருக்கிறது.

**வீரமா :**

சரிதான். நான் மறந்துவிட்டேன். உங்கள் நிலையும் மாறிவிட்டதல்லவோ? இப்போது நீங்கள் அரசர். முன்போல நினைத்தபடி நடக்கமுடியாது.

**சங்கிலி :**

சும்மா பகிடிபண்ணுவதை நிறுத்திவிடு. அவளைக் காணுவதற்கு என்மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு வழிதேட மாட்டாயோ?

**வீரமா :**

*(தலையைச் சொறிந்துவிட்டுக் கடைக்கண்ணாற் பார்த்துக் கொண்டு)* கட்டாயம். எங்கள் அரசர் பெருமானுக்கு இத்தொண்டினைச் செய்யாவிட்டால் நான் இருந்தென்ன? இறந்தென்ன?

திரை

இடம் :

நல்லூர், அரசன் அவைக்களம்.

[அப்பாமுதலி, தனிநாயகமுதலி, அரசகேசரி, முத்து லிங்கமுதலி, தளபதி இமையாணன், அடியார்க்கு நல்லான் உட்படப் பிரதானிகள் யாவரும் தங்கள் தங்கள் இருக்கைகளில் இருந்து அரசனின் வரவை எதிர்பார்த் துக்கொண்டிருக்கின்றனர். அப்பாமுதலி தலையையும் தாடியையும் தடவிக்கொண்டிருக்கிறான். தனிநாயக முதலி பல ஏட்டுச்சட்டங்களைப் புரட்டிப்பார்க்கிறான். ஆல வட்டம் தாங்கியவண்ணம் இரு சேவகர் வருகின்றனர். அவர்களுக்குப் பின்னால் கட்டியக் கோலைத் தாங்கிக் கொண்டு கட்டியகாரன் வருகின்றான். அவனுக்குப்பின் வீரமாப்பாணன் வருகின்றான்]

கட்டிய :

*(தனது கட்டியக் கோலை உயர்த்தி)* இராசாதி இராசன் இராசமார்த்தாண்டன் இராசகம்பீரன் சங்கிலி மகாராசா சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை! பராக்கு!

[உடனே அவைக்களத்தில் இருந்த யாவரும் எழுந்து அசையாது நிற்கின்றனர். சங்கிலி அரசு கட்டிலில் ஏறுகின்றான். யாவரும் தங்கள் தங்கள் இருக்கையில் அமருகின்றனர். அதன்பின் வீரமாப்பாணன் உட்புகுந்து தனது இருக்கையில் அமருகின்றான். அப்பாமுதலி வீரமாப்பாணனைக் குறிப்பாக உற்றுநோக்குகின்றான். கட்டியகாரன் முதலியோர் வெளியேறுகின்றனர்]

சங்கிலி :

*(தனிநாயகமுதலியைப் பார்த்து)* அமைச்ச ரவர்களே! இன்று நாம் விசாரிக்கவேண்

டிய அலுவல்கள் என்ன? அவற்றைத் தெரிவிப்பீர்களாக.

தனிநாமு :

(எழுந்து நின்று) அரசே! இன்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டியவை பின்வருமாறு: (ஏட்டுச்சட்டத்தை எடுத்துப் படிக்கின்றான்) முதலாவதாக வடமராட்சிக் கலகம். இரண்டாவதாக மறவன் புலவில் நடந்த கொள்ளை. மூன்றாவதாக வன்னியர் புரியும் சூழ்ச்சி.

சங்கிலி :

என்ன, மறவன்புலவிற் கொள்ளையோ? எமது நாட்டிலும் கொள்ளை என்ற பெயரைக் கேட்கலாமோ? அப்படிக் கொள்ளையடித்தோர் யார்? விளங்கக் கூறுங்கள்.

தனிநாமு :

அரசே! இராமநாதபுரத்திலிருந்து மறவர் பலர் தங்கள் பேரனார் காலத்தில் மறவன் புலவிலே வந்து குடியேறினர். இது தங்களுக்குத் தெரியும். இதுவரையும் அவர் அடங்கி ஒடுங்கி நடந்துவந்தனர். ஆனால் இப்பொழுது யாழ்ப்பாண அரசுக்கு நாலா பக்கத்திலும் பகை இருப்பதால் இதுவே தகுந்த தருணம் என எண்ணி மறவருக்குரிய சுயபுத்தியைக் காட்டத் தொடங்கிவிட்டனர். இந்த மறவருக்குப் பொழுதுபோக்கும் களவு; விளையாட்டும் களவு; வாழ்க்கைத் தொழிலும் களவு; எப்போது பார்த்தாலும் மறவன்புலவுப் பக்கத்தில் களவும் கொள்ளையும் கொலையுந்தான். (இருக்கிறான்)

அடிநல்:

அரசே! இவர்களை அடக்காவிட்டால் நாட்டிலே கொள்ளையும் களவும் குறையமாட்டா.

சங்கிலி :

(தளபதி இமையாணனைப் பார்த்து) தளபதி இமையாணனாரே, இதைச் சிறிது கவனியுங்கள்.

இமையா :

(எழுந்து நின்று) ஓம் அரசே, கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து விபரங்களையெல்லாம் நாளைக்கு உங்களுக்குத் தெரிவிப்பேன். நாளை இரவே மறவன் புலவிற்குப் படை வீரர் சிலரை அனுப்பலாம்.

சங்கிலி :

(தனிநாயக முதலியைப் பார்த்து) சரி, இனி வடமராட்சிக் கலகத்தைப்பற்றி என்ன?

தனிநா மு :

(எழுந்து நின்று) கோப்பாய்த் தலைமைக்காரனும் அவன் ஆட்களும் வடமராட்சிக் கோயிற் திருவிழா ஒன்றுக்குச் சவாரி வண்டியிற் போனார்கள். புருப்பொறுக்கி ஆலின் கீழ் மாடுகளை அவிழ்த்து ஆறக் கட்டியிருக்கும்போது அங்கே நின்ற அவ்வூர்ச் சிறுவன் ஒருவன் மாட்டின் குஞ்சமொன்றை அவிழ்த்துக் கொண்டோடினான். அதைக் கண்ட கோப்பாய்த் தலைமைக்காரன் “பிடியடா அவனை. மாட்டின் குஞ்சத்தை அவிழ்த்துக் கொண்டோடுகிறான்” என்று கூச்சலிட்டான். அவனுடைய ஆட்கள் அத்தச் சிறுவனைப் பிடித்துக் குஞ்சத்தைப் பறித்து அவனைக் குட்டிக் கலைத்தனர். சிறுவன் உடுப்பிட்டித் தலைமைக்காரனின் மருமகன். இச் செய்தியைக் கேள்விப்பட்ட உடுப்பிட்டித் தலைமைக்காரனும் அவன் கையாட்களும் விரைந்துபோய்க் கோப்பாய்த் தலைமைக் காரனுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் அடித்துக் கலகம் உண்டாக்கினர். அது மட்டுமல்லாமல், கோப்பாய்த் தலைமைக் காரனைச் செருப்பைக் கழற்றும்படி சொல்லி ‘‘செருப்பைக் கையிலே தூக்கிக் கொண்டு நடவடா’’ என்று கட்டளையிட்டனர். கோப்பாய்த் தலைமைக்காரனும் அவன் ஆட்களும் உடுப்பிட்டியாருக்குப் பயந்து கோயிலுக்குப்

போகாது திரும்பிக் கோப்பாய்க்குப் போய் விட்டார்கள். இவர்கள் அடிபிடி நாடகத்திற்கு இதுவே முதல் அங்கம். அதன்பின் உடுப்பிட்டித் தலைமைக்காரன் தன்னுடைய பரிவாரங்களுடன் கள்ளியங்காட்டுக்கு ''அந்திரட்டி வீடு'' ஒன்றுக்குப் போகும் போது தண்ணீர் விடாய்த்ததினுல் எல்லாரும் இருபாலையில் இறங்கி ஒரு பனங்கூடலுக்குப் போய்க்கள்ளுக் குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கே வந்ததை அறிந்த கோப்பாய்த் தலைமைக்காரன் தனது கையாட்களுடன் சென்று பெருங்கலகம் உண்டாக்கினுன். அப்பொழுது நடந்த சண்டையில் உடுப்பிட்டித் தலைமைக்காரன் கோப்பாய்த் தலைமைக்காரனுடைய முன் வாய்ப் பல்லிரண்டை அடித்து உடைத்து விட்டான். இது இரண்டாம் அங்கம். இந்த நாடகம் தொடர்ந்து நடைபெறும் என அறியக் கிடக்கிறது. இது நடவா வண்ணம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (*இருக்கின்றன்*)

**அப்பா மு:**

கோப்பாயான் கள்ளன். அவனை வென்ற கள்ளன் வடமராட்சியான்.

**அடி. நல்:**

முறைக்கு முறை வடமராட்சிப் பகுதியில் இப்படித்தான் நடக்கிறது. அங்கிருப்பவர்கள் முட்டாள்கள். மேலும் மேலும் இப்படி நடவாமல் இவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும்.

**இமையா:**

கலகம் செய்த இரண்டு தலைமைக்காரரையும் இங்கு வரும்படி கட்டளையிட்டு விசாரணை செய்ய வேண்டும்.

**சங்கிலி:**

அவ்விடங்களுக்கு விரைவில் நானே போக

எண்ணியிருக்கிறேன். அப்பொழுது எல்லா வற்றையும் நேரிலே பார்த்துக் கொள்ளுவேன்.

**தனிநா மு:**

(எழுந்து நின்று) அடுத்தபடியாக நாம் எடுத்துக் கொள்வது:- கொட்டியாரத்து வன்னியன், மட்டக்களப்பு வன்னியன், பழுகாமத்து வன்னியன் ஆகிய மூவரோடுங் கூடி முள்ளியவளை வன்னியன் கரைச்சிப் பகுதியிற் புகுந்து கலகம் விளைத்து அங்குள்ள மாடுகளைப் பிடித்து மட்டக்களப்புக் கரவாகு வயலுக்கு உழவு வேலைக்குச் சாய்த்துக்கொண்டு போகின்றனும். அன்றியும் அவ்வன்னியர் யாவரும் ஒன்று சேர்ந்து முடிக்குரிய யானைகள் பலவற்றைப் பிடித்துப் பறங்கியருக்கு விற்றுவிட்டாராம்.

**சங்கிலி :**

அதற்கு மருந்து என் கையில் இருக்கின்றது. வன்னியருக்குத் தகுந்த தண்டனையளித்தல் வேண்டும்.

**அப்பா. மு :**

அது தான் சரி. வன்னியர்மேற் படையெடுக்கும் நாள் எந்நாளோ என்று நாங்களெல்லோரும் காத்திருக்கிறோம்.

**சங்கிலி :**

இந்த வன்னிச் சுண்டெலிகளை அடித்துத் துரத்தவேண்டும்.

**தனிநா. மு:**

அரசே! அவர்களை அப்படி வலிமை குறைந்தவர்களென்று எண்ண வேண்டாம். மீனுக்கு வாலைக் காட்டிப் பாம்புக்குத் தலையைக் காட்டுவது வன்னியர் பிறவிக்குணம். எந்தப் பக்கம் வலிமை இருக்கிறதோ அந்தப் பக்கம் திரும்புவார். கண்டி இராச்சியம் வலுவடைந்திருந்தால் கண்டி அரசனுக்குத் தாளம் போடுவார். யாழ்ப்பாணத்தரசு

வலுவடைந்தால் கண்டி அரசனைக் கைவிட்டு யாழ்ப்பாணத்தரசனை அண்டுவார். பொல்லாத வஞ்சகர்கள்.

அப்பா. மு :

*(கைவிரலைச் சுண்டிவிட்டு)* அவர்கள் படுபேயர்கள். இம்மென்னும் பொழுதில் அவர்களை மடக்கி விடலாம்.

**[அப்பொழுது வீரமாப்பாணன் அப்பாமுதலியை நிமிர்ந்து பார்க்கின்றான். பின்னர் அரசனைப் பார்த்துவிட்டு நாடிக்குக் கையைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றான்.]**

அரசகேசரி :

அரசே! எதையும் தீர ஆலோசித்துச் செய்தல் வேண்டும்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறாரல்லவோ?

சங்கிலி :

புலவரேறே! தாங்கள் சொல்வதும் சரிதான். எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து செய்தல் நன்று. *(தனிநாயகமுதலியை நோக்கி)* வேறும் ஏதாவது உண்டோ?

தனிநா. மு :

வேறொன்றுமில்லை.

சங்கிலி :

சரி, இத்துடன் மந்திராலோசனை முடிவடைந்தது.

**[சங்கிலி அரசுகட்டிலிலிருந்து இறங்கி வருகின்றான். யாவரும் பணிவுடன் எழுந்து நிற்கின்றனர். அப்பா முதலி உரத்த குரலில் "கட்டியகாரா!" "கட்டியகாரா!!" எனக் கூப்பிடுகின்றான். கட்டியகாரனும் ஏனையோரும் வருகின்றனர். ஆலவட்டம் முதலியவை முன்செல்ல அரசன் போகின்றான். அதன்பின் மற்றெல்லோரும் போகின்றனர்.]**

திரை

உறுப்பு 1 களம் 4

இடம்:

நல்லூர் அரசன் அவைக்களத்து வாசற்புறம்.

**[அப்பாமுதலி அங்கும் இங்கும் உலாவிக்கொண்டு நிற்கின்றான். முத்துலிங்கமுதலியும் அவனுக்கு அருகில் நிற்கின்றான்]**

முத்து. மு:

என்ன, தங்களுடைய பல்லக்கு வரப் பிந்திவிட்டதோ? என்னுடைய பல்லக்கு வந்து விட்டது. அதில் தங்களையும் ஏற்றிக் கொண்டு தங்கள் வீட்டிலே விட்டுச் செல்கிறேன்.

அப்பா மு:

வேண்டாம், வேண்டாம், முதலியாரே. விரைவில் எனது பல்லக்கும் வந்துவிடும். தங்கள் பல்லக்கில் நான் வந்தால் தங்களுக்கும் தொல்லை; என் பல்லக்குக்காரரும் வந்து ஏமாந்து திரும்பிப் போக நேரிடும்.

முத்து. மு:

தாங்கள் சொல்வது சரிதான். நான் போய் வருகிறேன். வணக்கம். (போகப் புறப்படுகின்றான்.)

அப்பா மு:

என்ன அவசரம் முதலியார். சிறிது நில்லுங்கள். எனது பல்லக்கு வந்ததும் போகலாம்.

முத்து. மு:

நான் போகவேண்டும். சரி, தங்களுக்காகச் சிறிது நேரம் நிற்கிறேன்.

அப்பா மு:

(சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து விட்டுத் தாழ்ந்த தரலில்) அதெல்லாம் சரி, முதலியாரே, ஆ...ன...ல் இங்கே நடப்பதொன்றும்

எனக்குப் பிடிக்கவில்லை. எல்லாம் தலை கீழாக நடக்கிறது.

முத்து. மு:

வன்னியருடைய கலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்களோ? வன்னியான் அந்தநாள் தொட்க்கம் யாழ்ப்பாணத்தானுக்கு முட்டுக்கட்டை தானே?

அப்பா மு:

தாங்கள் சொல்லுவதும் சரிதான். நான் கருதுவது அதுவல்ல. ஆருக்கோ போக வேண்டிய அரசபதவி வேறுருக்கோ போய் விட்டது. இதெல்லாம் முறையல்ல.

முத்து. மு:

ஓகோ! அதையோ குறிக்கிறீர்கள். நெய்க் குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை. அது போல பரநிருபசிங்கன் பட்டத்தை வேண் டாம் என்றது..............

அப்பா மு:

சங்கிலிக்கு வாய்த்தது. (*முத்துலிங்கமுதலி அருகில் நெருங்கி*) முதலியாரே, இந்த அலுவலில் நீங்களும் நானும் ஒன்றுதான்.

முத்து. மு:

இதோ பெரிய இடத்து அலுவல். இதைப் பற்றிப் பேசிப் பயன் என்ன என்று நினைத் துச் சும்மா விருந்தேன். தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம். ஏதோ நாமுண்டு நம்முடைய பாடுண்டு. (*கையை விரிக்கின்றன்.*)

அப்பா மு:

முதலியார், நீங்கள் சொல்வதும் சரிதான் என்ருலும் குடிகளுக்காகவே செங்கோல். செங்கோலுக்கல்ல குடிகள். செங்கோல் கோடிஞல் அதைத் திருத்தி வைப்பது குடி கள் கடமை. பரநிருபசிங்கன் அரசஞகாத தால் அரசவழிமுறை பிழைத்து விட்டது. இது முறையல்ல. அவன் மறுத்தபொழுது அவன் மகன் பரராசசிங்கமுதலிக்கு அப்

பதவியைக் கொடாதது பெருந்தவறு. அரச முறைப்படி முடியைப் பெறவேண்டியவன் அவனே.

முத்து. மு :

அதிலே அவ்வளவு குற்றமில்லை. சங்கிலியனும் ஒரு வகையில் பட்டத்துக்கு உரிமையுடையவன் தானே. அதோடு அரசனுக வருவதற்கு முன்னரே நாட்டுக்காக நல்லாய் உழைத்திருக்கிருன். இனியும் உழைக்கக் கூடிய ஆற்றல் உடையவன். என்ருலும் எனக்கு அவனிலே அவ்வளவு பிடிப்பு இல்லை.

அப்பா மு :

எப்படிப் பிடிப்ப வரும்? நேற்று முளைத்த பயல் தானே. நாங்கள் சொன்னபடி அங்கும் இங்கும் போய்க் கலகங்களை அடக்கிக் கொண்டு திரிந்தவன். இப்பொழுது எங்களுக்குக் கட்டளையிடும் நிலைக்கு வந்து விட்டான். காலம் அப்படியாய் விட்டது.

முத்து. மு :

இவைகளை யெல்லாம் பேசி வரும் பயன் என்ன? நாங்கள் அவன் காலாலிட்டதைத் தலையால் செய்து முடிக்கவேண்டியவர்கள் தானே.

அப்பா மு :

உங்கள் பேச்சு எனக்கு அதிசயமாக இருக்கிறது. உலகத்தில் செய்து முடிக்க முடியாதது ஏதுமிருக்கிறதோ? மனம் வைத்தால் மலையையும் பிளந்தெறியலாம். அரசன் என்ருல் அரும்பெருங் கடவுளோ? அரசன் என்னும் தேர் அமைச்சன் என்னும் அச்சிலேதான் ஓடுகின்றது. அமைச்சன் நினைத்தால் எதையும் செய்யலாம்; ஆக்கினும் ஆக்கலாம், அழிக்கினும் அழிக்கலாம். நாட்டைச் சுமந்து நிற்பவன் சங்கிலியல்ல; நாமிருவருமே. அரசன் தகுதியில்லாதவனுனல் அவனை அழிப்பது எமது கடன். நாடும்

அதனையே விரும்பும். சங்கிலியைத் தொலைத்தாலன்றி என்மனம் சாந்தி அடையாது.

முத்து. மு:

அதைச் செய்து முடிப்பது எப்படி?

அப்பா மு:

அண்டிக் கெடுக்கும் விஞ்ஞானக்கலையில் நான் கைதேர்ந்தவன். என்னுடன் நீயும் ஒத்துழைத்தால் சங்கிலியை இருந்த இடமும் தெரியாது தொலைத்து விடலாம். நான் இப்பொழுது செய்துவரும் வேலை எல்லாம் இதற்காகவே. (*'தடார்' என ஒரு ஒலி கேட்கின்றது. இருவரும் பேசுவதை விடுத்துத் திடுக்கிட்டு ஒலி வந்த திக்கை நோக்கித் திரும்பிப் பார்க்கின்றனர். முத்துலிங்க முதலி அஞ்சி நடுங்குகின்றான், அப்பா முதலி தாலை மாற்றி*) ஒன்றுமில்லை. பயப்படாதே. பட்டுக்குடைதான் விழுந்தது. இன்று சங்கிலியை வன்னியருக்கு எதிராகத் தூண்டி விட்டிருக்கிறேன். உடுப்பிட்டித் தலைமைக்காரனுக்கும் கோப்பாய்த் தலைமைக்காரனுக்கும் சங்கிலியின் மீது வெறுப்புண்டாகும்படி தூபம் போட்டு இன்னும் பகையை மூட்டுவேன். மறவன்புலவுக் கொள்ளைக் கூட்டத்தாரை அவனுக்கு மாருக ஏவி, அடுத்துக்கெடுக்கும் ஐந்தாம் படையினராகப் பயன்படுத்துவேன். இதுவும் போதாவிட்டால் என் கையில் வேறு பாணங்களும் இருக்கின்றன. வேண்டிய வேண்டிய நேரத்தில் அவை வெளிக்கிளம்பும்.

முத்து. மு:

(*தலையை அசைத்து*) அருமை! அருமை!! ஆனால் இன்னுமொன்று. எமது முயற்சிக்குத் துணையாக நாம் வேறும் நம்பிக்கையான ஆட்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதோ? முக்கியமான சிலரையாவது

நமக்கு உதவியாகச் சேர்த்துக்கொண்டால் நல்லது. புலவர் அரசகேசரியைப்பற்றி என்ன நினைக்கிறாய்? அவர் பரநிருபசிங்கரின் தாய்மாமனல்லவோ?. ஆகையால் தம் இனத்தவரான பரநிருபசிங்கரிலும் அவர் மகன் பரராசசிங்கமுதலியிலும் புலவருக்கு இயற்கையாகவே கரிசனை இருக்குமே.

அப்பா மு:

அவரோ? அவர் புத்தகப் பூச்சி; இப்படியான அலுவல்களில் தலையிடமாட்டார். அரசநீதி, அறநெறி என்றெல்லாம் பிதற்றுவார்.

முத்து. மு:

மந்திரி அடியார்க்கு நல்லானைப்பற்றி என்ன எண்ணுகிறாய்? ஏதோ தான் சிலப்பதிகார உரையாசிரியர் பரம்பரையைச் சேர்ந்தவனென்று தன்னைப்பற்றிப் புழுகிக்கொண்டு திரிகிறான். கொஞ்சம் புத்திசாலி போலவும் தோற்றுகிறான்.

அப்பா மு:

அவனோ? அவன் தன்னைப்பற்றி அதிகமாகத் தம்பட்டமடிக்கிறவன். சில காரியங்களில் நல்ல ஆலோசனை சொல்லக்கூடியவன் தான். ஆனால் தான் படித்தபடி நடக்கவேண்டுமென்ற பேய்த்தனமான கொள்கையுள்ளவன். உலகத்திற் பிழைக்கும் வழி தெரியாத மூடன். அவனாலும் பிரயோசனமில்லை என்றாலும் என்ன, எமக்கு இவர்களிலும் பார்க்க அதிகமாக உதவக்கூடிய வேறு பல நண்பர்கள் இருக்கிறார்கள்.........................

**[அப்பொழுது காவலாளன் உள்ளே வருகிறான். விறுக்கென இருவரும் திரும்புகின்றனர்]**

முத்து. மு:

என்ன சங்கதி?

அப்பா மு:

என்ன வேண்டும்?

காவலாளன் :

*(அப்பாமுதலியைப் பார்த்து)* ஐயா அவர்களின் பல்லக்கு வந்திருக்கின்றது.

அப்பா மு :

*ஓ! அதுவோ?*

**[அப்பாமுதலியும் முத்துலிகங்முதலியும் ஐயத்தோடு காவலாளனை நோக்குகின்றனர்]**

திரை

*முதலாம் உறுப்பு முற்றிற்று.*

உறுப்பு 2 களம் 1

இடம் :

அப்பாமுதலி வீட்டுப் பூங்கா.

[வடிவழகி தனியாகப் பூப்பறித்துக்கொண்டு நின்று பின்வரும் பாட்டைப் பாடுகிறாள்.]

### தரவு கொச்சகக் கலிப்பா.

மல்லிகைநற் சம்பங்கி மணங்கொழிக்கு மிருவாட்சி
அல்லிகொட்டி தாமரைமே லடர்ந்துலவும் வண்டினங்காள்
மல்லலுறு தார்வேந்தன் மாண்புசெறி திண்புயத்தைப்
புல்லிநிற்க விழைகின்றேன் போந்தவற்குக் கூறீரோ?

வளமிகுந்த யாழ்ப்பாண மென்னுதமிழ் நாடதிலே
தளர்தலிலாத் தனிச்செங்கோல் தகைமையுடன் றோச்சும்
தளவுநிறை யமுனரி தண்மருந்து[1] மலைக்கிறைவன்
அளகைநிகர் நல்லூரான் அருகில்வரக் கூறீரோ?

தகைமைபெறு தமிழ்ச்சங்கம் தனைநிறுவிச் சகமதனில்
வகைமையுறத் தமிழ்வளர்க்கும் வாகைசெறி வலிமிகுத்தோன்
பகடுபொலி சிங்கைநகர் பகர்கிரி மலைக்கரையன்
பகைமையிலாத் தமிழ்வேந்தன் பாங்கில்வரக் கூறீரோ?

### எண்சீர் விருத்தம்.

மண்டுபுகழ் நானில வளங்களு மிகுந்தே
மருவரிய வழகோடு மல்கித் துலங்கும்
மிண்டரிய யாழ்ப்பாண மேன்மையுறு நாடாம்
மிறலுடைத் தமிழர்நற் றேசம் புரந்து
தொண்டுபுரி சிங்கைநக ராரியரின் தோன்றல்
துடிமறவர் சூழுபடை நாயக்கர் சிங்களர்
சண்டைபுரி வன்னியர்க ளாகியோர் காலன்
ரல்புமிகு வேந்தனும் வருமோ விரைந்தே.

---

1. மருத்துமலை-மருத்துமாமலை; கள்ளியங்காட்டில் செகராசசேகரனால் மருத்து மூலிகைகளை வளர்த்தற்கென அமைக்கப்பட்ட செய்குன்று.

(செங்கமலம் வருகின்றாள்)

செங்கமலம்:

அழகு, என்ன அரசர் உன்னிடம் முன்போல அடிக்கடி வருவதில்லையோ? அவரை இந்தப் பக்கம் கண்டு நெடுநாளாகி விட்டன.

வடிவழகி:

அலுவல் மிகுதியாய் இருப்பதினாற்போலும் இந்நாட்களில் அவர் இங்கு வருவது குறைவு. வராத காலங்களில் தம் நண்பர் வீரமாப் பாணர் மூலம் ஓலை அனுப்புவார். நேற்றும் வீரமாப்பாணர் ஓலையொன்று கொண்டு வந்து தந்தார். அத்துடன் அரசர் முன்போல அடிக்கடி இங்கு வருவதற்கும் சில வசதிக் குறைவுகள் ஏற்பட்டுள்ளன. கட்டுக்காவலும் கண்காணிப்பும் முன்னரிலும் பார்க்கக் கூடிக்கொண்டன.

செங்கமலம்:

அப்படியோ சங்கதி? உதைப்பற்றி நானும் சிறிது கேள்விப்பட்டேன். உன் தந்தையார் உன்னைப் பரநிருபசிங்க முதலியின் மகன் பரராசசிங்கமுதலிக்கு மணஞ் செய்து கொடுக்க எண்ணியுள்ளாராம். அவனும் உன்னை மணமுடிக்க ஆசைகொண்டு திரிகின்றானும்.

வடிவழகி:

செங்கமலம், நீ சொல்வது எனக்குப்பெரும் வியப்பாக விருக்கின்றது.

செங்கமலம்:

என்ன ஒரு வகையாய் ஒன்றும் தெரியாதவள் போலப் பேசுகிறாய்? உண்மையை ஒளிக்காமற் சொல்லு. இதைப்பற்றி ஊரெல்லாம் கதை பரவி விட்டது.

வடிவழகி:

உன்மேல் ஆணை (செங்கமலத்தின் தலைமீது அடித்து) செங்கமலம், இதெல்லாம் வீண் கட்டுக்கதை.

செங்கமலம்:

அப்படி உன் தந்தையார் பரராசசிங்க முதலிக்கு உன்னை மணம் முடித்துக்கொடுக்க எண்ணினால் சங்கிலியை மறந்து விடுவது தானே?

வடிவழகி:

(கோபத்துடன்) அதெல்லாம் ஒருபோதும் நடவாது.

செங்கமலம்:

கோபிக்காதே, இராசாத்தி! சும்மா சொன்னேன். நேற்று ஓலை வந்ததென்றாய். என்னவாம்?

வடிவழகி:

ஒன்றுமில்லை. இன்றைக்கோ நாளைக்கோ என்னை வந்து காண்பதாக அதில் எழுதியிருந்தது.

செங்கமலம்:

உதெல்லாம் பழைய செய்தி. இன்று காலை எங்கோ வெளியூருக்குப் புறப்பட்டுப் போய் விட்டாராம். திரும்பி வர மூன்று கிழமை ஆகுமாம்.

வடிவழகி:

பொய்! உனக்கெப்படித் தெரியும்?

செங்கமலம்:

என்ன பொய் என்கிறாய்? முத்துலிங்க முதலியோடு உன் தகப்பனார் பேசிக்கொண்

டிருக்கும்போது நான் ஒட்டி நின்று கேட்டேன்.

வடிவழகி

உண்மைதானே? *(செங்கமலம் உண்மையெனத் தலை அசைக்கிறாள். வடிவழகி வாட்டமடைகின்றாள்.)*

செங்கமலம்

*(அதைக் கண்டதும் புன்னகை புரிந்து)* நான் சும்மா சொன்னேன். கவலைப்படாதே. அவர் அரண்மனையிலேதான் இருக்கிறார்.

வடிவழகி

என்னைத் திகிலடையப் பண்ணிவிட்டாய். எங்கேயடி இந்தப் பொய்யெல்லாம் பேசப் பழகினாய்?

செங்கமலம்

சரி, சரி, உனக்கு எப்போது பார்த்தாலும் அவர் எண்ணந்தான். எனக்கு வேலை இருக்கிறது. போகிறேன். *(செங்கமலம் போகின்றாள்.)*

திரை

உறுப்பு II களம் 2

இடம்:

அப்பாமுதலி வீடு

[வெளியே போயிருந்த அப்பாமுதலி வீட்டினுள் வருகின்றான். தான் அணிந்திருந்த மேலாடை தலைப்பாகை முதலியவற்றைக் கழற்றிக் கொண்டு தன்மனைவி கனகாம்பிகையைக் கூப்பிடுகின்றான்.]

அப்பாமு:

இங்கே கேட்டதோ?

கனகம்:

என்ன அது?

அப்பாமு:

ஒருக்கால் இங்கு வந்து விட்டுப் போ.

கனகம்:

சற்றுப் பொறுங்கள். இதோ வருகின்றேன். (*சிறிது நேரத்தில் கனகாம்பிகை ஒரு கிண்ணம் பாலோடு வருகின்றாள். வந்து அப்பாமுதலியிடம் அதை நீட்டி*) காலையில் உணவு அருந்தியதும் பாலைக் குடிக்க மறந்து விரைவாய் எங்கோ போய்விட்டீர்கள். என்ன அவ்வளவு அவசரமான வேலை? என்ன வேலை இருந்தபோதும் உடம்பைக் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுதலாம்.

அப்பாமு:

என் நண்பன் முத்துலிங்கமுதலியைக் காண்பதற்குப் போகவேண்டியிருந்தது. அவசரத்

தில் பாலைக் குடிக்க மறந்துவிட்டேன். அத ஞல் என்ன? அது நிற்க உன்னேடு ஒரு இர கசியம் பேச இருக்கின்றது. (அங்கும் இங்கும் பார்க்கின்ருர்)

கனகம் :

(சுற்று முற்றும் நோக்கிவிட்டு) இல்லை. இல்லை. இங்கு யாரும் இல்லை. பிள்ளை வடி வழகியும் செங்கமலமும் பூங்காவினுள் நிற்கின்றனர். ஏவலாளர் மடைப்பள்ளி யில் சமைக்கின்றனர்.

அப்பாமு :

அப்படியோ? நல்லது. இங்கு என் அருகே வா. உன் மகள் வடிவழகியைப்பற்றித் தான் பேசப்போகிறேன்.

கனகம் :

என்ன அவளைப்பற்றி? உங்கள் கட்டளைப் படி முன்னைய சிறுபிள்ளை விளையாட்டுகளை யெல்லாம் விட்டு அடுக்களை வேலை களைப் பழகிவருகின்ருள். அத்துடன் படிப் பையும் கவனிக்கின்ருள்.

அப்பாமு :

அடி மூடமே! அவைகளையல்ல நான் குறிப் பது.

கனகம் :

பின் வேறு என்ன?

அப்பாமு :

உன் மகளுக்கும் வேறு யாருக்குமிடையே ஏதும் ஒலைப் போக்குவரத்து உண்டோ? ஒளிக்காமற் சொல்லு. உனக்குத் தெரியா மல் இந்த வீட்டில் என்னவும் நடக்குமோ?

பிள்ளைகளைச் சரியான முறையிலே வளர்த்தால் இந்த மானக்கேடெல்லாம் வருமோ?

கனகம்:

இதென்ன கதை? ஓலையாம்; போக்குவரத்தாம். ஏன் ஒளித்து மறைத்துப் பேசுகிறீர்கள்? மனதிலே உள்ளதை வெளியாகச் சொல்லுங்கள்.

அப்பாமு:

இன்றைக்கு என் நண்பன் முத்துலிங்கமுதலியிடம் ஒரு காரியமாகப் போயிருந்தேன். பலவற்றையும் பேசிய பின்னர், கடைசியில் உன்மகள் வடிவழகியைப்பற்றியும் கதை எழுந்தது. சங்கிலிக்கும் அவளுக்கும் ஏதோ கொண்டாட்டமாம். இருவரும் ஒருவர்மேல் ஒருவர் காதல் கொண்டிருக்கின்றனராம். இதைக்கேட்டதும் எனக்கு நாடி விழுந்து விட்டது. நான் கட்டிய மனக்கோட்டை முழுவதும் இவளால் இடிந்து விழப்போகிறதே! உனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாதோ?

கனகம்:

சீச்சீ, காரியம் அப்படி இருந்தால் உங்களுக்குச் சொல்லாமல் விட்டிருப்பேனே? எனக்கு ஒன்றுமே தெரியாது. (*சிறிது தனக்குள் ஆலோசித்துவிட்டு*) ஓகோ! ஒருவேளை இருந்தாலும் இருக்கும். சங்கிலி எங்கள் பூந்தோட்டத்துக்குப் பக்கத்திலேயுள்ள இராசமாளிகைப் பூந்தோட்டத்துக்கு இந்த நாட்களில் அடிக்கடி வந்து சுற்றித் திரிகின்றான். இவளும் அந்தப்பக்கம் போய் வட்டமிட்டுத் திரிகின்றாள். இன்னமும் என்னென்னவோ? ஆருக்குத் தெரியும்?

அப்பாமு :

சரி, சரி, அப்படியோ சங்கதி? அப்படியானால் என் நண்பன் சொன்னதும் மெய்தான். நெருப்பில்லாமற் புகையுமோ? *(சிறிது நேரம் உதட்டைக் கடித்துக்கொண்டு நிற்கின்றான். பின்பு தாழ்ந்த குரலில்)* இனி நீ கொஞ்சம் கவனமாயிரு. உவள் பூந்தோட்டப்பக்கம் போகாமற் பார்த்துக் கொள். அல்லாவிட்டால் காரியம் எல்லாம் பிழைத்துப் போய்விடும். உவளுக்கும் கூடாது. ஆகையால் உவளைக்கூப்பிட்டு ஆக வேண்டிய புத்திமதி சொல்லிவிடு. தெரிகிறதோ?

கனகம் :

ஓம், அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். அந்தக் கவலை உங்களுக்கு என்னத்திற்கு? *(அப்பாமுதலி வீட்டினுள்ளே போகின்றான் கனகம் வீட்டினுட்புறமாகத் திரும்பி)* பிள்ளை! பிள்ளை! வடிவழகி, *(உள்ளிருந்து)* ஏன் ஆய்ச்சி.

கனகம் :

இங்கே ஒருக்கால் வந்துவிட்டுப்போ. வரும்போது செம்பிலே தண்ணீர் கொண்டுவா. *(உள்ளிருந்து)* இதோ, கொண்டு வருகிறேன், ஆய்ச்சி.

**[சிறிது நேரத்தில் வடிவழகி செம்பு நிறையத் தண்ணீர் கொண்டுவந்து கனகத்திடம் கொடுத்துவிட்டு ஓரருகில் நிற்கின்றாள்.]**

கனகம் :

*(தண்ணீரைக் குடித்துவிட்டு அப்பாமுதலியின் உடைகளைக் காட்டி)* இதோட உன் அப்பாவின் தலைப்பாகையும் சால்வையும் கிடக்கின்றன. இவற்றைக் கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு இங்கே வா. ஒரு அலுவல்.

வடிவழகி:

ஓம் ஆய்ச்சி. (அவற்றை எடுத்துக்கொண்டு உள்ளே போகின்றாள். பின் திரும்பி வந்து தன் தாயை நோக்கி) ஏன் ஆய்ச்சி, என்னை வரச் சொன்னாய்?

கனகம் :

இதிலே இரு பிள்ளை (வடிவழகி ஓர் இருக்கையில் அமருகின்றாள்) பிள்ளை அழகு, எப்போதாவது நீ சங்கிலியோடு பேசியதுண்டோ?

வடிவழகி:

இ...ல்...லை...ஆய்ச்சி. ஏன் அப்படிக்கேட்கிறாய்?

கனகம் :

ஒன்றுக்கும் இல்லை. நீயும் சங்கிலியும் சிநேகமாயிருக்கிறீர்கள் எனக் கதை உலாவுகிறதாம். இதைப்பற்றிக் கொஞ்சநேரத்துக்கு முன் உன் அப்பா என்னைக் கேட்டார். அப்படி உங்களுக்குள் ஏதும் தொடர்பிருந்தால் அதனால் உனக்குப் பெரிய தீங்கு உண்டாகும். சங்கிலியோ மணம் முடித்தவன். அவனுக்குப் பட்டத்துத்தேவி இருக்கின்றாள். நீ அவனைக் காதலித்து மணம் முடித்தால் இரண்டாம் மனைவியாவாய். இரண்டாம் மனைவியாயிருப்பது வாழ்நாள் முழுவதிலும் பெரிய தொல்லை. ஆகையால் அவன் தொடர்பை விட்டுவிடு. அது உனக்கு வேண்டாம். எல்லாவகையிலும் உந்தச் சங்கிலியிலும் பார்க்கச் சிறந்த ஒருவரை உனக்கு மாப்பிள்ளையாகப் பேசி வைத்திருக்கிறோம். அவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அவரை நீ ஏற்றுக்கொள்.

வடிவழகி:

அவர் யார் ஆய்ச்சி?

கனகம்:

பரநிருபசிங்கரின் மகன் பரராசசிங்கமுதலி.

வடிவழகி:

ஓகோ, அவரோ? நான் மாட்டேன்.

கனகம்:

ஏன் மாட்டாய்?

வடிவழகி:

அப்படித்தான்.

கனகம்:

என்ன ஒரு விதமாகப் பேசுகிறுய்? அவருக்கு என்ன குறை?

வடிவழகி:

குறை ஒன்றுமில்லை. நான் அவரை மணம் முடிக்கமாட்டேன்.

கனகம்:

என்னடி பேச்சு? இப்படியும் ஆகிவிட்டதோ? எங்கள் சொல்லைத் தட்டவும் ஆளாகி விட்டாயோ? நாங்கள் சொன்னபடி செய்யத்தான் வேண்டும்.

வடிவழகி:

முடியாது.

கனகம்:

சரி, பார்த்துக்கொள்ளுகிறேன் *(அப்பொழுது அப்பாமுதலியின் வாயிலாளன் வந்து பரநிருபசிங்கன் வரவைத் தெரிவிக்கின்றன். அதைக்கேட்டதும் வடிவழகியும் கனகமும் சிறிது பரபரப்படைகின்றனர் கனகம்*

(வாயிளாளனை நோக்கி) அவரை உள்ளே வரும்படி கூறு. அமைச்சரவர்களிடம் தெரிவிக்கின்றேன்.

[இருவரும் உள்ளே போகின்றனர். சற்றுநேரம் கழிந்ததும் அப்பாமுதலி உள்ளே வருகின்றான் அதன் பின்னர் பரநிருபசிங்கன் வருகின்றான்]

அப்பா. மு:

(பரநிருபசிங்கனெதிரே சென்று) வாருங்கள், அரசே (ஒரு இருக்கையைக் காட்டி] அமர்ந்தருளுங்கள்.

பரநிருப:

இன்று வெள்ளிக்கிழமை. சட்டநாதர் கோயிலுக்குப் போய்விட்டு வருகிறேன். உங்கள் மாளிகைக்கருகே எமது பல்லக்கு வரும் போது பல நாட்களாக உங்களைக் காணவில்லை, ஒரு முறை பார்த்துவிட்டுப் போகலாம் என எண்ணி இங்கு வந்தேன்.

அப்பா மு:

ஏதும் அலுவலாக வந்தீர்களோ? வேலைக்காரனை அனுப்பியிருந்தால் நானே உங்கள் மாளிகைக்கு வந்திருப்பேனே.

பரநிருப:

இல்லை, இல்லை, அலுவல் ஒன்றும் இல்லை. நீங்களும் உங்கள் குடும்பமும் சுகந்தானே?

அப்பா மு:

எம்பெருமான் திருவருளால் நாங்கள் யாவரும் நல்ல சுகமாயிருக்கிறோம்.

[பணியாளன் ஒருவன் ஒரு தட்டத்தில் வெற்றிலை கொண்டு வர, அப்பாமுதலி அதை வாங்கிப் பரநிருபசிங்கன் முன் வைக்கின்றான்]

பரநிருப:

(வெற்றிலையைப் போட்டுக்கொண்டு) கண்டியிலிருந்து வந்தபின் ஆறுதலாக உங்களைக் கண்டுகொள்ள முடியவில்லை. நான் கண்டிக்குப் போகும் போது வீரமாகாளியம்மன் கோயில் கட்டிடத்தைப் புதுக்கக் கட்டி எழுப்பிக்கொண்டிருந்தீர்கள். வேலை முடிந்து விட்டதோ?

அப்பாமு:

ஓம், வேலை முடிந்து நீர்ப்படை விழாவும் நடந்தேறி விட்டது. அது நிற்க, கண்டியரசன் தேவிக்கு மருந்து செய்யப் போயிருந்தீர்கள். அவருக்கு இப்போது நல்ல சுகமோ?

பரநிருப:

ஓம், சட்டநாதர் திருவருளால் நல்ல சுகம்.

அப்பாமு:

என்ன வருத்தம்?

பரநிருப:

அவருக்கு ஒருவகையான வயிற்றுவலி இருந்தது. திறமை வாய்ந்த பண்டிதர்கள் பலர் மருந்து செய்தும் நோய் மாறவில்லை. ஆகையினாலே கண்டியரசர் என்னை அழைப்பித்தார். நான் அங்கு சென்றதும் தேவியின் நிலையைப் பார்த்துவிட்டு எம்பெருமான் சட்டநாதரை மனதில் தியானித்துக் கொண்டு ஒரு மருந்து கொடுத்தேன். அதனுல் அவர் குணமடைந்தார்.

அப்பாமு:

அது மிக நல்லது தான். ஆனுல் வைத்தியத்திற்காகத் தாங்கள் நாட்டை விட்டுச் சென்றபின் இங்கு நிகழ்ந்தவைகளை நினைக்கும் போது மனம் சஞ்சலமடைகின்றது.

பரநிருப:

அண்ணுர் இளவரசர் பண்டாரத்தின் கொலையைக் குறித்துப் பேசுகிறீர்கள் போலும். அது கவலைக்குரியதே.

அப்பா. மு:

ஓம். அதைப்பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிருர்கள். அதுதான் போகட்டும். தாங்கள் அரசபதவியைத் துறந்ததைப் பற்றியும் ஒரு கதை உலாவுகின்றது.

பரநிருப :

என்ன மாதிரி?

அப்பா மு :

தாங்கள் செய்தது முறையல்லவென்று......

பரநிருப :

யான் அரசபதவியைத் துறந்தது நாட்டின் நன்மைக்காகவே. என்னிலும் பார்க்க ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்தவன் சங்கிலி. அதனுலேயே அவனுக்கு அப்பதவியைக் கொடுத்தேன்.

அப்பா மு :

உங்கள் தம்பியார் ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்தவர் தான். ஆனுல் வேறுவகையில் அவர் அப்பதவிக்குத் தகுந்தவரோ என ஐயப்படவேண்டியிருக்கின்றது.

பரநிருப :

ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

அப்பா மு :

என்ன இருந்தாலும் அரசனுக்கு ஒழு......க்கம்......

பரநிருப :

என்ன? என்ன? சங்கிலி ஒழுக்கத்தில் தவறி ஞனே?

அப்பாமு :

அப்படித்தான் உலகத்தார் பேசுகிருர்கள்.

பரநிருப :

என்ன பேசுகிருர்கள்.

அப்பாமு :

அவர் மூர்க்கர் என்றும் ஒழுங்கற்றவர் என்றும்......

பரநிருப :

பூ, அவ்வளவு தானே? அதனுலென்ன? தனது நிலேக்குத் தக்கவாறு இனித் திருந்தி நடப்பான். அவன் புத்திசாலி.

அப்பாமு :

அவ்வளவில் நின்று விட்டாற் போதாதோ? (*தூலேத் தாழ்த்தி*) அவருடைய நடத்தையும் நல்லாயில்லே. அரசர் பெருமானே, நான் சொல்லுவதை மன்னித்துக்கொள்ளவேண்டும். நாட்டில் குலங்குடியிலுள்ள பெண்களேக்கூட அவர் தொல்லேப்படுத்தித் திரிகின்ருராம். அது மட்டுமல்லாமல் என் குடும்பத்துக்கும் தீங்கு செய்ய முயன்று வருகிருர். அவர் எண்ணம் நிறைவேறிஞல் நானும் என் குடும்பமும் இந்நிலவுலகில் வாழமுடியாது. (*அப்பாமுதலி அழுகின்றன்.*)

பரநிருப :

(*தூலே உயர்த்தி*) என்ன முதலியாரே! அப்படி என்ன தீங்கை உமது குடும்பத்தாருக்குச் செய்ய முயலுகிருன்.

அப்பா மு:

எம்பெருமானே! நானோ ஏழை சொல்லப் பயமாயிருக்கிறது.

பரநிருப:

பயப்படாதே, வெளியாய்ச் சொல்லு.

அப்பா மு:

என்மகள் வடிவழகியில் கண் வைத்துத் திரிகிறார். அவர் எண்ணம் கைகூடுமேயானால் நானும் கெட்டேன். என் குடியும் கெட்டது. (*அதைக் கேட்டதும் பரநிருபசிங்கன் திகைத்துப்போயிருக்கின்றான். அப்பாமுதலி அவன் காலில் வீழ்ந்து*) சுவாமி! திக்கற்ற இந்த அடிநாயும் அதன் குடும்பமும் தங்களுக்கு அடைக்கலம். (*பரநிருபசிங்கனின் காலைப் பிடித்துக்கொண்டு*) இந்தத் துன்பத்திலிருந்து எங்களைக் காத்தருளல் வேண்டும்.

பரநிருப:

(*அப்பாமுதலியைக் கையினாற் பிடித்துத் தூக்கி*) முதலியாரே, பயப்படவேண்டாம். நான் (*மார்பைத் தட்டி*) உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றுவேன். சங்கிலியின் மற்றைய குற்றங்களை யெல்லாம் பொறுத்தேன். ஆனால் இந்தக் கொடுமையை மட்டும் பொறுக்க மாட்டேன்.

அப்பா மு:

நீங்கள் அரசபதவியை ஏற்றிருந்தால் இந்தக் கெடுதி ஒன்றும் வந்திராது. என்ன செய்வது? எங்கள் தவப்பயன் அவ்வளவுதான்.

பரநிருப:

போனதைப் பற்றிக் கவலைகொள்வதிற் பயனில்லை உன் மகள் வடிவழகியை எனது

மாளிகைக்குக் கொண்டு வந்து எனது பாது காப்பில் விடு. அவளுக்கு ஒரு துன்பமும் வராது.

அப்பாமு:

(*முகம் மலர்ந்து*) எம்பெருமானே, அப்படியே செய்வேன்.

பரநிருப:

(*ஆழ்ந்த யோசனையுடன் வெற்றிலையை மென்று கொண்டு*) சரி, முதலியாரே! நேரமாகிறது. போய் வருகிறேன்.

அப்பாமு:

(*எழுந்து நின்று*) போய் வாருங்கள். தாங்கள் இங்கு வந்தது நான் செய்த புண்ணியந் தான்.

**[பரநிருபசிங்கன் எழுந்து செல்கின்றான். அப்பாமுதலி அவனுடன் சிறிது தூரம் சென்று வழியனுப்பிவிட்டு வருகின்றான்.]**

(*தனிமொழி*)

என் மகள் வடிவழகியைப் பரநிருபசிங்கன் வீட்டில் கொண்டுபோய் விட்டால் அவளை அவன் மகன் பரராசசிங்கமுதலிக்கு மணம் முடித்துக் கொடுத்தல் இலகு. சங்கிலியைத் தொலைத்தால் பரராசசிங்கமுதலியை அரசனுக்கலாம். அவன் அரசனானால் என்மகள் பட்டத்தரசியாவாள். (*தன் கைகளைப் பின்புறமாகக் கட்டியபடி சிறிது உலாவிவிட்டு*) இப்படி நிகழ்ந் தால் பரராசசிங்கமுதலியையும் தொலைத்து விட்டு நானே அரசனாகலாம்.

திரை

இடம்:

அப்பாமுதலி வீட்டுப் பூங்கா

நேரம்:

இருண்மாலை.

[வடிவழகியும் அவள் தோழி செங்கமலமும் பூங்காவில் நின்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு பூக்கொய்கின்றனர்.]

செங்கமலம்:

*அழகு, இருண்டுகொண்டு வருகிறது. பொழுதுபட்டு ஒரு நாழிகைக்கு மேலாய் விடும்.*

வடிவழகி:

*இருக்கும். எங்கும் வீடுகளில் விளக்கேற்றி விட்டார்கள். (டங்......டங் என்று மணியோசை கேட்கின்றது.) அதோ! கேட்டதோ கோயில் மணி? மாலைப் பூசையாகிறது.*

செங்கமலம்:

*உனக்கு எழுதிய ஓலையில் அரசர் எப்பொழுது வருவதாக எழுதியிருந்தார்?*

வடிவழகி:

*பொழுதுபட்டு இருண்டதும்.*

செங்கமலம்:

*நல்லாய் இருண்டுவிட்டது. இன்னும் காணவில்லையே?*

வடிவழகி:

வந்து விடுவார். வருவேன் என்று சொன்ஞல் அவர் தவறுவதில்லே.

செங்கமலம்:

(*புன்முறுவலோடு*) காரியத்தை அறிந்து ஒரு வேளே அவர்தேவி அவரை இங்கு வரவிடாது மறித்து விட்டாரோ?

வடிவழகி:

சும்மா உனக்கு என்ஞேடு கேலிதான்.

**[அப்பொழுது சங்கிலி வீரமாப்பாணஞேடு பூங்காவின் படலே அருகில் வருகின்ருன்.]**

சங்கிலி:

(*அங்கு நின்றுகொண்டு வீரமாப்பாணனே நோக்கி*) சரி, மாப்பாணு, போய்வா. அழகு அதோ தன் தோழியுடன் பூப்பறித்துக் கொண்டு நிற்கின்ருள். சிறிதுநேரம் அவளோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு மாளிகைக்குத் திரும்புவேன். நீ வீட்டுக்குப் போ.

வீரமா:

சரி, போகிறேன். உங்கு நெடுநேரம் நில்லாது மாளிகை போய் சேருங்கள். சிறிது கவனமாய் இருந்து கொள்ளல்வேண்டும்.

சங்கிலி:

ஏன் அப்படிச் சொல்லுகிருய்?

வீரமா:

காலம் அப்படியான காலம். எப்பொழுது அபாயம் வருமென்று கூறமுடியாது. அதஞலேதான் கவனமாயிருக்க வேண்டுமென்று சொன்னேன்.

சங்கிலி :

நீ கூறுவதும் சரிதான். அதோ எமது மாளிகை இந்தப் பூஞ்சோலைக்கு அருகிலே தான் இருக்கிறது. அஞ்சினவன் கண்ணுக் குத்தான் ஆகாசமெல்லாம் பேய். ஒன்றுக் கும் யோசிக்காதே போய் வா.

வீரமா :

சரி, அப்படியே போய்வருகிறேன்.

**[வீரமாப்பாணன் போகின்ருன். பெண்களிருவரும் நிற்கும் இடத்தை அரசன் அடைகின்ருன்.]**

சங்கிலி :

(அவரருகே சென்று) நெடுநேரம் காத்து நிற்க வைத்து விட்டேன் போலிருக்கிறது. அவசியமான வேலை ஒன்று இருந்தபடியால் சிறிது சுணங்கிவிட்டேன்.

செங்கமலம் :

சொன்ன நேரத்திற்கு நீங்கள் வராமல் விட்டது இதுவல்ல முதல் முறை. எவ்வளவு நேரத்திற்கென்று தனிமையான இடத்தில் காத்து நிற்பது? இதனுலேதான் அழகுக்கு உங்கள்மேலே கோபம்.

சங்கிலி :

அப்படியோ? நான் முன் ஒருபோதும் உங்களை இப்படிக் காக்கவைக்கவில்லையே? ஏதோ கோபிக்கவேண்டுமென்று கோபிக்கிறீர்கள் போலும். ஆணுய்ப் பிறந்தது பெண்களிடம் ஏச்சு வாங்கத்தானே! என்ன செய்வது? முன் செய்துகொண்ட வினைப்பயன்.

செங்கமலம் :

இப்பொழுது உப்படிச் சொன்னுல் அழகைக் கலியாணஞ் செய்தபின் என்ன நடக்

கும்? இராசமாதேவியும் பெரிய கோபக்காரி. இவளும் அவருக்குக் குறைந்தவளல்லள். உங்கள்பாடு நல்ல வேடிக்கையாய்த்தான் வரப்போகிறது.

சங்கிலி :

என்றாலும் அதற்கு நான் பயப்படவில்லை.

செங்கமலம் :

ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள். வீட்டில் மனைவியர் போடும் சண்டை போர்முனையில் உங்கள் பகைவர் போடும் சண்டையைப் போலல்ல. அதிலும் பார்க்க மும்மரமாய் இருக்கும்.

வடிவழகி :

சும்மா இரு, செங்கமலம்.

செங்கமலம் :

போர்முனைச் சண்டை போர்முடிந்த அன்றைக்கே தொலைந்துபோம். இதுவோ வாழ்நாள் முழுவதும் நடக்கும்.

சங்கிலி :

என்றாலும் இச்சண்டையில் இன்பமும் உண்டு.

செங்கமலம் :

இன்பமும் துன்பமும் உங்களோடு. எனக்கு நேரமாய் விட்டது. இதோ போகிறேன்.

வடிவழகி :

செங்கமலம், நின்றுகொள். நானும் வருகிறேன். பயமாய் இருக்கிறது. என்னைத் தனியேவிட்டுச் செல்லாதே.

செங்கமலம் :

அரசர்பெருமான் பக்கத்தில் நிற்கும்போது என்ன பயம்?

**[செங்கமலம் போகின்ருள். அப்பொழுது வடிவழகியும் அவளோடு போக முயலுகின்ருள்.]**

சங்கிலி :

*(அவளைத் தடுத்து)* ஏன் போகிருய்? நில்; பிறகு போகலாம். *(வடிவழகி நாணத்தோடு தலை தணிந்து நிற்கின்ருள்.)* நீ இப்பொழுது முன்போல இல்லை. நல்லாய் மாறிவிட்டாய். என்னுடன் ஏன் அளவளாவிப் பேசுகின்ருயில்லை?

வடிவழகி :

ஒன்றுமில்லை. வீட்டிலே எல்லாம் கட்டுப்பாடு.

சங்கிலி :

என்ன சங்கதி?

வடிவழகி :

இனி உங்களைக் காணமுடியாது போலிருக்கிறது. உங்களை நான் சந்திப்பது எப்படியோ என் பெற்ருேருக்குத் தெரிந்துவிட்டது. ஆய்ச்சி இதைப்பற்றி என்னேடு பேசி உங்களைச் சந்திக்கவேண்டாமென்று கட்டளையிட்டுள்ளார்.

சங்கிலி :

அப்படியோ காரியம்? சரி, வேறு வழிவகைகளைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

வடிவழகி :

*(சிறிது [யோசித்து)* அப்படியென்ருல்?

சங்கிலி :

*(சிறிது நேரம் ஏதோ எண்ணிவிட்டு)* உன் பெற்ருேருக்குத் தெரியாமல் உன்னை என் மாளிகைக்குக் கூட்டிப்போவதுதான்.

வடிவழகி :

அப்படியானல் வேறுசங்கடம் ஏற்படாதோ?

சங்கிலி :

அதற்கு நான் ஆயத்தம். பயப்படாதே. (அப்பொழுது ஒரு மணி ஓசை கேட்கின்றது. சங்கிலி அதை உற்றுக்கேட்டு) சரி, நேரமாகி விட்டது. கோயிலில் அர்த்த சாமப் பூசைக்கு மணியடித்து விட்டது. நான் போய் வருகின்றேன். (அரசன் புறப்படுகின்றன்.)

வடிவழகி :

(அவனுடன் தொடர்ந்து நடந்துகொண்டு) இனி, எப்பொழுது இந்தப் பக்கம் வருவீர்கள்? எப்படித்தான் கட்டுக் காவலாக இருந்தாலும் நான் உங்களே வந்து காணுமலிருக்கமாட்டேன்.

சங்கிலி :

எல்லாவற்றிற்கும் ஓலே எழுதி அனுப்புகிறேன்.

வடிவழகி :

ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்.

**(இருவரும் பூங்காவில் படலேயருகு வந்துவிட்டனர் அப்பொழுது இராசமாதேவியும் அங்கயற்கண்ணியும் அவ்விடத்திற்கு வந்து அவர் இருவரையும் காணுகின்றனர்.)**

இராசமாதேவி :

என்ன இது? இதைப் பார்க்கப் பெரிய விந்தையாக இருக்கிறதே. (அரசன் அச்சத்தோடு நிற்கின்றன். வடிவழகி தலே குனிந்து நிற்கின்றள்.) இது தானே அவசரமென்று சொல்லிப் புறப்பட்ட அரசாங்க அலுவல்? (அங்கயற்கண்ணியைப் பார்த்து) ஏதோ அரசாங்க வேலேயாகப்

போகிறேனென்று சொல்லிவிட்டு வெளியே போனார். இப்பொழுது பார்த்தியே அவர் செய்கிற அவசரவேலையை! *(வடிவழகியைப் பார்த்து)* நீயும் ஒரு பெண்ணாகப் பிறந்தவளோ? *(விக்கி விக்கி அழுகின்றாள். அரசன் சால்வையைப் பிசைந்தவண்ணம் நிற்கின்றான். அங்கயற்கண்ணி நடந்ததைக் கண்டு அச்சத்தோடு நிற்கின்றாள். வடிவழகி காற் பெருவிரலாலே நிலத்தைக் கிளைத்துக்கொண்டு நிற்கின்றாள். ஒரே அமைதி. இராசமாதேவி விரைவாய்க் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு)* சரி, வந்த காரியத்தை மறந்து விட்டேன். *(அரசனைப் பார்த்து)* மாளிகையில் ஒற்றர் தலைவன் உங்களைக் காணக் காத்திருக்கிறான். ஏதோ அவசரமான அலுவலாம் நின்று பதறுகிறான். விரைவாய் வாருங்கள். *(வடிவழகியைப் பார்த்து இழிவுக் குறிப்பாய்)* மகாராணி, குழப்பியதற்கு மன்னிக்கவும்.

**இராசமாதேவி போகின்றாள். அவளைப் பின்தொடர்ந்து அரசன் போகின்றான். அங்கயற்கண்ணியும் அவரைப் பின்தொடர்கின்றாள்.**

திரை

உறுப்பு II களம் 4

### இடம் :

[அரசன் ஒரு கட்டிலில் இருக்கின்றான். அவனுக்கருகே வேறு பல இருக்கைகளில் தனிநாயகமுதலி, அரசகேசரி, வீரமாப்பாணன், இமையாணன், முத்துலிங்கமுதலி, அடியார்க்கு நல்லான் ஆகியோர் யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அரசன் மிகவும் சீற்றத்துடன் இருக்கின்றான். அப்பொழுது அப்பாமுதலி அங்கு விரைந்து வருகின்றான்.]

**அப்பா மு :**

(*தனது சால்வையால் வியர்வையைத் துடைத்து கொண்டு*) மகாராசாவே மன்னிக்கவும். தாங்கள் அனுப்பிய ஆள் வரும்போது நான் வீட்டிலில்லை. அதனாலே தான் வரப்பிந்திப் போனேன்.

**சங்கிலி :**

அதனாலொன்றுமில்லை. இருங்கள். (*அப்பா முதலி ஒரு இருக்கையில் அமருகின்றான்.*) சபையோர்களே! எமது ஒற்றர் தலைவன் மன்னாரிலிருந்து சில செய்திகளைக்கொண்டு வந்திருக்கிறான். பறங்கியர் மன்னாரில் கப்பலால் வந்திறங்கி அந்நாட்டின் ஒரு பாகத்தைச் சில துரோகிகளின் உதவியாலே கைப்பற்றி விட்டார்களாம். அதுவுமல்லாமல் அவர் சமயக்குருமாரில் ஒருவரான சவுரியார் என்பவரும் அங்கு வந்திறங்கியுள்ளாராம். அவர் முயற்சியால் எமது குடிகளிற் பலர் எங்கள் பழைய சமயமாகிய சைவத்தை விட்டுக் கத்தோலிக்க மதத்திற் சேர்ந்து விட்டார். அதுமட்டுமோ? மதம் மாறியவருட் சிலர் பறங்கியரின் உதவி

யால் எமது புண்ணிய தலமாகிய திருக்கேதீச் சரத்தை இடித்துத் தரைமட்டமாக்கி இருக் கின்றனராம். அதிலிருந்த அழகிய கற்களே எடுத்துக்கொண்டுபோய் ஒரு மாதா கோயி லேயும் கோட்டையையும் கட்டுகிருர்களாம். பறங்கியருக்கு ஆக்கிரமிப்பு வெறியும், மத வெறியும் தலைக்கேறி விட்டன. மதம் மாறிய எம்மவருட் சிலர் துரோகிகளாய்ப் பறங் கியர் அட்டூழியங்களுக்குத் துணை புரிகிருர் கள். இச்செய்தியைக் கேட்ட நேரம் தொ டக்கம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரு கிறது. பறங்கிகளை உடனேயே நாட்டி லிருந்து ஓட்டிக் கலைத்தல் அவசியம். அவ ருக்குத் துணைபுரிந்த துரோகிகளையும் தகுந்த படி தண்டித்தல் வேண்டும். அப்படிச் செய் தாற்ருன் நமது நாட்டில் இராசத்துரோக மென்ற பேச்சை இல்லாமற் செய்யலாம். ஆகையால் நாம் இப்பொழுதே சேனைக ளோடு மன்னருக்குப் புறப்படவேண்டும். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

தனிநா.மு:

(*எழுந்து நின்று*) மகாராசா, பறங்கிகளுக்கு மாருய் மன்னரில் நாம் போர் செய்வதா ஞல் நல்லாய் ஊன்றி ஆலோசித்துவிட்டுச் செய்தல்வேண்டும். அவசரப்பட்டுச் செய் யக்கூடாது. பறங்கிகள் இந்தியாவிலே கோவையில் மிகுந்த பெலத்தோடு இருக்கி ருர்கள். அல்லாமலும் தென்னிலங்கையில் கோட்டை இராச்சியத்தைத் தங்கள் கைக் குள்ளே வைத்துக்கொண்டு கொழும்பிலே கோட்டை கொத்தளங்களோடு இருக்கிருர் கள். அவர்கள் கடற்படையும் அதிக பெல முள்ளது.

**[ஒரே அமைதி நிலவுகின்றது. அரசன் ஆழ்ந்து எண் ணுகின்ருன்]**

அரசகேசரி:

அரசே! முதன் மந்திரியார் கூறுவதை ஊன்றி ஆலோசித்துக் கருமத்தைத் தொடங்குதல் வேண்டும்.

‘வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந் துணைவலியுந் தூக்கிச் செயல்’

என்பது பொய்யில் புலவர் பொருளுரை யாகும்.

அடியா. ந:

(எழுந்து நின்று) முதன் மந்திரியாரும் புலவர் பெருமானும் கூறியவை முழுதும் உண்மை. பறங்கியருக்கு மாறாய் நாம் போர் செய்ய எண்ணினால் அதற்கு முன்பு சில ஆயத்தங் கள் செய்யவேண்டும்.

சங்கிலி:

என்ன ஆயத்தங்கள்?

அடியா. ந:

பறங்கியருக்கு நாலு பக்கத்திலும் தொல்லை கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் இங்கு எங்களோடு போர் செய்யும்போது அவர்கள் தங்கள் முழுப்பெலத்தோடும் போர் செய்ய முடியாது. அவர்கள் சேனை கள் பல இடங்களிலும் சிதறி இருக்கும். அப்போது நாம் இலகுவில் வெற்றியடைய லாம்.

சங்கிலி:

எப்படி அவருக்கு நாம் தொல்லை கொடுக்க முடியும்? சொல்லுங்கள் பார்ப்போம்.

அடியா. ந:

வடக்கே தஞ்சை நாயக்கருக்கு ஓலை அனுப்பி அவர்களோடு சண்டை செய்யப் பண்ண

வேண்டும். கள்ளிக்கோட்டைச் சமோரினை யும் அப்படியே செய்யும்படி தூண்டவேண் டும். தெற்கே கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றி விட்டார்கள். அங்கே நீர்கொழு ம்பு, சிலாபம் முதலிய பகுதிகளில் உள்ள சனங்களை அவர்களுக்கு மாருய் எழுந்து கலகம் பண்ணும்படி தூண்டி விடலாம். அங்கிருக்கும் புத்தர்களும் சைவர்களும் பறங் கியர் செய்துவரும் மதமாற்றத்திற்கு மாருய் மனம் புழுங்கிக்கொண்டிருக்கிருர்கள். பறங் கியர் செய்துவரும் அட்டூழியங்களையும் முறைகேடுகளையும் கண்டு எல்லோரும் அவர் களை வெறுக்கிருர்கள். ஆகையால் அவருக்கு மாருய் எல்லாப் பக்கங்களிலும் தொல்லை களைக் கிளப்புவது இலகு.

சங்கிலி :

மந்திரியாரே, நீங்கள் சொல்லுவதும் உண் மைதான். சபையோர்களே, இதற்கு நீங் கள் என்ன சொல்லுகிறீர்கள்? அடியார்க்கு நல்லார் சொன்னபடி பறங்கியருக்கு மாருய்க் கலகம் மூட்ட வழிவகை எடுப் போமோ?

அப்பாமு :

அரசர் பெருமானே, பறங்கியருக்கு மாருக உவ்வளவு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ? அவர்களோ வயிற்றுப் பிழைப்புக்காக வியா பாரம் பண்ணவந்த அந்தாறு பேர். நான் அறிந்தமட்டில் இங்கே சொன்னபடி அவர் களுக்கு அவ்வளவு வலிமை இல்லை. போன போன இடத்திலே தமது வியாபாரப் பொருள் பண்டங்களைப் பதனமாய் வைப் பதற்குப் பல்மான வீடுகளைக் கட்டிக்கொண் டார்களேயல்லாமல் கோட்டை கொத்தள மொன்றையும் கட்டவில்லை. அல்லாமலும் அவர்கள் கடற்படையைப் பற்றியும் ஏதோ கதை வந்தது. அவர்களிடம் இருப்பவை போர்க்கப்பல்களல்ல; வியாபாரக் கப்பல்

களே. ஒருவேளை சில ஆயுதங்களும் சண் டைக்காரரும் அந்தக் கப்பல்களில் இருக்க லாம். ஆனுல் அதெல்லாம் போருக்கல்ல. நடுக்கடலில் தங்கள் வியாபாரப் பொருட் களைக் கொள்ளையடிக்க வரும் கப்பற்கொள் ளைக்காரரை எதிர்த்துப் போராடவே வைக் கப்பட்டிருக்கின்றன. உம்! யாழ்ப்பாணத் தரசுக்கிருக்கும் கடற்படையின் வலியை மறந்து விட்டீர்களோ? நாயக்கரின் கடற் படையோடு எங்கள் கடற்படை திருவடி நிலைக்கப்பாற் சண்டை செய்து பெற்ற வெற்றியை மறந்து விட்டீர்களோ? இவ்வ ளவு வலியுள்ள கப்பற்படையை பறங்கிய ரின் வியாபாரக் கப்பல்கள் எப்படி எதிர்க்க முடியும்? ஆகையால் அரசே, அதிகம் எண் ணுவதைவிட்டுச் சூட்டோடே சூடாய்ப் பறங்கியருக்குப் பாடம் படிப்பிக்கவேண் டும். நாம் மன்னருக்குப் படையெடுத்துச் செல்லுவதே சரி.

**[அவைக்களத்துள்ளோர் ஒன்றும் பேசாதிருக்கின்றனர்.]**

**சங்கிலி :**

(*அமைதி நிலவுவதைக் கண்டு*) என்ன, ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் எல்லோ ரும் அப்பா முதலியார் சொன்னதைச் சரி யென்று ஏற்றுக் கொள்ளுகிறீர்கள் போலத் தோற்றுகிறது. இப்பொழுதே பறங்கிக ளோடு சண்டைசெய்து அவர்களை நாட்டி லிருந்து துரத்தவேண்டுமெனவே நானும் எண்ணுகிறேன். இமையாணனுரே, பறங்கி யரோடு சண்டை செய்யத்தான் வேண்டும்.

**இமையா :**

(*இடைமறிக்கும் நோக்கத்துடன்*) அரசே ...........

**சங்கிலி :**

யாழ்ப்பாண அரசு இப்பொழுது தங்களையே எதிர்பார்க்கின்றது. மன்னருக்குப் படை

யெடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்கு களை விரைவில் முடியுங்கள். எப்பொழுது நீங்கள் ஆயத்தமாவீர்கள்?

**இமையா :**

நாளைக் காலையிலேயே படையுடன் புறப் பட்டு விடலாம் அரசே!

**சங்கிலி :**

சரி, அப்படியே ஆகட்டும் வீரமாப்பாணரே!

**வீரமா :**

அரசே!

**சங்கிலி :**

எனது பஞ்சகல்யாணிக் குதிரையை ஆயத் தம் பண்ணும்.

**வீரமா :**

(*தலையசைத்து*) ஓம் அரசே!

**திரை**

உறுப்பு II களம் 5

இடம்:

அரசமாளிகை

**[இராசமாதேவி ஒரு கட்டிலில் இருக்கின்ருள். அவள் தோழி அங்கயற்கண்ணி ஒரு தாம்பாளத்தைக் கொண்டு வந்து அவளருகு வைக்கின்ருள். அதற்குள் பூ, திருநீறு, சந்தனம் முதலியவை இருக்கின்றன.]**

அங். கண்:

தேவி, இப்பொழுதுதான் வீரமாகாளி அம்மன் கோயிலிற் பூசை முடிந்தது. கோயிற் பூசாரி திருநீறு சந்தனம் முதலியவற்றை இத்தாம்பாளத்திற் கொண்டு வந்து என்னிடம் தந்துவிட்டுப் போகின்ருர். அம்மனுக்குமுன் பூசையில் வைக்கும்படி நீங்கள் கொடுத்த பூக்கட்டுகள் இங்கே இந்தத் தொன்னையில் இருக்கின்றன. கற்பூரம் கொளுத்துகிறேன். ஒரு பூக்கட்டை எடுங்கள், பார்ப்போம். இராசாவுக்கு மன்னுர்ப் போரில் வெற்றியோ இல்லையோ என்று தெரிந்து விடும்.

இராசமாதேவி :

*(எழுந்து அத்தாம்பாளத்தைத் தன் கையால் எடுத்துக் கொண்டு போய் அந்த எரியும் விளக்கருகேவைத்துப் பின்வரும்பாட்டைப் பாடித் தோத்திரம் செய்கின்றள்.)*

**விருத்தம்.**

*தஞ்சமென் றுன்னடிகள் தாயேய டைந்தனன்*
*தருணமிதி லன்பு பொழியும்*
*தண்மைசேர் கண்களால் தமியேனை நோக்கியே*
*தந்தருளு நின்கருணையை*

*அஞ்சலென் றடியேனை ஆதரிக் காவிடின்*
*ஆரெனைக் காக்க வல்லார்*
*அருமைமிகு மன்னையர் மகவுசெய் தற்றங்க*
*ளன்புடன் பொறுத்திடுவரால்*
*வஞ்சனை மிகுந்துள வைரிகள் புரிந்திடு*
*மிறுக்கஞ் சகிக்ககில்லேன்*
*வாதோடு சூதுபுரி மாந்தர்கைத் தப்பிடும்*
*வகைதனைக் கூறியருளாய்*
*மிஞ்சமுது மாடங்க ளானவை மிளிர்ந்துமே*
*மேவிடும் காமர் பதியாம்*
*விசுபுக ழோங்குநல் லூர்தன்னி லுறைகின்ற*
*வீரமா காளியம்மே.*

வீரமாகாளி அம்மாளே! எங்களுக்கு வெற்றி தந்தருளவேண்டும். (*கும்பிட்டுத் திருநீறு, சந்தனம், குங்குமம், பூ முதலியவற்றை அணிகின்றாள். அங்கயற் கண்ணியும் அவற்றை அணிந்து பின் அத்தாம்பாளத் துள்ளிருக்கும் தொன்னையை எடுத்து இருகையிலும் ஏந்திய வண்ணம் நிற்கின்றாள். இராசமாதேவி அம்மனை வழி பட்டு*) தாயே, இக்கட்டுகளில் ஒன்றை எடுக் கின்றேன். எங்களுக்கு வெற்றியென்றால் அதை எனக்கு இதன் மூலம் காட்டு. (*பின் அச்சத்தோடும் அன்போடும் அத்தொன்னைக்குள் இருந்த இரு கட்டுகளில் ஒன்றை எடுத்துத் தோழியிடம் கொடுத்து*) கண்ணு, இப்பூக்கட்டை அவிழ்க்க எனக்குப் பயமாய் இருக்கிறது. நீதான் அவிழ்த்து அதற்குள் என்ன நிறப் பூ இருக் கிறது என்று பார். சிவத்தப் பூவாயின் எங் களுக்கு வெற்றி.

[அங்கயற்கண்ணி அதை வாங்கிப் பயபத்தியோடு மெதுவாய் அவிழ்க்கின்றாள். அவிழ்த்தவுடன் அவள்முகம் மலருகின்றது]

**அங். கண்:**

(*புன்னகையுடன்*) தேவி, இதோ பாருங்கள். சிவத்தப் பூ. வீரமாகாளி எங்களைக் கைவிடாள்.

**இராசமாதேவி:**

(*மலர்ந்த முகத்துடன்*) முன்பே நான் சொல்ல வில்லையோ. எல்லாம் அம்மாளின் அருள்.

அங். கண் :

இனியாவது அரசரை நினைந்து கலங்குவதை விட்டுவிடுங்கள். எமக்கு வெற்றியென்று பூக்கட்டும் காட்டி விட்டது. அரசரின் ஆண்மையும் போர்வன்மையும் உங்களுக்குத் தெரிந்த காரியந்தானே?

இராசமாதேவி :

ஓம், ஓம், போரில் அவருக்குச் சமமானவர் ஒருவருமில்லைத்தான்.

அங். கண் :

அப்படியானல் ஏன் மனம் பதைக்கிறீர்கள்? இனி ஆறுதலாய் இருங்கள். எங்களுக்குத் தான் வெற்றி அது நிச்சயம்.

இராசமாதேவி :

நானும் அப்படியே நினைக்கிறேன். அரசர் எல்லாவற்றிலும் கெட்டித்தனமுள்ளவர். மிக நல்லவரும். ஆனல்............(ஏதோ மனதில் எண்ணுகிறள்)

அங். கண் :

(பரபரத்து) ஆனல் என்ன?

இராசமாதேவி :

ஆனல் ஒன்றிலேதான் கூடாதவர்.

அங். கண் :

எதிலே?

இராசமாதேவி :

பிற பெண்களை விரும்புவதில்.

அங். கண் :

ஓ, அதுவோ? பெண்கள் என்று ஏன் சொல்லு கிறீர்கள்? வடிவழகி ஒருத்தியைத் தானே.

இராசமாதேவி :

கண்ணுற் கண்டது அது. அதுபோற் காணு தவை எத்தனையோ?

அங். கண் :

விடுங்கள், விடுங்கள். எல்லோரும் உப்படித் தான். ஆண்கள் இயல்பே அது. இப்படி யான காரியங்களில் குறையை ஆண்களிலே சுமத்துதல் ஆகாது.

இராசமாதேவி :

பின்னர்?......

அங். கண் :

அவர்களுக்கு இடம் கொடுக்கும் பெண்களி லேதான். ஒரு பெண் இடங் கொடாது விட் டால் ஆணுய்ப் பிறந்தவன் கண்ணெடுத்தும் பாரான்.

இராசமாதேவி :

அப்படியானுல் இக்காரியத்தில் அரசர்மேற் குற்றமில்லையென்று சொல்லுகிருயோ.

அங். கண் :

நிச்சயமாய். வடிவழகிமேலேதான் குற்ற மென்று சத்தியம் பண்ணுவேன்.

இராசமாதேவி :

அவள் கூடாதவள் என்று இதுவரையும் நான் கேள்விப்படவில்லையே.

அங். கண் .

எல்லோரும் நல்லவர் போலத்தான் நடிப்பது. ஆனால் தருணம் வரும்போதல்லவோ அவரவரின் உண்மைக் குணம் தெரியும். பெண்களின் ஆசைக்கும் ஒரு அளவு இருக்க வேண்டும். என்ன, கட்டிய மனைவி இருக்கும் ஒருவன் மேலும் ஆசைப்படுவதோ? அப்படிச் செய்பவளும் ஒரு பெண்ணோ?

இராசமாதேவி :

அவளை ஏசி என்ன? இதெல்லாம் அப்படிப் பட்ட பெண்களை வளர்த்த முறையால் வந்த பிழை.

**[அப்பொழுது வடிவழகி அங்குமிங்கும் பார்த்துவிட்டு மெல்லென உள்ளே வருகின்றாள்.]**

இராசமாதேவி :

(*சினத்தோடு*) ஆரங்கே? அப்பாமுதலி மகள் வடிவழகியோ? இங்கே மாளிகைக்குள் எப்படி வந்தாய்? காவற்காரன் மாளிகை வாயிலில் இல்லையோ? ஒழுக்கங்கெட்ட பதரே! என்னருகில் வர உனக்கென்ன துணிவு? இது முதற் குற்றம்; மன்னித்தேன். இனி இந்த மாளிகைக்குக் கிட்டவும் கால் வைக்கக் கூடாது. தெரிகிறதோ? அங்கயற்கண்ணி, இந்தச் சிறுக்கியை எனக்கு முன்னே நிற்கவிடாதே. வெளியே போகச் சொல்லு.

**[அங்கயற்கண்ணி வடிவழகி அருகே போகின்றாள்.]**

வடிவழகி :

(*அப்பால் விலகி இராசமாதேவியைப் பார்த்துப் பணிவோடு*) தேவி, நான் செய்தது குற்றந்தான். என்மேற் கோபிக்கவேண்டாம். தெரியாமற் செய்துவிட்டேன். பொறுத்தருளுங்கள். இப்போது நான் இங்கு வந்தது வேறு காரிய

மாய். அது இரகசியம். நீங்கள் அதைக் கட்டாயம் அறிதல்வேண்டும்.

இராசமாதேவி :

சரி, கண்ணு, அவளை விடு. இரகசியத்தைக் கூறட்டும், பார்ப்போம்.

வடிவழகி :

தேவி, *(அங்கும் இங்கும் பார்த்து விட்டு)* மகாராசாவுக்கு மாறுய்ச் சூழ்ச்சிகள் பல நடக்கின்றன. அவரைக் கவனமாய் இருக்கச் சொல்லுங்கள். அவர் நன்மைக்காகப் பாடுபடுபவர் போலப் பலர் காட்டித் திரிகிறுர்கள். அவர்களை நம்பவேண்டாம். படுமோசம் பண்ணி விடுவார்கள்.

இராசமாதேவி :

*(மிகக் கவனமாய்)* அழகு, பயப்படாதே, இங்கே கிட்டவா. ஏன் அப்படிச் சொல்லுகிறுய். இந்த வஞ்சகச் சூழ்ச்சிகளைப்பற்றி உனக்கு ஏதும் தெரியுமோ? அஞ்சாமற் சொல்லு.

வடிவழகி :

ஓம், தேவி. *(சிறிது தயங்கி தாழ்த்திய தூரலில்)* எல்லாம் எங்கள் வீட்டிலேதான் நடக்கின்றன.

இராசமாதேவி :

*(திகிலடைந்து)* அப்படியோ?

வடிவழகி

தேவி, உங்களை மன்றுடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இங்கு வந்தது ஒருவருக்கும் தெரியக் கூடாது. என்னைக் கடுங்காவலில் வைத்திருக்கிறுர்கள். என்றுலும் ஒருவகை

யாக ஒளித்து வந்தேன். நான் வந்ததை அவர்கள் அறிந்தால் என்உயிருக்கேஆபத்து.

இராசமாதேவி :

தெரியும், ஒன்றுக்கும் பயப்படாதே.

வடிவழகி:

தேவி, நான் இனி நிற்கமுடியாது. வீட்டுக்குப் போய்ச் சேரவேண்டும்.

இராசமாதேவி :

சரி (*அங்கயற்கண்ணியை விளித்து*) கண்ணு, அழகைக் கவனமாய் மாளிகையின் பின்பக்கத்துக் கதவாற் கொண்டுபோய், அவள்வீட்டுப் பூஞ்சோலை வாயிலில் விட்டுவா.ஒருவருக்குந் தெரியாமல் பதனமாய்ப் போங்கள்.

அங். கண்:

ஓம் தெரியும்.

வடிவழகி :

நான் போய் வருகிறேன், தேவி.

இராசமாதேவி :

(*அவள் தோளிலே தன் கையை வைத்து*) போய் வா, அழகு.

[இருவரும் போகின்றனர். இராசமாதேவி ஆழ்ந்த எண்ணத்தோடு அங்குமிங்கும் உலாவுகின்றாள். சிறிது நேரம் சென்றபின் அங்கயற்கண்ணி திரும்பி வருகின்றாள்.]

இராசமாதேவி :

போய்ச் சேர்ந்து விட்டாளோ?

அங்.கண் :

ஓம், போய்விட்டாள்.

இராசமாதேவி :

நாம் அழகைப்பற்றி எண்ணியவை யெல்லாம் பிழை, அவள் அவ்வளவு கெட்டவள் அல்லள்.

அங்.கண் :

அப்படித்தான் நானும் நினைக்கிறேன்..

திரை

உறுப்பு II

களம் 6

இடம் :

அரசமாளிகை

[இராசமாதேவியும் அவள் தோழி அங்கயற்கண்ணியும் அரசமாளிகையில் இருந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

இராசமாதேவி :

அரசர் மன்னருக்குப் படையெடுத்துச் சென்று (கைவிரலால் எண்ணியபடி) திங்களோடு திங்கள் எட்டு, அடுத்த திங்கள்...... இன்றைக்குச் சரியாய்ப் பதினைந்து நாள். முதல் மந்திரியார் தனிநாயகமுதலியாருக்கு ஒரு செய்தியும் வரவில்லையாமோ?

அங். கண் :

மன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து மிகத் தூரமல்லவோ. செய்தி அனுப்பினாலும் விரைவில் வரமாட்டாது. அதைக் கொண்டு வருகிறவன் இந்தக் காடுமேடெல்லாம் தாண்டிக் கடல் கடந்து வந்து சேரவேண்டும்.

[அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வெளியே மணி கேட்கின்றது. வாயில்காவலன் உள்ளே வருகின்றான்.]

வாயில்காவலன் :

தேவி, கட்டியகாரன் வாயிலில் வந்து நிற்கின்றான். தங்களுக்கு அறிவிக்க ஏதோ செய்தி கொண்டு வந்திருக்கிறானாம்.

இராசமாதேவி :

(*பரபரத்து*) கட்டியகாரனோ? என்ன, மன்னூரிலிருந்து வந்து விட்டானோ? உடனே கூட்டிவா.

[வாயில்காவலன் வெளியே போந்து கட்டியகாரனை அழைத்து வந்து இராசமாதேவி முன்னிலையில் விட்டுப் போகின்றான்.]

கட்டியகாரன் :

(*வணங்கிக்கொண்டு*) தேவி, வணக்கம்.

இராசமாதேவி :

(*பரபரப்புடன்*) கட்டியகாரா, சண்டை முடிவென்ன? எங்களுக்கு வெற்றிதானே?

கட்டியகாரன் :

எங்கள் மகாராசா போயிருக்கும்போது அதைச் சொல்லவும் வேண்டுமோ ?

[எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சிக்குறிகள் தோன்றுகின்றன.]

இராசமாதேவி :

நீ கொண்டு வந்த செய்தியை விபரமாய்ச் சொல்லு. கேட்க விரும்புகின்றோம்.

கட்டியகாரன் :

தேவி, நாம் மன்னூருக்குச் சென்றபோது அங்கே பறங்கியர் கோட்டை கட்டிக் கொண்டிருப்பதைக் கண்டோம். அவர்கள் கப்பல்கள் மன்னூர்க் கடலில் நங்கூரமிட்டிருந்தன. எங்கள் கடற்படையும் அப்பொழுதுதான் கடல் வழியாக மன்னூரை அடைந்தது. அதைக் கண்டவுடன் மகாராசா பறங்கிக் கப்பல்களைத் தாக்கும்படி எங்கள் கடற்படைத் தலைவருக்குச் செய்தி அனுப்பினார். உடனே எங்கள் கடற்படை பறங்கியா கப்பல்களைத் தாக்கிச் சிதற அடித்துத் துரத்தியது. அதே நேரத்தில்

எங்கள் தரைப்படை பறங்கியரின் தரைப் படையோடு போர் செய்தது. உயிரைத் துரும்பெனவும் மதியாது வேகமாய்ப் போர் புரிந்த எங்கள் படைவீரர் தாக்கு தலுக்கு எதிர் நிற்க முடியாது பறங்கிப் படை வெருண்டு ஓட்டமெடுத்தது. பறங் கியரைத் துரத்தியபின் அவருக்கு உள வாய் நின்று உதவி புரிந்து திருக்கேதீச்சர ஆலயத்தையும் அழித்த துரோகிகளுக்கும் தக்க தண்டனை விதித்தோம். அதன்பின் மன்னருக்குக் காவலாக அங்கேயுள்ள கோட்டையில் ஒரு தரைப்படையையும் மாந்தைக் கடலில் ஒரு கடற்படையையும் நிறுத்திவிட்டுத் திரும்பி வந்திருக்கிறோம்.

இராசமாதேவி :

அரசர் நல்ல சுகந்தானே? சண்டையில் எதிரிகளால் அவர் உடம்புக்கு ஒருவகை யான தீங்கும் வரவில்லை. அப்படித்தானே?

கட்டியகாரன் :

இல்லை, இல்லை, மகாராணி, அப்படியொன் றும் இல்லை. நல்ல சுகமாகத் தம்முடைய சேனைகளோடு பஞ்சகல்யாணியில் உல்லாச மாகத் திரும்பிவருகிறார்.

இராசமாதேவி :

அவரை எங்கே விட்டுப் பிரிந்து வந்தாய்?

கட்டியகாரன் :

தனங்கிளப்புக்குக் கிட்ட. நான் அவரைப் பிரிந்து வந்து அதிக நேரமாய் விட்டது. இதுவரையில் அவர் நகர எல்லைக்குள் வந் திருப்பார். நான் வரும்போது முதல் மந் திரியார் தனிநாயகமுதலியாரும் அங்கே வந்திருந்தார்.

இராசமாதேவி :

அப்படியோ? *(தோழியைப் பார்த்து)* கண்ணு, அரசரை வரவேற்பதற்கு வேண்டிய ஆயத் தங்களைச் செய்.

[உடனே தோழி உள்ளே சென்று மாலே தட்டம் முதலியவற்றைக் கொண்டுவந்து வாயிலில் விளக்கேற்றி நிறைகுடம் வைக்கின்றுள். சிறிது நேரத்தில் அரசனும் மெய்காப்பாளன் வீரமாப்பாணனும் முதலமைச்சர் தனிநாயகமுதலியும் வீரர் சிலரும் வருகின்றனர். அவர் வந்து வாயிலில் நிற்க இராசமாதேவி அரசனெதிரே சென்று அவனுக்கு ஆலாத்தி எடுத்துப் பொட்டிடுகின்றுள். பின் அரசன் போய் இருக்கையில் அமர, போர்வீரர் ஒழிந்த ஏனையோரும் அங்குள்ள இருக்கைகளில் அமருகின்றனர். அதன்பின் போர்வீரர் வெளியே போகின்றனர்.]

இராசமாதேவி :

*தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று முன்னரே எங்களுக்குத் தெரியும். வீரமாகாளி அம்மன் கோயிலில் பூக்கட்டி வைத்துப் பார்த்தோம். எங்களுக்கு வெற்றி என்று தெரிந்தது*

சங்கிலி :

*(அன்புடன் அவளைப் பார்த்து புன்னகைபுரிந்துவிட்டு தனிநாயகமுதலியை நோக்கி)* இந்த வெற்றியைக் குறித்து வீரமாகாளி அம்மனுக்கு வழக்கம் போல் வேள்வி செய்ய வேண்டும். அதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்ய மறந்து விடக் கூடாது. தெரிகிறதே?

தனிநா. மு :

ஓம், ஓம், கட்டாயம் செய்வேன். இப்பொழுதே போய் அதைப்பற்றிக் கவனிக்கின்றேன். *(போகின்றன்)*

இராசமாதேவி :

*காலைச் சாப்பாட்டைப் பற்றிக் கவனிக்க மறந்துவிட்டேன். (தோழியைப் பார்த்து) அடி, கண்ணு, வா, போய் அதனை ஆயத்தப் படுத்துவோம்.*

அங். கண் :

சரி, வருகிறேன்.

[அங்கயற்கண்ணியும் தேவியும் உள்ளே போகின்றனர்]

சங்கிலி :

மாப்பாணு, எல்லாம் செவ்வையாய் முடிந்துவிட்டன; ஆனால் வடிவழகியைப் பற்றித்தான் கவலையாயிருக்கிறது. இனி அவளைச் சந்திப்பதென்றால் முடியாத காரியம். தேவி மிகவும் கவனமாய் இருப்பாள்.

வீரமா :

சங்கடம் தான்.

சங்கிலி :

நான் வடிவழகியோடு அவள் கையில் அகப்பட்ட செய்தியை இப்பொழுது மறந்திருப்பாளோ?

வீரமா :

மறந்திருக்க மாட்டார். பார்க்கிற அளவில் உங்களை மன்னித்து விட்டார் போல இருக்கிறது. தேவி பெருங்குணம் படைத்தவர் என்று உங்களுக்குத் தெரியுந்தானே.

சங்கிலி :

ஓம், ஓம், அது கிடக்க, என்றால் வடிவழகியைச் சந்திக்காமல் இருக்கவும் முடியாது, தேவி கட்டளையை மீறி அவள் மனதைப் புண்படுத்தவும் முடியாது. இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேனப்பா. இதற்கு என்ன செய்யலாம்? சொல்லு.

வீரமா :

செய்கிறதென்ன? ஒருவகையாகத் தேவிக்கு இதைத் தெரியப்பண்ண வேண்டியதுதான்.

சங்கிலி :

என்ன வகையாகத் தெரிவிக்கலாம்?

வீரமா :

தேவியின் தோழி அங்கயற்கண்ணியாலே தான் இது ஆக வேண்டும். நான் அவளிடம் சொல்லி ஒருவகையாக ஒழுங்குபடுத்தி விடுகிறேன். இப்பொழுது தேவி நல்ல மனப்பூரிப்பாக இருக்கிறார். ஆகையால் இன்றைக்கு இதைப்பற்றி ஏதும் செய்தால் எல்லாம் நாங்கள் நினைத்தபடி முடியும். இன்றிரவே நீங்கள் வடிவழகியைக் காணவும் கூடும்.

சங்கிலி :

அப்படியானால் நல்லது; மாப்பாணா (*வீரமாப்பாணன் முதுகில் தட்டி*) எல்லாம் உன்னாலே தான் ஆகவேண்டும்.

வீரமா :

அதைப் பற்றி யோசிக்க வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

திரை

இரண்டாம் உறுப்பு முற்றும்.

உறுப்பு III  களம் 1

இடம்:

நல்லூர்த் தெரு.

[நல்லூர்த் தெ வொன்றில் சண்முகம், கந்தையா, உதுமான் இலெப்பை ஆகிய மூவம் நின்று பேசுகின்றனர்.]

சண்முகம்:

என்ன கந்தையா, உன்னை நெடுநாளாய்க் காணவில்லை. என்ன சங்கதி?

கந்தையா:

நெடுந்தீவுக்குப் போயிருந்தேன்.

சண்முகம்:

ஏன் அங்கே?

கந்தையா:

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலே அடுத்த சனிக்கிழமை தேர். அன்றைக்கு நாங்கள் மோர்ப்பந்தல் போடுவது வழக்கம். அதற்குத் தயிர் எடுப்பதற்காக அங்கே போயிருந்தேன்.

சண்முகம்:

கிடைத்ததோ?

கந்தையா:

அதிகம் கிடைக்கவில்லை. முந்தி முந்திப் போல இப்பொழுது மாடுகள் அங்கு தொகையாய் இல்லை.

சண்முகம் :

ஏன் அப்படி?

கந்தையா :

இந்தப் பறங்கிக்காரன் இடையிடை அங்கே போய் ஆட்களை வெருட்டி மாடுகளையெல்லாம் இறைச்சிக்குப் பிடித்துக்கொண்டு போய் விடுகிறான். அதனால் இப்பொழுது அங்கேயும் பால் மெத்தக் குறைவு, அதனோடு அங்கேயிருந்து இராமேசுரக் கோயிலுக்கு அந்தநாள் தொட்டு ஒவ்வொரு நாளும் பால் கொண்டு போவது வழக்கம். அதற்குக்கூடப் பால் தட்டுப்பாடாய் இருக்கிறதாம். அவ்வளவு மோசமாய் இருக்கிறது இந்தப் பறங்கிப்படையின் அநியாயம்.

உதுமான் :

மெய்தான் காணும். இந்தப்பறங்கிகளாலே பெரிய தொல்லையாய் இருக்கிறது. இந்த அநியாயப் படுவாரை எங்கள் இராசா இந்த நாட்டில் ஏன் விட்டுக்கொண்டிருக்கிறார். எப்படிக்காணும் இவர்கள் இங்கே வந்து சேர்ந்தார்கள்?

சண்முகம் :

ஒரு நாள் பறங்கிக்காரர் சிலர் கப்பலால் பண்ணைத் துறையில் வந்திறங்கி இராசசபைக்கு வந்தனர்; வந்து 'நாங்கள் வியாபாரிகள், பல நாடுகளுக்கும் போய் வியாபாரம் செய்து வருகிறோம். இங்கேயும் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்து வந்திருக்கிறோம். மகாராசா உத்தரவு தரவேண்டும்' என்று அரசரை மன்றாடிக் கேட்டனர். அதற்கு அவர் ' நீங்கள் சொல்லுவதை நம்ப முடியாது. வேறேதோ எண்ணத்தோடு வந்திருக்கிறீர்கள் போலத் தோற்றுகிறது' என்று சொல்லி மறுத்து விட்டார்.

உதுமான்:

அப்படியானுல் அவர்கள் இங்கே வந்தது எப்படி?

சண்முகம்:

அரசர் இப்படி மறுத்துவிட, சபையில் இருந்த பரநிருபசிங்கரும் மந்திரிமார் சிலரும் ஒருமித்து 'இவர்கள் உண்மையாக வியாபாரிகள் தான். வேறொரு வகையான எண்ணத்தோடும் வரவில்லை. மன்னுரைப்பிடிக்க வந்த பறங்கிக்காரர் வேறு; இவர்கள் வேறு. இவர்களை வியாபாரம் பண்ணவிட்டால் எங்கள் நாட்டுக்கு நன்மையாய் இருக்கும். இங்கே கிடையாத எத்தனையோ வகையான நூதனப் பொருள்களை நாங்கள் இவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்' என்று சொன்னுர்கள். இப்படிப் பரநிருப சிங்கரும் சில மந்திரிமாரும் திருப்பித் திருப்பிச் சொல்ல அரசர் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தார்.

கந்தையா:

இவர்களை இங்கே நுழையவிட்டது தவறு என்று நினைக்கிறேன். முந்திமுந்தி ஒரு மாதிரி அடக்க ஒடுக்கமாய்த் திரிந்தார்கள். இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாய் அடம் பண்ணத் தொடங்கி விட்டார்கள்.

உதுமான்:

மெய்தான் சண்முகம். நேற்றும் ஆரியகுளத்தடியில் இவர்கள் கலகம் செய்தார்களாம். இவர்களாலே இந்த நாட்டுக்குப் பெரிய தொல்லை வரப்போகிறது.

சண்முகம்:

சரிதான். இவைகளுக் கெல்லாம் காரணம் எங்கள் அரசர் வைத்திருக்கும் மந்திரிமார்களிற் சிலர்தான் என்று கேள்வி. அரசர்

கெட்டித்தனம் உள்ளவர். ஊர் நன்மைக் காகப் பாடுபடுகிறவர். ஆனால் மந்திரிமார் களோ தங்கள் தங்கள் நன்மையையே கரு தும் சுயநலப் புலிகள். இவர்கள் எங்கள் அர சருக்கும் நாட்டுக்கும் என்ன தீமை செய்வா ர்களோ தெரியவில்லை.

**உதுமான்:**

(*அச்சத்தோடு அங்கும் இங்கும் பார்த்துத் தாழ்ந்த தூரலில்*) ஏதோ சூழ்ச்சி நடக்கிறதாகத் தான் நானும் கேள்விப் பட்டேன்.

**சண்முகம்:**

(*தலையை அசைத்து*) மெல்லப் பேசு, எங்களுக் கேன் இந்தத் தொல்லை. பெரிய இடத்து அலுவல்.

[அப்பொழுது தெருத்தோறும் சென்று சேலை, ஊசி, பாசிமணி முதலிய பொருட்களை விற்கும் அந்தோனி, ஆந்திரே, பேதுரு என்னும் பறங்கி வியாபாரிகள் மூவர் தம் பொட்டளிகளைத் தலையிலும் தோளிலும் சுமந்து கொண்டு வருகின்றனர். அவர்கள் தம் பொருட்களை ஓர் இடத்தில் இறக்கி, ஒருவரோடொவர் பேசிக் கொண்டு பொட்டளிகளிலிருந்த பொருட்களை நிலத்தில் பரப்புகின்றார்கள்]

**அந்தோனி:**

அப்பப்பா, (*தனது வியர்வையைத் துடைத்து ஒரு துணியால் விசுக்கிக்கொண்டு*) ஆந்திரே, என்ன செல்வமப்பா இந்த ஊரிலே.

**ஆந்திரே:**

இவ்வளவு செல்வம் எங்கள் போத்துக்கலில் இருந்தால் நாங்களெல்லாம் இப்படி ஊரூ ராய் அலையவேண்டியதில்லையே.

**பேதுரு:**

சிஞ்ஞோர், இந்த நாட்டை எப்படியாவது பிடித்து விட்டால் இங்கேயுள்ள செல்வங்

களையெல்லாம் எங்கள் நாட்டுக்குக்கொண்டு போய் விடலாம்.

அந்தோனி:

பிடிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இங்கே உள்ள அரசனே மெத்தக் கெட்டிக் காரன். எங்கள் ஊரவர்தான் சண்டையிலே சூரர் என்றிருந்தேன். ஆனால் இங்கே வந்து பார்த்தால் ஒவ்வொருவனும் சண்டையிற் புலியாய் இருக்கிறான். அரசனோ என்றால் அவர்களுக்குத் தகுந்தவன். சண்டையிற் பெரிய சிங்கம்.

ஆந்திரே:

அப்படியென்று தான் மன்னார்ப் போருக் குப்போன பிலிப்பும் சொன்னான். அரசன் போர்க்களத்தில் வந்திறங்கினது தானும். எங்கள் பறங்கிப் பட்டாளமெல்லாம் தப் பினோம் தப்பினோம் என்று குடல் தெறிக்க ஓடிவிட்டனவாம்.

அந்தோனி:

ஓம், கடற்போரிலும் எங்களுடைய ஆட் களுக்குப் படுதோல்வியாம் ஆக மூன்று கப்பல்தான் தப்பிக்கோவைக்குப் போயின வாம்.

பேதுரு:

என்ன, போருக்குப் போன நாற்பத்தெட்டுக் கப்பலிலேயோ?

அந்தோனி:

ஓம், சிஞ்ஞோர்.

பேதுரு:

பொல்லாத பயல்களாய் இருக்கிறார்களே.

அந்தோனி :

இவர்களோடு கவனமாய்ப் புழங்கவேண்டும்.

[பறங்கியர் இவ்வாறு பேசிக்கொண்டு தம் பொருட்களைப் பரப்பியதும் மக்கள் வந்து அவற்றைப் பார்த்து விலை கேட்கின்றனர். சண்முகம், கந்தையா, உதுமான் இலெப்பை ஆகிய மூவரும் எட்டத்து நின்று பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். அப்பொழுது உதுமான் இலெப்பை பின்வரும் பாட்டை அதற்கு வேண்டிய சைகைகளோடு பாடுகிறான்]

உதுமான் :

*என்ன பிடிக்கிறாய்? அந்தோனி*
*எலிப் பிடிக்கிறேன் சின்னோரே*
*பொத்திப் பொத்திப்பிடி அந்தோனி*
*பூறிக் கொண்டோடுது சின்னோரே.*

[அதைக் கேட்டு மூவரும் சிரிக்கின்றனர். அதன்பின் கந்தையா பாடுகிறான்.]

கந்தையா :

*சுண்ணகச் சந்தையிலே — பறங்கி*
*சுங்கானைப் போட்டுவிட்டான்*
*பார்த்துக் கொடுப்பவர்க்குப் — பறங்கி*
*பாதிச் சுங்கான் கொடுப்பான்.*

[மூவரும் கைகொட்டி நகைக்கின்றனர்]

சண்முகம் :

அவர்கள் என்னென்ன பொருள் விற்கிறார்களென்று கொஞ்சம் போய்ப் பார்ப்போமோ?

கந்தையாவும் உதுமானும் :

ஓம், ஓம்.

[மூவரும் பறங்கியர் இருக்கும் இடத்திற்குப் போகின்றனர். சிறிது நேரம் அங்கிருக்கும் பொருட்களை உற்றுப் பார்த்துவிட்டுச் சண்முகம் பாசிமணிக்கோவையொன்றை எடுத்து விலை கேட்கின்றான்.]

சண்முகம் :

*சிஞ்ஞோரே! இதற்கு விலை என்ன?*

பேதுரு :

*அதுவோ? பதினெட்டு இறசால்.*

சண்முகம் :

*(உதுமான் இலெப்பையை நோக்கி) காக்கா, இவன் என்ன பதினெட்டு இறசால் என்கிறான். இது பெறுமோ?*

உதுமான் :

*பெறாது, இவை எல்லாம் பொய் வேலை காணும். இவைகளுக்கு ஏன் இவ்வளவு காசு? ஊர்ப்பணத்தை வீணாய்ப் பறங்கிக்குக் கொட்டிக் கொடுப்பதுதான். அவன் காசுகளையெல்லாம் மூட்டை கட்டி நாளைக்குத் தன்னூருக்குக் கொண்டு போய் விடுவான்.*

பேதுரு :

*(உதுமான் பேச்சைக் கேட்டுச் சினந்து) உமக்கு ஏன் காணும், இந்தத் தொளாபாரம் எல்லாம்? வாங்க விரும்பினால் வாங்கும். இல்லாவிட்டால் வந்த வழியைப் பார்த்து நடவும்.*

உதுமான் :

*என்ன ஒருவகையாய்ப் பேசுகிறீர்? எங்கேயிருந்து பேசுகிறீர் என்று தெரியுமோ?*

பேதுரு :

ஓம், தெரியும், நாங்கள் ஆர் என்று தெரியுமோ?

உதுமான் :

உங்களேயோ தெரியாது. பாசாங்கு பண்ணிப் பணத்தைப் பறிக்கும் ஏமாற்றுக்காரர். உங்கள் வீம்புகள் எல்லாம் உங்கள் ஊரிலே. சங்கிலியன் சீமையிலே இந்தப் பருப்பெல்லாம் வேகாது.

சண்முகம் :

ஏன் காணும் உவனேடு உந்தக் கதையெல்லாம்?

உதுமான் :

இல்லே அண்ணே, இவன் எங்களூரிலே வந்து எங்களுக்கல்லவோ நாட்டாண்மை காட்டப் பார்க்கிருன்.

பேதுரு :

பொத்தடா வாயை.

உதுமான் :

என்னடா சொன்னுய்? மன்னுரிலே எங்கள் இராசாவிடம் வாங்கியது போதாதோ? என்ன, மறந்து விட்டீர்களோ?

[பேதுரு உதுமான் இலெப்பைக்கு அடிக்கிருன். சண்முகம் பேதுருவுக்கு அடிக்கிருன். பக்கத்து நின்ற பறங்கியரும் அங்குள்ளவரோடு கைகலக்கின்றனர். ஈற்றில் பறங்கியர் தம் பொருட்களெல்லாவற்றையும் விட்டு ஓட்டமெடுக்கின்றனர்]

திரை

உறுப்பு III　　　　　　　　　　　　　　　　　　களம் 2

இடம்:

அரசன் அவைக்களம்.

[பரநிருபசிங்கன், தனிநாயகமுதலி, அரசகேசரி, அப்பா முதலி, முத்துலிங்கமுதலி அடியார்க்கு நல்லான், தளபதி இமையாணன், வீரமாப்பாணன் ஆகியோர் தங்கள் தங்கள்இருக்கைகளில் அமர்ந்திருக்கின்றனர்.]

சங்கிலி:

சபையோரே, சிலகாலத்திற்கு முன்பு பறங்கி வியாபாரிகள் சிலர் இங்கே வந்து இந்த நாட்டிலே தாங்கள் வியாபாரஞ் செய்வதற்கு எம்மிடத்திலே உத்தரவு கேட்டனர். அது எனக்கு விருப்பமில்லாதபோதிலும் உங்கள் எண்ணத்திற்கு இசைந்து உத்தரவு கொடுத்தேன். அவ்வாறு கொடுக்கும்பொழுதும் இவர்கள் பகற்காலத்தில் நாட்டினுள் வந்து வியாபாரம் பண்ணலாம். ஆனால் இராக்காலத்தில் ஊரினுள் தங்கக் கூடாது. அவர்கள் தோணிகளுக்கே போய் விட வேண்டும் என்ற கட்டுபாட்டோடேயே அவ்வுத்தரவைக் கொடுத்தேன். சில நாளாக வியாபாரம் அப்படியே நடந்து வந்தது. பின்பு அவர்கள் இரந்து கேட்டபடியால் வியாபாரப் பொருட்களைச் சேகரித்து வைப்பதற்குக் கடலோரத்தில் பண்டகசாலை ஒன்று கட்ட உத்தரவு கொடுத்தோம். அவைக்களத்தோரே! இவைகளெல்லாம் உங்கள் நினைவில் இருக்கும்.

தனிநா. மு:

அரசே, பறங்கியர் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகிகள் என்பதை நாம் அப்பொழுதே அறிந்திருக்க வேண்டும்.

சங்கிலி :

பண்டகசாலை கட்ட நாம் கொடுத்த உத்தரவைச் சாட்டாகக் கொண்டு இவர்கள் கடற்கரைக்கு அருகிலுள்ள பண்டகசாலைக்குப் பதிலாகக் கோட்டை ஒன்று கட்டி எழுப்பியிருக்கிறார்கள். இச்செய்தியை அறிந்து கோட்டையை இடித்தெறிதல் வேண்டும் என்று கட்டளை விடுத்தேன். அதற்குப் பறங்கியர் ‘கோட்டையை இடிக்க முடியாது, போருக்கு ஆயத்தம் என்று இன்று காலை ஓலை விடுத்திருக்கின்றனர் இப்படி அவர்கள் எம்மைப் போருக்கு அறைகூவி அழைக்கும்போது நாம் சும்மாவிருத்தல் சரியன்று. பறங்கிகள் எம்மைக் கோழைகள் என்று நினைத்தார்களோ? சரி, அவர்களை ஒருகை பார்க்கத்தான் வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

[அப்பொழுது பராநிருபசிங்கனும் அப்பாமுதலியும் ஒருவரை ஒருவர் கடைக்கண்ணுற் பாக்கின்றனர். ஏனையோர் பிரமித்துப்போய் இருக்கின்றனர்]

தனிநா. மு.

அரசே, யாம் ஒன்றை நினைத்துச் செய்ய அது வேறொன்ருய் விளைந்திருக்கின்றது. அன்று பறங்கியர் வியாபாரஞ்செய்ய உத்தரவு கேட்டபொழுது தாங்கள் அவரைப் பார்த்து ‘நீங்கள் இங்கு வந்த நோக்கம் வியாபாரமன்று. வேறேதோவாய் இருக்க வேண்டும்.’ என்று கூறி உத்தரவுகொடுக்க மறுத்தீர்கள். அதுவே சரியென யானும் எண்ணினேன். ஆனுல் இங்கிருந்த மற்றையோர் பறங்கியரின் சார்பாய்ப் பேசினர். அதனுல் நான் வாளா இருந்தேன். தாங்கள் அன்று சொன்னது முழுவதும் சரியென்று இப்பொழுது நிச்சயமாய்த் தெரிகின்றது. பறங்கியர் இங்கு வந்தது வியாபாரத்துக் கன்று. எமது நாட்டைப்பிடித்து எம்மை

அடிமைகளாக்கவே. அவர்கள் தந்திரத்தை முன்னரே அறியாதுபோனோம்.

அடியார் ந.

எம்மைப் பறங்கியர் பேயர் ஆக்கிவிட்டார்.

தனிநாமு.

முற்றிலும் உண்மை. அவர்கள் நெஞ்சுத் துணிவுதான் என்ன? (பல்லை நெருமுகிறன்.)

சங்கிலி:

அவையோரே! போரே பறங்கியரின் திமிர்ப் பிற்கு மருந்து.

அடியா. ந:

அதுவே சரி. இம்முறை அவருக்கு மன்னூ ரிலே கொடுத்த குளிகையிலும் காரசார மான குளிகை கொடுக்கவேண்டும்.

அரச கேசரி:

அரசே, தாங்கள் போரே நிகழ்த்துவதாகத் தீர்மானித்தால், பகைவர் வலுவடையுமுன் அவரை விரைந்து தாக்குதல்வேண்டும்; அப்பொழுதுதான் இலகுவாக வெற்றி கொள்ளலாம்.

"இளைதாக முண்மரங் கொல்க களையுநகர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து."

சங்கிலி:

புலவர் சிகாமணியே, இனி நடப்பதை இருந்து பாருங்கள். தமிழரைப் பேடிகள் என்று நினைத்தானே பறங்கி. யாழ்ப்பாணத் தானின் கையுரம் மல்லிவிற்கும் மடை யருக்கு விளங்கவில்லை. கடல் கடந்து கடா ரங்கொண்ட வீரத்தமிழனின் வழித்தோன் றல்கள் நாம். இந்த மேனாட்டு மிலேச்சப்

பயல்களைக் கலக்கி அடித்துத் துரத்தாவிடில் நான் தமிழனல்லன். தளபதி இமையாணரே!

**இமையா :**

அரசே.

**சங்கிலி :**

உமது படைவீரரின் ஆண்மையைக்காட்டும் நேரம்வந்துவிட்டது. ஆயத்தம்பண்ணும். தமிழன் கைவரிசையின் உருசியைப் பறங்கி ஒரு சிறிது உணரட்டும்.

**திரை.**

உறுப்பு III களம் 3

**இடம்:**

**யாழ்ப்பாணம் பறங்கியர் கோட்டை.**

**[சூசை, உலோப்பே, மிக்கேல் ஆகிய மூவரும் போர் முனையினின்றும் வந்து ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு தமது போருடையைக் கழற்றுகின்றனர்]**

**சூசை:**

இன்றைக்கு நடந்த சண்டையிலேதான் நான் மிகவும் களைத்துப்போனேன். சூ, சண்டை தொடங்கிப் பத்து நாட்களாகி விட்டன. இன்னும் ஒரு முடிவையுங் காணவில்லை.

**உலோப்பே:**

இந்தச் சண்டை முடிந்துவிட்டால் நாம் ஆறுதலாகப் படுத்துறங்கலாம். கோவையி லிருந்து வந்த நாள் தொடக்கம் ஒரே சண்டையாகத்தானிருக்கிறது.

**மிக்கேல்:**

இன்றைக்கு நடந்த போரில் எதிரிகளை ஒரு வகையாகத் தோற்கடித்துவிட்டோம். இவ் வளவு காலமும் தொல்லைப்பட்டாலும் இன்றைய முடிவு எங்களுக்கு உற்சாகமூட் டக்கூடியதுதானே. நாளைக்குக் கட்டாயம் தமிழ்ச்சேனை முழுவதும் ஓட்டம் எடுக்கும். அப்பொழுதுதான் நமக்கு விளையாட்டு. கொள்ளையடிக்க நல்ல வசதி.

உலோப்பே :

நாளைக்கு வருவது நாளைக்கு. இப்போது களைத்துப்போனேன். இந்தக் களை நீங்க ஏதும் குடிக்கவேண்டும்.

மிக்கேல் :

இந்த நேரம் குடிக்காதுபோனல் வேறெந்த நேரம் குடிப்பது? (உரக்க) மத்தியாசு, மத்தியாசு.

உள்ளே :

ஏன் சிஞ்ஞோர்?

மிக்கேல் :

எடே, அந்தச் சாராயப்போத்தலைக்......... கொண்டுவா.

சூசை :

தமிழர் தளபதி இமையாணன் சண்டை போட்டதைப் பார்த்தீர்களோ? என்ன மாதிரி நின்று போர் செய்தான்! அவனுக்கு எதிரே நிற்கமுடியாது எங்கள் தளபதி தொம்பிலிப்புகூடப் பின்வாங்கிவிட்டார். அவன் போட்ட சண்டை அவ்வளவும் சண்டைதான். என்ன வீரம்! என்ன ஓர்மம்!

[அப்பொழுது மத்தியாசு சாராயப் போத்தலையும் தமிளரையும் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போகின்ருன். யாவரும் சாராயத்தை வார்த்து வார்த்துக் குடிக்கின்றனர்]

மிக்கேல் :

(செருமிவிட்டு) சாய், கொள்ளையடிக்கிறதைப் பற்றிப் பேசினீர்கள். திருக்கோணமலையில் நடந்த போரில் நான் சண்டை செய்தேன். போரில் வெற்றி கிடைத்ததும் கொள்ளை

யடிப்பதற்கு நாங்கள் கூட்டங் கூட்டமாக பிரிந்துபோனோம். நானும் என் கூட்டத்தாரும் இந்தத் தமிழருடைய கோயிலொன்றுக்குள்ளே போய்ச் சேர்ந்தோம். அங்கே நாங்கள் கண்டதை என்னவென்று சொல்வது! பொன்னாலும் வெள்ளியாலும் உருவங்கள் செய்து வைத்திருந்தார்கள். முத்துக்களாலும் இரத்தினங்களாலும் செய்த நகைகள் எத்தனை! அடடா! அன்றைக்கு அங்கு சென்ற எங்கள் அதிட்டமே அதிட்டம்.

சூசை :

உதைச் சொல்லுகிறாய். நீ ஒரு கோயிலைக் கொள்ளை யடித்ததைப் பற்றிப் பெரிதாகப் பேசினாய். நான் எத்தனைகோயில்களில்நடந்த கொள்ளைகளில்பங்குபற்றியிருக்கிறேன் தெரியுமோ? அவ்வளவு பொருளும் இப்பொழுது என் கையில் இருக்குமேயானால் நான் இப்படியெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகச் சண்டை செய்து திரியத் தேவையில்லை. போத்துக்கலிலே ஒரு கோடிசீமானாய் எல்லாச் சுகங்களோடும் நாட்டு மாளிகையொன்றில் உல்லாசமாகக் காலங் கழிப்பேன்.

**[ அப்பொழுது பிரகன்சாவும் யாழ்ப்பாணக் கோட்டைத் தளபதி தொம்பிலிப்பும் வருகின்றனர். அங்கிருந்த மூவரும் எழுந்து மரியாதை செய்கின்றனர் ]**

பிரக. :

( *தொம்பிலிப்பை நோக்கி* ) சிஞ்ஞோர், இன்றைக்கு ஒருவகையாய்த் தமிழர் படையைத் தோற்கடித்து விட்டோம். யாழ்ப்பாணத்தை முற்றாகக் கைப்பற்றி விடலாம் போல் இருக்கிறது. என்றாலும், என் மனம் மகிழ்ச்சியடையவில்லை.

தொம் :

ஏன் சிஞ்ஞோரே?

பிரக: -

சங்கிலியைச் சண்டையிற் பிடித்து அவனுக்குத் தக்க தண்டனை விதித்தாலே யொழிய என்மனம் ஆறுதல் அடையாது.

தொம் :

இவ்வளவெல்லாம் செய்து முடித்து விட்டோம். இனி அவனைப் பிடிப்பது ஒரு காரியமோ? நாளைக்கே அவனைப் பிடித்து உங்கள் கையில் ஒப்புடைத்து விடுவேன். அப்பொழுது நீங்கள் அவனை விரும்பிய விதமாகத் தண்டியுங்கள்.

பிரக :

அவன் மிகுந்த வீரமுள்ளவன். அதுமட்டுமல்லாமல் மிகுந்த தந்திர புத்தியுமுள்ளவன். ஆகையால் அவனைப் பிடிப்பது நீ எண்ணுவது போல அவ்வளவு இலகுவல்ல.

தொம் :

அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். புத்திமான் பெல்வான் அல்லவோ? எங்களுக்குக் கிடைக்கும் வெற்றிகளுக்கெல்லாம் சரீர பெலம் மாத்திரந்தானு காரணம்? ஒரு ஐந்நூறு பறங்கியர் பல ஆயிரக் கணக்கான இந்த நாட்டு மக்களை எப்படி அடக்கி ஆள முடியும்? எங்கள் தந்திர புத்தியினுல் தான் இவைகளெல்லாம் வெற்றிகரமாக நிறைவேறுகின்றன. சங்கிலிக்கு மாருக அவன் சபையிலேயே ஐந்தாம் படையினர்கள் இருக்கிருர்கள். அவர்கள் உதவியால் பல அலுவல்களை நடத்தி வருகிரும். நாளைக்குச் சங்கிலியைப் பிடிப்பதற்கும் சூழ்ச்சி செய்திருக்கிரும்.

பிரக :

சங்கிலி நம்முடைய சூழ்ச்சிகளையும் வெல்லக் கூடிய தந்திரசாலி. கவனம், இக்காரியத்தை எப்படி செய்து முடிப்பீர்கள்?

தொம் :

*(அவனுடைய காதுக்குள் ஏதோ சொல்லுகிறன்)* தெரிந்ததோ?

பிரக :

*(தலையை அசைத்துப் புன்னகை புரிந்து)* மெத்தச் சரி.

திரை

உறுப்பு III | களம் 4

இடம்:

அரசமாளிகை

**[சங்கிலி கவலையோடு தன் கைகளை முதுகுப் புறமாகக் கட்டிக்கொண்டு அங்கும் இங்கும் உலாவுகின்றான். இராசமாதேவி ஒருபக்கத்தே நிற்கின்றாள்.]**

சங்கிலி :

(*இராசமாதேவியைப் பார்த்து*) பறங்கியர் என்ன வகையாய்ச் சண்டை செய்கிறார்களப்பா! இப்படியான போரை நாம் முன்பு பார்த்ததில்லை. இப்போது பிரகன்சா என்ற ஒருவன் கோவையிலிருந்து ஒரு புதிய பறங்கிப் பட்டாளத்தோடு வந்திருக்கின்றான். அந்தப் பட்டாளத்தார் கையாளும் போர் முறைகள் மிகவும் புதுமையானவை. இனி யாழ்ப்பாணம் எப்படித் தப்பப்போகிறதோ? கடவுளுக்குத்தான் தெரியும்.

இராசமாதேவி :

என்றாலும் மனத்தைரியத்தைக் கைவிடக் கூடாது. வீரமாகாளி கட்டாயம் துணை செய்வாள். இறுதியில் வெற்றி எங்களுக்கே.

**[அப்பொழுது அங்கயற்கண்ணி ஓலைச்சுருள் ஒன்றுடன் வருகின்றாள்]**

அங். கண் :

(*ஓலைச்சுருளை இராசமாதேவியிடம் கொடுத்து*) இந்த ஓலைச்சுருளைத் தங்களிடம் கொடுக்கும்படி வடிவழகி தந்துவிட்டுப் போகின்றாள்.

இராசமாதேவி :

என்ன? ஓலைச் சுருளோ? *(அதை வாங்கித் தனக்குள்ளே படிக்கின்றாள். அப்பொழுது அவள் முகத்தில் வாட்டமும் வெகுளியும் கலந்து தோன்றுகின்றன. உடனே அரசன் கையில் அச்சுருளைக் கொடுக்கின்றாள். அவன் அதைத் தனக்குட் படிக்கின்றான். அவன் முகத்தில் வெகுளிக்குறிகள் தோன்றுகின்றன. ஒன்றும் பேசாது அங்கும் இங்கும் உலாவுகின்றான். அப்பொழுது வீரமாப்பாணன் உள்ளே வருகின்றான். இருவரையும் குறிப்பாய் நோக்குகின்றான்.)*

வீரமா :

ஏன் ஒருவகையாய் இருக்கிறீர்கள்? என்ன சங்கதி?

**[அரசன் ஒன்றும் பேசாது அவனிடம் ஓலைச்சுருளைக் கொடுக்கின்றான். அவன் அதைக் கூர்ந்து படிக்கின்றான்]**

வீரமா :

*(ஆறுதலாய்)* இதைப்பற்றி ஏன் கவலை? வேண்டிய நடவடிக்கை எடுத்தால் எல்லாம் சரியாய்ப் போகும். அந்த வேலையை என்னிடம் விடுங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். *(திரும்பி இராசமாதேவியைப் பார்த்து)* தேவி, கவலை வேண்டாம்.

திரை.

இடம் :

நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறம்.

**[யாழ்ப்பாணத்து நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறத்து பலவீரர் போருக்கு ஆயத்தராய் அணி வகுத்து நிற்கின்றனர். தமிழ்ப்படையின் முன்னணியில் சங்கிலி, இமையாணன், அப்பாமுதலி, அடியார்க்கு நல்லான், தனிநாயகமுதலி, வீரமாப்பாணன் ஆகியோர் நிற்கின்றனர். ஒரு புறத்தே தொம்பிலிப்பும் வேறு பறங்கியர் நால்வரும் நிற்கின்றனர். அப்பொழுது காக்கை வன்னியன் போர்க்கோலமின்றிச் சாதாரண உடையோடு அங்கு வருகின்றான். அரசனைக் கண்டதும் அவன் விரைந்து செல்கின்றான்]**

சங்கிலி .

*(காக்கைவன்னியனைக் கண்டதும் அவனைத் தழுவுபவன் போலப் பாசாங்கு செய்து)* வன்னியனாரே, இப்போதுதான் ஊர்காவற்றுறையிலிருந்து வந்தீரோ? நல்ல தருணத்தில் வந்துவிட்டீர். உமது படைவீரர் எங்கே?

காக்கைவன்னியன் :

அரசே, தீவுப்பகுதியில் விடாமழையும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டபடியால் நான் வரப் பிந்திவிட்டது. என் சேனைகள் யாவும்ஆனைக் கோட்டைக்கு இப்பால் வந்து விட்டன.

(வன்னியன் அரசனைக் கட்டியணைப்பவன் போல் இறு கப் பிடித்துக் கொள்கிறான். சங்கிலி அவன் பிடியி னின்றும் விலகப் பார்க்கிறான். இவர்களிருவரும் இவ் வாறு மல்லுக்கட்டும்போது பறங்கிவீரர் ஓடி வருகின் றனர். அவருள் ஒருவன்கையில் விலங்கொன்று இருக்கின்றது.)

இமையா:

(அதைக் கண்டு) பிடியடா பறங்கிகளே.

[ஒரே குழப்பம். இமையாணன் பறங்கியர் தளபதி தொம்பிலிப்பைப் பிடித்துத் தலையிடுகின்றான். வீரமாப் பாணன் காக்கை வன்னியன் பிடியினின்றும் அரசனை விடுவிக்கின்றான். பின் காக்கை வன்னியனோடு சண்டை யிட்டு அவனை நையப் புடைத்துப் பற்றித் தளையிடுகின் றான். அதைக்கண்ட பறங்கியர் பயந்து ஓடுகின்றனர். அவரைத் தமிழ் வீரர் சிலர் விரட்டிக் கலைக்கின்றனர்]

சங்கிலி:

*(காக்கைவன்னியனை நோக்கி)* காக்கைவன்னிய னாரே! நீர் உமது நண்பனாகிய எனக்கும் உமது நாட்டிற்கும் செய்த தொண்டு மிக மெச்சத்தக்கது. *(காக்கை வன்னியன் தலை குனி ந்து நிற்கின்றான். சங்கிலி அங்கு நின்றவரைப் பார்த்து)* இத்தமிழர் பெருந்தகையும், இந்த யாழ்ப் பாணத்திலே உயர் குடியிற் பிறந்து உயர் நிலையில் அமர்ந்திருக்கும் பெரியார் பலரும் எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் ஆற் றிய தொண்டு நன்று! நன்று!! கடந்த பத்து நாளாகப் பறங்கியரோடு கடும்போர் புரிந் தோம். வீரமாகாளி அம்மன் கோயிலின் முன்னே உள்ள வெளியிலே மக்களின் இரத் தம் ஆறாய்ப் பெருகியது. ஏன்? எமது நாட்டி லிருக்கும் யோக்கியர் சிலர் தம்மையும் தமது குடும்பங்களையும் உயர்த்துவதற்கு எடுத்த முயற்சியாலன்றோ? இந்த யோக்கி யர் தமது நலத்துக்காக எமது நாட்டைப் பறங்கிக்கு விற்க முயன்றனர். ஆனால் இறை

வனருளால் எமது வீரர்கள் அவர்கள் முயற்சியைத் தடுத்து விட்டனர்.

(*அப்பொழுது அப்பாமுதலி அவ்விடத்திலிருந்து நழுவப் பார்க்கின்றான்; ஆனால் இமையாணன் அவனைப் போக விடாது தடுக்கிறான்.*) நம் நாட்டு மக்களைக் கொன்றவர் பறங்கியரல்லர். (*அப்பாமுதலியைச் சுட்டிக் காட்டி*) இந்தத் துரோகியும் இவனைச் சேர்ந்தவர்களுமே. இவர்களைப் பிடித்து விசாரணை செய்தல் எம் கடன். மேலும் இந்த நாட்டின் நலத்தைப் பாதிக்கும் வகையில் ஏதோ சூழ்ச்சி நடந்து வருவதாக நான் நெடுநாளாக ஐயுற்றிருந்தேன். நேற்று இரவு எனது கைக்கெட்டிய ஓலை ஒன்றால் சூழ்ச்சிகளெல்லாம் வெளியாயின. அப்பாமுதலியும் பரநிருபசிங்கரும் இச்சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர் இருவரும் இவன் (*காக்கைவன்னியனைச் சுட்டிக் காட்டி*) உதவியினால் பறங்கிப் படை இங்கு வர ஒழுங்கு செய்தனர். யாழ்ப்பாண மக்களின் வீரத்தாலும் அவர்களின் சுயநலமற்ற தியாகத்தாலும் பறங்கியர் கையினின்றும் எமது நாடு தப்பியது. யாழ்ப்பாணம் ஓங்குக! தமிழ் மக்கள் வாழ்க!

[அப்பாமுதலிக்கும் தளையிடுகின்றனர்.]

வீரமா:

பரநிருபசிங்கரையும் கைது செய்தல் வேண்டும். அரசே!

சங்கிலி:

அவரோ என் அண்ணனார். முடிக்குரியவர். அதைப்பற்றி யான் ஒன்றும் கூறேன். உங்கள் விருப்பம்.

திரை

உறுப்பு III களம் 6

## இடம்:

## நல்லூர்த் தெரு

**[நல்லூர்த் தெருவில் மக்கள் குழுமி நிற்கின்றனர். வள்ளுவர் தலைவன் அங்கு வந்து பறையறைந்து பின் வருமாறு விளம்பரம் செய்கின்றான்.]**

அகோ கேளும், மகாசனங்களே!

பூதலத்து வேந்தரெல்லாம் பணியுஞ் சீலன்
பொங்கி வரும் பகையரசர்க் கால காலன்
மாதவர்கள் புகழ்ந்துமிக வாழ்த்தும் வள்ளல்
மநுவுகலை யானவெல்லா மறிந்த மேலோன்
ஆதுலரை அளியுடனே புரக்கும் கோலோன்
அன்புடனே தடிகளெல்லாம் போற்று மண்ணல
தீதிலறம் யாவையுமே புரந்து போற்றித்
திண்மையொடு தமிழ்மக்கள் திறமைகாத்த

இராசாதி ராச இராச கம்பீர
இராச உத்தண்ட இராச மார்த்தாண்ட
பராரி கேசரி பறங்கிசன கோளரி
ஈண்டு புகழ் வான்மதி
ஈழமண்டல பூபதி
சகராச சேகரன்
தமிழர்தங் கோமகன்
சங்கிலி மகாராச நிருபேந்திரனுக்கு
வெற்றி வெற்றி!

**(நிறுத்திப் பறை அறைகின்றான்)**

மன்னர்க்கு மன்னவன் மகிபாலர் சேகரன்
மகிமையொடு மேதினியை மாண்பாய்ப் புரப்போன்
தநுமிகு செகராச சேகர னெனும் பேர்
மண்மீது கொண்டவன் மநுவரிய சங்கிலி

மகாராசன் ஈண்டு
பொன்னாட்டிற் றவமைபெறு புனிதகன் னாடாம்
மன்னுபுகழ் யாழ்ப்பாண மருவு மாந்தர்க்குக்
கொண்டபெரு மன்போடு கொடுப்பனிச் செய்தி.

(நிறுத்திப் பறை அறைகின்றான்)

மக்கள் :

அஃதென்ன?

வள்ளுவர் தலைவன் :

அஃதெப்படி யென்றால்;

மன்னுமெம் நாட்டில்வாழ் மாண்புடைக் குடிகாள்!
துன்னியே புவியினிற் றுகளிலீர் வாழி,
அண்டியென் னவைக்களத் தளியுட னுமையான்
கண்டுசில செய்திகள் கழறிட விழைந்தேன்
அதனால்,
ஆருயிர் போலுமென் னன்புடை மாந்தர்காள்
நாளையெம் மவைக்களம் நாடுவீர் விழைந்தே.

நிறுத்திப் பறை அறைகின்றான்
(அதைக் கேட்டு)

முதலாம் ஆள் :

என்ன சங்கதியோ?

இரண்டாம் ஆள் :

ஏதோ பறங்கியரைப் பற்றி இருக்கலாம்.

மூன்றாம் ஆள் :

இருக்காது, பறங்கிதான் தொலைந்து விட்டானே. வேறென்னவாயிருக்கும்?

நான்காம் ஆள் :

சரி, நாளைக்குப் போய்ப் பார்க்கலாம் அரசன் அவைக்களத்தில்.

திரை

உறுப்பு III களம் 7

இடம்:

நல்லூர் அரசன் அவைக்களம்

[தனிநாயக முதலி, அடியாரக்கு நல்லான், இமையா ணன் ஆகியோர் தங்கள் வழக்கமான இடங்களில் அமர்ந்திருக்கின்றனர், பொதுமக்கள் அங்கு கூடி நிற்கின்றனர். யாவரும் அரசன் வரவை ஆவலோடு எதிர் பார்க்கின்றனர்.)

கட்டியம்:

(அங்கு வந்து) இராசாதிராசன், இராசமார்த் தாண்டன், இராசகம்பீரன், சங்கிலி மகா ராசா சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை, பராக்கு.

[அதைக் கேட்டதும் அங்குள்ளோர் யாவரும் அவைக் களவாயிலை நோக்குகின்றனர். சங்கிலி அரச உடையின் றிப் பொதுவான உடையில் வருகின்றான். அரசன் அங் ஙனம் வருவதைக் கண்டதும் அங்குள்ளோர் யாவரும் மிகுந்த வியப்பெய்தி நிற்கின்றனர். அவைக்களத்தே அமர்ந்திருந்தோர் எழுந்து பணிவோடு நிற்கின்றனர். சங்கிலிஅரசுகட்டிலின் அருகு போய் நிற்கின்றான். வீர மாப்பாணனும் வந்து நிற்கின்றான்.]

சங்கிலி:

(நின்ற வண்ணம் தலை சாய்த்து அவைக்களத்தாரையும் அங்கு கூடி நிற்கும் மக்களையும் வணங்கி விட்டு) அவைக் களத்துப் பெரியோரே! அன்பார்ந்த முது குடிமக்களே! நாட்டை நீதி முறை தவறாது ஆளுதலே அரசராயினோர் கடன். அதற் கிணங்கவே நானும் பெருமையும் தொன்மை யும் வாய்ந்த இவ் யாழ்ப்பாண இராச்சியத்

தைப் பல ஆண்டுகளாக என்னால் இயன்ற வரை நீதி வழுவாது ஆண்டு வந்துள்ளேன், பெருங்குடி மக்களே! உங்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றதினாலேயே யாழ்ப் பாணத்தரசன் ஆணைச்சக்கரம் செவ்வனே உருண்டு செல்லக்கூடியதாக இருக்கின்றது. 'பகைமை என்னும் சேற்றில் அகப்பட்டுத் தவிக்கிறேன் உதவி புரியுங்கள்' என அலறினேன். அதனைக் கேட்டு உள்ளம் உவந்து எனக்கு உதவி புரிந்தீர்கள்.

வாழ்க நும் தடந்தோள்!

அவைக்களத்துப் பெரியோரே! அரசாங்க அலுவல்களில் எனக்குத் துணை புரிபவர் போல நடித்த சான்றோர் பலரை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் எத்தகைய சான்றோர் களென்பதையும் தம் சூழ்ச்சிகளால் எம் நாட்டை விற்று எவ்வகையில் பெருமை யடைந்திருக்கிறார்களென்பதையும் உல கறிய எடுத்துக்கூறுவதற்கே இந்த அவையை முரசறைந்து கூட்டினேன். நான் கூறப் போகும் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித் துக் கேளுங்கள். உங்கள் அமைச்சர்கள் இராச விசுவாசம் பொங்கிவழியும் அமைச்சப் பெருந்தகையினர்-ஆற்றிய அரும்பணிகளை நீங்கள் கட்டாயம் அறிதல் வேண்டும். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறுகின் றேன், கேளுங்கள்.

முதலாவதாக யாழ்ப்பாண நாட்டின் பண் டைப் பகைவராகிய வன்னியரை எமக்கு மாறாகக் கிளம்பும்படி தட்டிவிட்டார்கள். இரண்டாவதாக நமது இராச்சியத்திலே உள்நாட்டுக் கலகங்களை மூட்டுதற்குச் சூழ்ச்சி புரிந்தார்கள். அம்முயற்சிகள் யாவும் கல்லிலே போட்ட மட்கலம் போலத் துண்டு துண்டாகச் சிதறிப் போயின; அங்ஙனம் சிதறவே 'அஞ்சி வந்தோம், தஞ்சம், எம் மைக் காத்தருள்க' என்று கூறிப் பறங்கிய

ரின் காலிலே போய் வீழ்ந்தார்கள். அதன் பின் நடந்ததை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் கபட நாடகத்தால் சொல்லொணுத் துன்பம் அடைந்தோம். ஆயினும் ஒருவாறு பறங்கியரைத் துரத்தி விட்டோம். இப்பெரியார்கள் செய்த சூழ்ச்சியைப் பற்றி நான் மனம் போனவாறு கூறுகின்றேன் என எண்ணவேண்டாம். இதோ என் கையிலிருக்கும் ஓலைச் சுருளே யாவற்றிற்கும் சான்று. இது பரநிருபசிங்கர் அப்பாமுதலிக்கு எழுதியது. பறங்கியருக்கு எம்மையும் எமது சுதந்திரத்தையும் விற்பதற்கும், வன்னியரை அதற்குப் பக்கபலமாக அமைப்பதற்கும் இவர்கள் செய்த சூழ்ச்சிகள் இதில் அடங்கியுள்ளன. நீங்களே படித்துப் பாருங்கள். (*ஓலையைத் தனிநாயக முதலியின் முன்னே வைக்கிறன்.*)

யாழ்ப்பாணத்தரசு இப்பொழுது மீண்டும் வெற்றியுடனும் பெருமையுடனும் தலை தூக்கி நிற்கின்றது. இங்ஙனமே இவ் அரசு என்றும் பெருமையோடு திகழவேண்டும் என்பதே எனது வேணவா. நாட்டில் அமைதி நிலவும் இவ்வேளையில் நான் நெடுங்காலமாக என் மனதிற் கொண்டிருந்த ஆவலை நிறைவேற்ற விரும்புகின்றேன். அதற்கு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன். இப்பொழுதே இவ்வரசபாரத்தை என் தலையினின்றும் இறக்கி ஓய்வெடுக்கின்றேன். எனக்குப் பதிலாக என் மகன் புவிராச பண்டாரத்தை அரசனுக ஏற்றுக் கொள்ளுங்கள். யாழ்ப்பாண அரசு நீடூழி வாழ்க!

**[சங்கிலி போகின்முன். அங்குள்ளோர் யாவரும் திகைத்துப் போய் நிற்கின்றனர். தனிநாயகமுதலியும் வீரமாப்பாணனும் தலை குனிந்த வண்ணம் வெளியே போகின்றனர். ஏனைய மந்திரி பிரதானிகள் அவரைத் தொடர்கின்றனர். அங்கு நின்ற பொதுமக்கள் கலங்கி நிற்கின்றனர்.]**

**முதலாம் ஆள்:**

எங்கள் அரசன் போய்விட்டான். எங்களைத் தாய் போற் பாதுகாத்த பெருந்தகை போய்

விட்டான். இந்நாட்டை இனி யார் அவனைப் போல ஆளப் போகின்றார்?

இரண்டாம் ஆள் :

தமிழரைக் காத்த தமிழர் பெருமகன்.

மூன்றும் ஆள் :

இனி எம் கதி என்னவாகுமோ? தெற்கே வன்னியரும் சிங்களவரும்; வடக்கே நாயக்கர்; நாலாபக்கமும் பறங்கியர்; இந்நிலையில் காலைக் கையை நீட்டி உறங்குவதெப்படி?

நான்காம் ஆள் :

நிறுத்து. என்ன பயம். தமிழன் வீரமரபில் தோன்றியவன். அச்சம் என்பதை அறியான். போர் என்றால் தோள் புடைத்துக் களித்து நிற்பவன். பொருதுவதற்குப் பகைவரில்லா விட்டால் உள்ளம் கவலுகின்றவன். அம்மரபிலே தோன்றிய யாழ்ப்பாணத்தவரும் பகைவருக்கு அஞ்சுபவரோ?

முதலாம் ஆள் :

உண்மைத் தமிழன் தன் நலம் கருதி யாரை யாவது பின் சென்று தொழுது நின்றவனோ? யாழ்ப்பாண நாட்டுக்கு வந்த கேடு யாரால் வந்தது? இத்துரோகிகளே யாழ்ப்பாணத்துக்கு வந்த அல்லல் யாவற்றிற்கும் காரணர்.

இரண்டாம் ஆள் :

நீ சொல்வது உண்மையே. இவர்கள் போன்றவரால் யாழ்ப்பாணம் இன்னும் என்ன என்ன இன்னலை எய்துமோ? பறங்கியருக்கு மட்டுமன்று; இன்னும் எத்தனை சாதியினருக்குத் தம் நலத்திற்காக எம் நாட்டை விற்க இருக்கின்றாரோ? நாம் அறியோம். என்றாலும் (*தன் கையை இறுகப் பொத்தி உயர்த்திக்காட்டி*) எமது உடலில் ஒரு துளி இரத்தம் இருக்கு மட்

டும்எமது நாட்டைப் பிறர் கையிற் போக விடமாட்டோம். இந்நயவஞ்சகரை முறியடிப்போம். இறுதியில் வெற்றி காண்போம்.

*வீரத்தமிழன் வாழி.*

*யாழ்ப்பாணம் வாழி.*

திரை

## மூன்றும் உறுப்பு முற்றும்.

நாமகள் நலன்கள் நல்க நல்லிசைப் புலவ ரோங்கப்
பூ மகள் பொலிந்து பொங்கப் பொருவில்யாழ்ப் பாணம்
வாழ்கக்
கோமகன் சிங்கையார்யன் குரிசில்சங் கிலிதன்கூத்தை
ஏமமாய்ப் பார்ப்போர் கேட்போர் இன்புற்று வாழ்க மாதோ.

சங்கிலி முற்றும்.

சுதந்திரன் அச்சகம்
194 A. தட்டா தெரு
கொழும்பு-12,

இந்நூலாசிரியர் இயற்றிய
வேறு நூல்கள்:

காதலி ஆற்றுப்படை

நானுடகம்

மாணிக்க மாலை

இருநாடகம்

பூஞ்சோலை

வீரமங்கையர்

வாழ்க்கையின் வினோதங்கள்

இலங்கைவாழ் தமிழர் வரலாறு

